தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## பருத்தியில் மகசூல் இழப்பைத் தடுக்க செய்ய வேண்டியது என்ன?



ஒவ்வொரு பூச்சிக்கும் தனித்தனியே நிர்வாகம் செய்வதைவிட ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகம் செய்வதன் மூலம் பருத்தியைத் தாக்கும் பூச்சிகளை திறன்பட கட்டுப்படுத்தலாம். எனவே, பூச்சிக் கட்டுப்பாட்டு முறைகளைக் கடைப்பிடித்து பருத்தியில் ஏற்படும் பூச்சி நோய் தாக்குதலைக் கட்டுப்படுத்துவதன் மூலம் பருத்தி விவசாயிகள் சாகுபடி செலவைக் குறைத்து அதிக மகசூல் பெறலாம்.

**திருநெல்வேலி,**

பருத்திப் பயிரில் பூச்சிகள் தாக்குதலைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகளைத் தவறாமல் பின்பற்றுவதன் மூலம் மகசூல் இழப்பைத் தவிர்த்து கூடுதல் லாபம் பெறலாம்.

**இளம்பருவம் (விதைத்த 50 நாள்கள் வரை)**: இப் பருவத்தில் தத்துப்பூச்சி, அசுவினி தாக்குதல் தென்படும். தத்துப்பூச்சி தாக்குதலால் பருத்தி இலைகள் மஞ்சள் நிறமாகி, ஓரங்கள் மடிவதுடன் இலைகள் உதிரும். அசுவினி தாக்கப்பட்ட பயிர்களின் தளிர் இலைகள் சிறிதாக தோன்றுவதுடன் இலைகள் கிண்ணம்போலக் குவியும். தத்துப்பூச்சி, அசுவினியின் தாக்குதலைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு

மீத்தைல் டெமட்டான் 200 மி.லி. அல்லது வேப்பங்கொட்டைச் சாறு 5 சதவீதம் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றைத் தெளிக்கலாம்.

**காய்ப் புழுக்கள்:** பருத்தியில் பூ, பிஞ்சுகள் உருவாகி காய் பிடிக்கும் தருணத்தில் காய்ப் புழுக்களின் தாக்குதல் காணப்படும். புள்ளிக் காய்ப் புழு, பச்சை அல்லது அமெரிக்கன் காய்ப் புழு, இளஞ்சிவப்புக் காய்ப் புழு போன்ற 3 வகை காய்ப் புழுக்கள் பருத்திக் காய்களைத் தாக்கி பயிருக்கு சேதம் விளைவிக்கும். புள்ளிக் காய்ப் புழுக்கள் பிஞ்சுக் காய்களைத் துளைத்தால் அவை செடியிலிருந்து உதிர்ந்துவிடும். முற்றுகிற காய்களைக் குடைந்து தின்பதால் உள்ளே இருக்கும் பஞ்சின் தரம் குறைந்து மகசூலும் குறையும். பச்சை அல்லது அமெரிக்கன் காய்ப் புழு, பயிர்கள் பூக்கும் மற்றும் காய்க்கும் பருவத்தில் தாக்குதலை ஏற்படுத்தும். இவை காய்களுக்குள் தலையை மட்டும் நுழைத்து பஞ்சு, விதைகளைக் குடைந்து தின்னும்.

**காய் முதிரும் பருவங்கள்:** இப் பருவத்தில் இளஞ்சிவப்பு காய்ப் புழுக்கள் பயிரைத் தாக்கும். புழுக்கள் தாக்கப்பட்ட பயிர்களில் மலர அல்லது விரிய வேண்டிய பூக்களின் இதழ்கள் விரியாமல் நுனிகள் ஒன்றுடன் ஒன்று ஒட்டப்பட்டு ரோஜா மலரின் மொட்டுகள்போல தோற்றம் அளிக்கும். அவ்வாறு உள்ள பூக்களைப் பிரித்துப் பார்த்தால் இளஞ்சிவப்பு காய்ப் புழு, மகரந்தம், சூல்பை ஆகியவற்றைத் தின்று சேதப்படுத்தியிருக்கும். இதைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு குளோர்பைரிபாஸ் 800 மில்லி அல்லது குயினால்பாஸ் 800 மி.லி., பாசலோன் ஒரு லிட்டர் அளவில் தேவையான நீருடன் கலந்து தெளிக்கலாம்.

**தண்டு மூக்கு வண்டு அல்லது மோதிரப் புழு:** இப் புழுக்கள் பருத்தி விதைத்த 25 நாளிலிருந்து 90 நாள்கள் வரை தாக்குதலை ஏற்படுத்துவதுடன், அடித்தண்டில் வீக்கம் காணப்படும். செடிகளின் இடையே களை எடுக்கவோ, உரமிடவோ, நீர் பாய்ச்சும்போதும், பலத்த காற்று வீசும்போதும் தண்டின் வீங்கிய இடத்தில் செடிகள் முறிந்து சேதம் விளைவிக்கும். இதைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு 12 கிலோ கார்போபியுரான் குருணை மருந்தை செடிகளுக்கு அருகே இட்டு மண் அணைக்கலாம். அல்லது ஒரு லிட்டர் குளோர்பைரிபாஸ் மருந்தை தேவையான அளவு நீருடன் கலந்த கரைசலை தண்டுகள் நன்கு நனையும்படி தெளிப்பதன் மூலம் கட்டுப்படுத்தலாம்.

**காய் பிடிக்கும் மற்றும் முற்றும் பருவங்கள்**: இப் பருவத்தில் புரோடீனியா புழுக்கள் பருத்தியில் தாக்குதல் ஏற்படுத்தும். புழுக்கள் தாக்கிய பயிரின் இலைகள் சல்லடைபோல் அரிக்கப்பட்டிருக்கும். இப் புழுக்களைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு குயினால்பாஸ் 800 மில்லி, குளோர்பைரிபாஸ் 800 மில்லி இவற்றில் ஏதேனும் ஒன்றைத் தெளிக்கலாம்.

**ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகம்**: ஒவ்வொரு பூச்சிக்கும் தனித்தனியே நிர்வாகம் செய்வதைவிட ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகம் செய்வதன் மூலம் பருத்தியைத் தாக்கும் பூச்சிகளை திறன்பட கட்டுப்படுத்தலாம். எனவே, பூச்சிக் கட்டுப்பாட்டு முறைகளைக் கடைப்பிடித்து பருத்தியில் ஏற்படும் பூச்சி நோய் தாக்குதலைக் கட்டுப்படுத்துவதன் மூலம் பருத்தி விவசாயிகள் சாகுபடி செலவைக் குறைத்து அதிக மகசூல் பெறலாம். மேலும், விவரங்களுக்கு அந்தந்தப் பகுதியில் உள்ள வேளாண் விரிவாக்க மையங்களையும், வேளாண் அலுவலர்களையும் தொடர்பு கொள்ளலாம்.

## மானாவாரி நிலங்களில் அதிக மகசூல் பெற...

.

**தருமபுரி,**

ஊட்டமேற்றிய தொழு உரங்களைத் தயாரித்து மானாவாரி நிலங்களில் பயன்படுத்தினால் அதிக மகசூல் பெறலாம்.

இதுகுறித்து வேளாண்மை இணை இயக்குநர் கே.மோகன் கூறியது:

தருமபுரி மாவட்டத்தில் 60 சதவிகித செம்மண் உள்ளன. இவ்வகை நிலங்களில் மணிச்சத்து பற்றாக்குறை அதிகளவில் காணப்படுகிறது. இதை நிவர்த்தி செய்து, மணிச்சத்தை எளிதில் பயிருக்கு கிடைக்கச் செய்வதற்கும், மானாவாரி நிலங்களில் அதிக மகசூல் பெற மணிச்சத்தை தொழு உரத்துடன் ஊட்டமேற்றி பயிர்களுக்கு இடுவது அவசியமாகும்.

இவ்வாறு இடப்படும் தொழு உரம் ஊட்டமேற்றிய தொழு உரமாகும். தற்போது தருமபுரி மாவட்டத்தில் அனைத்து வட்டாரங்களிலும் ஓரளவு பரவலாக கோடைமழை பெய்துள்ளது. மாவட்டத்தில் பாசன நீர் பற்றாக்குறை நிலவும் சூழ்நிலையில் விவசாயிகள் கோடை உழவு மேற்கொண்டு பெய்கின்ற மழைநீரை வீணாக்காமல் காப்பதன் மூலமும், ஊட்டமேற்றிய தொழு உரம் இடுவதன் மூலமும் விவசாயிகள் மானாவாரியில் அதிக மகசூல் பெறலாம்.

ஊட்டமேற்றிய தொழு உரம் தயாரிக்க நன்கு மட்கிய 300 கிலோ தொழு உரத்துடன் ஒரு ஏக்கருக்கு தேவையான மணிச்சந்தை சூப்பர் பாஸ்பேட் உரமாக நன்கு கலக்கி குவியலாக அமைக்க வேண்டும். இந்த குவியல் சிறிது மேடான மழைநீர் தேங்காத நிழலான இடத்தில் அமைக்க வேண்டும்.

தேவையான அளவு நீர் தெளித்து குவியலை ஈரமாக்கியவுடன் களிமண் அல்லது சாணம் கொண்டு நன்றாக பூசி மெழுக வேண்டும். குவித்த 15 நாள்கள் கழித்து கிளறிவிட்டு, ஈரப்பதம் குறைவாக இருந்தால் சிறிதுநீர் தெளித்து நன்கு மூடி வைக்க வேண்டும். 30 நாள்களுக்கு பிறகு, விதைப்பின் போது பரிந்துரை செய்யப்படும் தழை, சாம்பல் சத்து தரவல்ல உரங்களை கலந்து உழவு சாலில் இட வேண்டும்.

இப்படி தயாரிக்கப்பட்ட ஊட்டமேற்றிய தொழு உரம் இடுவதன் மூலம் பயிர்களுக்கு இடப்படும் மணிச்சத்து எளிதாகவும், முழுமையாகவும் பயிர்களுக்கு கிடைக்கிறது.

பயிர்களின் வேர் வளர்ச்சி அதிகரிக்கிறது. வறட்சியைத் தாங்கி பயிர்கள் வளர்கிறது. திடமான மணிகள் கிடைக்க உதவுகிறது. மானாவாரி பயிர்களில் மகசூல் அதிகரிக்கிறது.

இத்தகைய பயன்கள் நிறைந்த ஊட்டமேற்றிய தொழு உரம் இடுவதன் மூலம் விவசாயிகள் மானாவாரியில் அதிக மகசூல் பெறலாம் என்றார் அவர்.

## வேளாண் விஞ்ஞானிகள் மாநாடு இன்று தொடக்கம்

**கோவை,**

வேளாண் விஞ்ஞானிகள் மற்றும் விரிவாக்க அதிகாரிகள், அலுவலர்கள் மாநாடு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இன்று தொடங்குகிறது.

இம்மாநாட்டின் முக்கிய நோக்கம் பல்கலைக்கழகத்தின் புதிய தொழில்நுட்பங்கள் உழவர் சமுதாயத்திற்கும் மற்றும் பிற பயனீட்டாளர்களுக்கும் தேவையின் அடிப்படையில் வழங்குவதாகும்.

தமிழக அரசின் வேளாண்மைத்துறை உற்பத்தி ஆணையர் மற்றும் செயலருடன் வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண் பொறியியல் துறை, விதை சான்றளிப்பு துறை, வேளாண் விற்பனைத் துறை, சர்க்கரைத் துறை, பட்டுப்புழுவியல் மற்றும் வனவியல் துறை அலுவலர்கள் பங்கேற்று தமிழகத்தில் வேளாண்மை முன்னேற்றத்திற்கு செயல்படுத்தப்பட வேண்டிய திட்டங்கள் குறித்து பேச உள்ளனர்.

இப்பல்கலைக்கழகம் சார்பில் பல்வேறு துறைகளுடன் முன்கூட்டியே கலந்துரையாடல் நிகழ்த்தி அதன் மூலம் பெறப்பட்ட கோரிக்கைகளை மாநாட்டில் வைக்க உள்ளது.

மாநாட்டில் சுமார் 300 பேர் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. வேளாண் தொழிற்சாலைகள், முன்னோடி விவசாயிகள், முன்னோடி வங்கிகள் அழைக்கப்பட்டு அவர்களின் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளப்பட உள்ளன.

நிறைவு விழா:

மாநாட்டு நிறைவு விழா வெள்ளிக்கிழமை மாலை நடைபெற உள்ளது. இதில் வேளாண்துறை அமைச்சர் அக்ரி எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி, தமிழக நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதித்துறை அமைச்சர் எஸ்.பி.வேலுமணி, சட்டப்பேரவைத் துணைத் தலைவர் பொள்ளாச்சி வ.ஜெயராமன், வேளாண்மை உற்பத்தி ஆணையர் சந்தீப் சக்சேனா, துணைவேந்தர் கு.ராமசாமி உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

## நாளை முதல் கால்நடைகள் மருத்துவ முகாம்

**திருவள்ளூர்,**

திருவள்ளூர் மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை மற்றும் சனிக்கிழமை (மே 30, 31) ஆகிய இரண்டு தினங்களுக்கு கறவைப் பசுக்கள் மற்றும் வெள்ளாடுகளுக்கான இனப்பெருக்க மருத்துவப் பரிசோதனை மற்றும் குடற்புழு நீக்க முகாம் நடைபெறவுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் கொ.வீரராகவராவ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

தமிழக முதல்வரால் கடந்த 2011-ஆம் ஆண்டு செப்டம்பர் 15-ஆம் தேதி திருவள்ளூர் மாவட்டத்தில் தொடங்கப்பட்ட விலையில்லா கறவைப் பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள் வழங்கும் திட்டங்களில் ஒரு பயனாளிக்கு 4 ஆடுகள் வீதம், 31 மாவட்டங்களில் 4 லட்சம் பயனாளிகளுக்கு 16 லட்சம் வெள்ளாடுகள் வழங்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் மீண்டும் ஒரு வெண்மை புரட்சியை உருவாக்கும் வகையில் 21 மாவட்டங்களில் 36 ஆயிரம் பயனாளிகளுக்கு 36,000 கறவைப் பசுக்களும் 2011-ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டுள்ளது.

விலையில்லா கறவைப் பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள் திட்டப் பயனாளிகள் தங்களது கால்நடைகளைக் கொள்முதல் செய்த பிறகு நன்கு பராமரிக்க வேண்டும் என தமிழக அரசு வலியுறுத்தியுள்ளது.

இதையொட்டி திருவள்ளூர் மாவட்டத்தில் கடந்த இரண்டரை ஆண்டுகளில் வழங்கப்பட்டுள்ள 2 ஆயிரத்து 850 கறவைப் பசுக்களும், 56 ஆயிரத்து 936 வெள்ளாடுகளுக்கும் மே 30, 31 ஆகிய இரு தினங்கள் மருத்துவ முகாம் நடைபெறவுள்ளது.

இதில் கறவைப் பசுக்களுக்கு இனப்பெருக்க மருத்துவப் பரிசோதனை, வெள்ளாடுகளுக்கு குடற்புழு நீக்க சிகிச்சை ஆகியவை நடைபெறவுள்ளது. எனவே திட்ட பயனாளிகள் மட்டுமல்லாமல் அனைத்து விவசாயிகளும் தங்களது கால்நடைகளை இம்முகாமுக்கு அழைத்து வந்து பயனடைய வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மழையுடன் தொடங்கி முடிந்த அக்னிநட்சத்திரம்

**மதுரை,**

மதுரை நகர் மற்றும் ஊரகப்பகுதிகளில் மழையுடன் தொடங்கிய அக்னிநட்சத்திரம் மழையுடனே புதன்கிழமை நிறைவுற்றது.

தமிழகத்தில் கடந்த 4-ஆம் தேதி அக்னி நட்சத்திரம் ஆரம்பமானது. அக்னி நட்சத்திரத்துக்கு முன்பு கடும் வெயில் கொளுத்தியது. இதனால் அக்னி நட்சத்திர வெப்பத்தின் தாக்கம் அதிகமிருக்கும் என மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால், அக்னி நட்சத்திரத்துக்கு முதல் நாளும், அக்னி நட்சத்திரத்தன்றும் மழை பெய்ததால் வெயில் தாக்கம் குறைந்திருந்தது.

அக்னி நட்சத்திரம் புதன்கிழமை நிறைவுற்றது. புதன்கிழமை காலை முதல் மாலை வரையில் வெயில் தாக்கம் அதிகமிருந்த நிலையில், மாலையில் ஆங்காங்கே இடி, மின்னலுடன் மழை பெய்தது.

விரகனூர் உள்ளிட்ட ஊரகப்பகுதிகளில் சாலையில் நீர் பெருக்கெடுத்து ஓடும் அளவுக்கு மழை பெய்தது.

நகரில் பெரியார் பஸ் நிலையம் உள்ளிட்ட பல பகுதிகளில் தூறல் இருந்தது. மழையால் இரவில் குளிர்ந்த காற்று வீசியது.

## உத்தமபாளையத்தில் ஆலங்கட்டி மழை

**உத்தமபாளையம்,**

உத்தமபாளையத்தில் புதன்கிழமை மதியம் ஆலங்கட்டி மழை பெய்ததால், அப்பகுதி மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

மே 4 ஆம் தேதி அக்னி நட்சத்திரம் துவங்கி, புதன்கிழமையுடன் நிறைவு பெற்றது. அக்னி நட்சத்திரம் துவக்கத்தின்போதும், முடியும்போதும் மழை பெய்துள்ளது. இதற்கு இடைப்பட்ட காலத்தில் வெப்பத்தின் தாக்கம் பொதுமக்களை வாட்டி வதைத்தது.

இந்நிலையில், புதன்கிழமை மதியம் உத்தமபாளையம் மற்றும் சுற்றுப் பகுதிகளில் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. பின்னர், மதியம் 2 மணியளவில் திடீரென பெய்யத் தொடங்கிய மழை, ஒரு மணி நேரம் வரை நீடித்தது. சிறிது

நேரத்தில் ஆலங்கட்டியுடன் மழை பெய்தது. நீண்ட காலத்துக்குப் பிறகு பெய்த ஆலங்கட்டி மழையை கண்ட பலரும் ஆச்சரியப்பட்டனர். சிறுவர்கள் மழையை பொருட்படுத்தாது, ஆலங்கட்டியை கையில் எடுத்து விளையாடி மகிழ்ந்தனர்.

இந்த மழையினால், வெப்பம் தணிந்தது. பொதுமக்களும், விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்தனர்.

**வேளாண் தொழில்நுட்பக் கல்லூரி சார்பில் நாட்டு நலப்பணித் திட்ட முகாம்**

**பெரியகுளம்,**

பெரியகுளம் அருகே குள்ளப்புரத்தில் உள்ள வேளாண் தொழில்நுட்பக் கல்லூரி சார்பில், நாட்டு நலப்பணித் திட்ட சிறப்பு முகாம், பொம்மிநாயக்கன்பட்டி கிராமத்தில் நடைபெற்று வருகிறது.

தொடர்ந்து 7 நாள்கள் நடைபெறும் இம் முகாமின் தொடக்க விழாவுக்கு, கல்லூரி முதல்வர் கே. சிவசுப்பிரமணியம் தலைமை வகித்தார். பொம்மிநாயக்கன்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் எஸ். அப்பாஸ், துணைத் தலைவர் பிந்துபிச்சை ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கல்லூரி நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் டி. விஜய்பாபு வரவேற்றார்.

கல்லூரி இணை இயக்குநர் வி. மோகன், நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் பி. குஞ்சம்மாள் மற்றும் கல்லூரிப் பேராசிரியர்கள் மற்றும் கிராம மக்கள் ஆகியோர் திரளாகக் கலந்துகொண்டனர்.

கல்லூரியின் இரண்டாம் ஆண்டு நாட்டு நலப்பணித் திட்ட மாணவ, மாணவிகள் 117 பேர் இம்முகாமில் கலந்துகொண்டு, கோயில் மற்றும் பள்ளி வளாகம் சுத்தம் செய்தல், மாணவர்களுக்கு கணினி பயிற்சி, மகளிர் சுயஉதவிக் குழுவினருக்கு பல்வேறு வகையான தொழில்நுட்பப் பயிற்சிகள் அளித்தல், மது மற்றும் புகைப்பிடித்தலுக்கு எதிரான விழிப்புணர்வுப் பேரணி நடத்துதல், பொது மற்றும் கால்நடை மருத்துவ முகாம்கள் நடத்துதல் உள்பட பல்வேறு வகையான சமூகப் பணிகளை மேற்கொள்கின்றனர்.

## அக்னி நட்சத்திர நிறைவு நாளில் சிவகங்கையில் பலத்த மழை

**சிவகங்கை,**

அக்னி நட்சத்திரம் என்படும் கத்திரி வெயில் நிறைவு நாளன்று சிவகங்கையில் இடி, மின்னல், காற்றுடன் பலத்த மழை பெய்தது.

அக்னி நட்சத்திரம் கடந்த மே மாதம் 4ஆம் தேதி துவங்கியது. வறண்ட மாவட்டமான சிவகங்கையில் வெயிலின் தாக்கம் கடுமையாக இருக்கும் என பொது மக்களும், விவசாயிகளும் அஞ்சிய நிலையில் துவக்க நாளிலேயே 25 மிமீ மழை பெய்தது. அத்துடன் தொடர்ந்து 4 நாள்கள் மழை நீடித்ததன் காரணமாக ஊருணிகள், கண்மாய்களில் நீர் தேங்கியது.

இது கால்நடைகளின் குடிநீர்த் தேவையை சற்று பூர்த்தி செய்வதாக அமைந்தது.

தொடர் மழையின் காரணமாக மாவட்டம் முழுவதிலும் சுமார் 170 மிமீ மழை கிடைத்துள்ளது. இது கோடை வெயிலின் வெப்பத்தைக் குறைத்தால் பொது மக்களும், மழையின் காரணமாக உழவுப் பணியினைத் துவக்க விவசாயிகளுக்கு நம்பிக்கையையும், கால்நடை விவசாயிகளுக்கு மகிழ்ச்சியையும் தந்துள்ளது. அக்னி நட்சத்திரம் நிறைவு பெற்ற நாளான புதன்கிழமை வானம் இயல்பான நிலையில் இருந்தது. மாலை சுமார் 4.10 மணி அளவில் பலத்த இடி, மின்னல் மற்றும் காற்றுடன் கூடிய பலத்த மழை சிவகங்கையில் பெய்யத் துவங்கியது. சுமார் ஒருமணி நேரம் பெய்த மழையின் காரணமாக நகரின் தாழ்வான பகுதிகளிலும், வடிகால் வசதி முறையாக இல்லாத சாலைகளில் கழிவு நீரோடு சேர்ந்து மழைநீர் வெள்ளம் போல ஓடியது.

பலத்த காற்று வீசியதால் மின்சார விநியோகம் தடைபட்டது. சிவகங்கை - மானாமதுரை சாலையில் அம்பேத்கர் சிலை அருகே பலத்த காற்று காரணமாக மரங்கள், மின்கம்பங்கள் சரிந்து விழுந்தன.

கார் மீது விழுந்த மரம்: மதுரை மாவட்டம் மேலூரிலிருந்து சிவகங்கை மாவட்டம் சுந்தரநடப்புக்கு மேலூரைச் சேர்ந்த திருப்பதி என்பவர் வாடகை காரினை ஓட்டி வந்த போது அம்பேத்கர் சிலை அருகே காரின் மீது மின்கம்பம் விழுந்தது. மின்சார விநியோகம் தடைபட்டு இருந்ததால் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது.

## நாளை கால்நடைகளுக்கு மருத்துவப் பரிசோதனை

**சிவகங்கை,**

சிவகங்கை மாவட்டத்தில் வெள்ளி (மே 30) மற்றும் சனிக்கிழமைகளில் கறவை பசுக்கள், வெள்ளாடுகள், செம்மறி ஆடுகளுக்கான இனப்பெருக்க மருத்துவ பரிசோதனை மற்றும் குடற்புழு நீக்க முகாம் நடைபெற உள்ளதாக மாவட்ட ஆட்சியர் வே. ராஜாராமன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு விவரம்: கடந்த 2011ஆம் ஆண்டு தமிழக அரசு வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ள பெண்களின் வாழ்வாதாரத்தை அதிகரிக்கும் வகையில் ஒரு பயனாளிக்கு 4 வெள்ளாடுகள் அல்லது செம்மறி ஆடுகள், வெண்மைப் புரட்சியை ஏற்படுத்தும் வகையில் கறவைப் பசுக்களை வழங்கியது.

இதன்படி சிவகங்கை மாவட்டத்தில் 3,501 பயனாளிகளுக்கு 14,404 விலையில்லா கால்நடைகள் வழங்கப்பட்டன. பயனாளிகளை ஊக்கப்படுத்தும் நோக்கில் 2011-12, 2012-13ல் கால்நடைகளை சிறப்பாக பராமரித்தவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து சிவகங்கை மாவட்டத்தில் மே 30 மற்றும் 31ஆம் தேதிகளில் விலையில்லா கால்நடைகளுக்கு இனப்பெருக்க மருத்துவ பரிசோதனையும், குடற்புழு நீக்க முகாம் நடத்திட அரசு உத்தரவிட்டுள்ளது. விவசாயிகள் இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என ஆட்சியர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## மழையுடன் விடைபெற்ற அக்னி வெயில்

**திண்டுக்கல்,**

திண்டுக்கல் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் புதன்கிழமை மழை பெய்தது. அக்னி நட்சத்திரமும் விடை பெற்றது.

அக்னி நட்சத்திரம் கடந்த 4ஆம் தேதி தொடங்கிய போது, திண்டுக்கல் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் மிதமான மழை பெய்தது. அதேபோல், அக்னி நட்சத்திரம் முடியும் நாளான புதன்கிழமையும் (மே 28), மாவட்டத்தின் பெரும்பாலான இடங்களில் பலத்த மழையும், ஒரு சில இடங்களில் மிதமான மழையும் பெய்துள்ளது.

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் பகுதியில் புதன்கிழமை மாலை சுமார் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக இடி, மின்னலுடன் பலத்த மழை பெய்தது. இதனால், தாழ்வான பகுதிகளில் மழைநீர் வெள்ளமாக ஓடியது. அதேநேரத்தில், மாவட்டத்தின் எல்லையில் உள்ள பாளையம், டி.கூடலூர் உள்ளிட்ட சுற்றுப்புறப் பகுதிகளிலும் சிறிது நேரம் மழை பெய்தது.

குறிப்பிட்ட பகுதிகளில் மட்டுமில்லாமல் பழனி, நத்தம், ஒட்டன்சத்திரம், சின்னாளப்பட்டி, கொடைரோடு, செம்பட்டி, ஆத்தூர் மற்றும் சிறுமலை வனப்பகுதியில் இடி, மின்னலுடன் பலத்த மழையும் மற்றும் நிலக்கோட்டை, வத்தலகுண்டு, கொடைக்கானல் உள்ளிட்ட பகுதியில் மிதமான மழையும் பெய்தது.

திண்டுக்கல் நகரில் மாலை 6 மணி அளவில் தூறலுடன் தொடங்கிய மழை, இரவு 7 மணி முதல் பலத்த மழையாக பெய்யத் தொடங்கியது. கடந்த 21 நாள்களாக இடைவெளி விட்டு பெய்த மழையினால், ஓரளவு அக்னி வெயிலின் தாக்கம் குறைந்தது. அதே நேரத்தில், அக்னி நட்சத்திரம் முடிவடையும் போதும் பெய்துள்ள இந்த மழையால், அனைவரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

மாவட்டத்தில் நிலவி வந்த கடுமையான தண்ணீர் பிரச்னைக்கும், சமீபத்தில் பெய்த மழை தாற்காலிக தீர்வாக அமைந்தது. அதேபோல், வனப்பகுதியில் உள்ள குட்டைகளில் மழைநீர் தேங்கியதால், வன விலங்குகள் தண்ணீர் தேடி தோட்டங்களுக்குள் புகுவதும் தவிர்க்கப்பட்டுள்ளது.

## விருதுநகர் பகுதியில் இடி மின்னலுடன் பலத்த மழை

**விருதுநகர்,**

விருதுநகர் பகுதியில் பகல் முழுவதும் கடும் வெயில் அடித்த நிலையில், புதன்கிழமை மாலையில் இடி மின்னலுடன் பலத்த மழை பெய்தது. இதனால் பூமி குளிர்ந்தது. விருதுநகரில் புதன்கிழமை காலை முதல் மாலை 5 மணி வரையில் கடும் வெய்யில் வாட்டி எடுத்தது. ஆனால் மாலை 5.30 மணிக்கு வெயிலின் தாக்கம் படிப்படியாக குறைந்து கருமேகம் சூழ்ந்தது. வானில் மின்னல் வெட்டியது. பின்னர் சுமார் இரவு 7 அளவில் பலத்த இடி மின்னலுடன் மழை கொட்டத் தொடங்கியது. இதையடுத்து பகலில் சுட்டெரித்த வெயிலின் தாக்கம், மாலையில் பெய்த மழையால் தணிந்தது. இதனால் விருதுநகர் பகுதியில் குளிர்ச்சி நிலவியது.

## நீர்வள ஆதாரத்தை மேம்படுத்திட ரூ.2.25 லட்சம் சுழல் நிதி: ஆட்சியர் வழங்கினார்

**ராமநாதபுரம்,**

வேளாண்மைத்துறையின் சார்பில் நீர்வள ஆதாரத்தை மேம்படுத்திட 9 விவசாய சுய உதவிக் குழுக்களுக்கு ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் க.நந்தகுமார் ரூ.2.25லட்சம் சுழல்நிதியை செவ்வாய்க்கிழமை வழங்கினார்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் வேளாண்மைத்துறையின் சார்பில் நீர்வள ஆதாரத்தை மேம்படுத்தவும், மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை மூலமாக விவசாயிகளின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் பல்வேறு திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டம் ராமநாதபுரம் மாவட்டத்தில் கடலாடி, கமுதி, முதுகுளத்தூர், ஆர்.எஸ்.மங்கலம், நயினார்கோவில் மற்றும் பரமக்குடி ஆகிய வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் நிலம் உள்ள விவசாயிகள் பயன்பெறும் வகையில் பண்ணைக்குட்டைகள் அமைத்தல், ஊரணிகள் ஆழப்படுத்துதல் மற்றும் நீர்வரத்து கால்வாய்கள் சீரமைத்தல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் நிலமற்ற ஏழை விவசாயக் கூலித் தொழிலாளர்கள் மற்றும் பிற தொழில் செய்யும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு, வட்டி இல்லா கடன் ரூ.25 ஆயிரம் வீதம் சுழல் நிதியாகவும் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன்படி இத்திட்டத்தின் கீழ் 621 சுய உதவிக் குழுக்களுக்கு முதல்கட்டமாக ரூ.ஒரு கோடியே 55 லட்சத்து 25 ஆயிரம் மதிப்பில் வட்டி இல்லாத கடனாக சுழல்நிதி வழங்க ஆட்சியர் உத்தரவு பெறப்பட்டது. முதல்கட்டமாக 9 விவசாய சுய உதவிக் குழுக்களுக்கு தலா ரூ.25 ஆயிரம் வீதம் ரூ.2.25லட்சத்துக்கான காசோலையை ஆட்சியர் க.நந்தகுமார் வழங்கினார்.

இத்திட்டம் தற்போது துவக்கப்பட்டுள்ள நிலையில் ஒரு வார காலத்துக்குள் அந்தந்த நீர்வடிப்பகுதிகளின் சம்பந்தப்பட்ட ஊராட்சித் தலைவர்கள் மற்றும் நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையின் திட்ட அலுவலர், வேளாண்மை இணை இயக்குநர், வேளாண்மை துணை இயக்குநர் மூலமாக சுழல் நிதி வழங்கும் பணிகள் நடைபெறும். மேலும் இவ்வாறு வழங்கப்படும் சுழல்நிதி வட்டி ஏதும் இல்லாமல் எளிய தவணை முறையில் விவசாயிகளிடம் திரும்ப வசூலிக்கப்பட்டு மறுபடியும்

அதே பகுதிகளில் உள்ள வேறு சுய உதவிக் குழுக்களுக்கும் வழங்கப்படும் எனவும் ஆட்சியர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மண்டபம் கடல் மீன் ஆராய்ச்சி நிலையத்தில் மீனவர்களுக்கு சிறப்பு பயிற்சி

**ராமேசுவரம்,**

மண்டபம் மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிலையத்தில் புதியதாக அமைக்கப்பட்ட மீன் அருங்காட்சியகத்தை ஆராய்ச்சி நிலைய இயக்குநர் திறந்து வைத்து, மீனவர்களுக்கு கடல் மீன் வளர்ப்பு முறைகள் குறித்து பயிற்சியளித்தார்.

ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் மரைக்காயர் பட்டினம் மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிலையத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மீன் அருங்காட்சியத்தை மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிலைய இயக்குநர் டாக்டர்.கோபாலகிருஷ்ணன் திறந்து வைத்து பார்வையிட்டார்.

முன்னதாக ஆராய்ச்சி நிலையத்தின் சார்பாக கடலில் கூண்டு அமைத்து வளர்க்கப்பட்டு, அறுவடை செய்யப்பட்ட கோபியா மீன்கள் விற்பனையை தொடங்கி வைத்தார். தொடர்ந்து ராமேசுவரம், மண்டபம், பாம்பன் பகுதி மீனவர்களுக்கு மாற்றுத் தொழிலாக கடலில் கூண்டு அமைத்து மீன் வளர்க்கும் முறை பற்றி 10 நாள்கள் நடைபெறும் பயிற்சி முகாமை துவங்கி வைத்தார்.

பின்பு கோபாலகிருஷ்ணன் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியது: மன்னார் வளைகுடா, பாக்ஜலசந்தி கடல் பகுதியில் மீன்பிடி தொழில் செய்து வரும் மீனவர்களுக்கு கடலில் கூண்டு அமைத்து மீன் வளர்க்கும் முறையை எங்களது ஆராய்ச்சி நிலையம் பயிற்சியளித்து வருகிறது. மேலும் வண்ண மீன்களை கொண்டு அருங்காட்சியகம் இன்று துவங்கப்பட்டுள்ளது. அருங்காட்சியத்தில் 16 வகையான மீன் இனங்கள் உள்ளன.

இப்பகுதியில் வண்ணமீன்கள் குறைவாகவே வளர்த்து வருகின்றனர்.

இந்த வாய்ப்புகளை பயன்படுத்தி மீனவர்கள் வாழ்வாதாரத்தை பெருக்கி கொள்ள வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

## தடைக்காலம் இன்றுடன் முடிகிறது எல்லை தாண்டி மீன் பிடிக்க செல்ல வேண்டாம் என எச்சரிக்கை

**ராமேசுவரம்,**

மீன்பிடி தடைக்காலம் முடிவடைவதையடுத்து, மீனவர்கள் மே 31 ஆம் தேதி மீன் பிடிக்க கடலுக்குச் செல்கின்றனர். எல்லை தாண்டி மீன் பிடிக்கச் செல்ல வேண்டாம் என மீனவர் சங்கத் தலைவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழக கடலோரப் பகுதிகளில் மீன் இனப்பெருக்கத்துக்காக, ஏப்ரல் 15 ஆம் தேதி முதல் மே 29 ஆம் தேதி வரை 45 நாள்களுக்கு மீன்பிடி தடைக் காலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஏப்ரல் 15இல் அமல்படுத்தப்பட்ட மீன்பிடி தடைக்காலம் வியாழக்கிழமை (மே 29) நள்ளிரவோடு முடிவடைகிறது.

இதனைத் தொடர்ந்து, ராமேசுவரத்தில் உள்ள 750 க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் மீனவர்கள் சனிக்கிழமை (மே 31) முதல் மீன் பிடிக்கச் செல்கின்றனர்.

இந்த நிலையில், அனைத்து மீனவர் சங்க ஆலோசனைக் கூட்டம் புதன்கிழமை துறைமுகப் பகுதியில் விசைப்படகு மீனவர் சங்க தலைவர் மகத்துவம் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில், பல வருடங்களாக இலங்கைச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த தங்கச்சிமடத்தைச் சேர்ந்த ஐந்து மீனவர்களை விடுதலை செய்த இலங்கை அதிபர் ராஜபட்சவுக்கும், உறுதுணையாக இருந்த பிரதமர் நரேந்திர மோடிக்கும், பாதிக்கப்பட்ட மீனவர்கள் குடும்பத்துக்கு நிதி உதவி செய்து, இரண்டு வருடமாக மீனவர்களின் விடுதலைக்கு போராடிவந்த தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

மேலும் எல்லை தாண்டிச் செல்லும் மீனவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது. அரசால் தடை செய்யப்பட்ட இரட்டைமடி வலைகளைப் பயன்படுத்தி மீன் பிடிப்பவர்கள் மீது போலீஸ் நடவடிக்கை எடுத்து, படகு உரிமையாளர் மீது குற்ற நடவடிக்கை எடுக்க அரசிடம் வலியுறுத்துவது என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## <u>உரக்கடத்தல் பிரச்னைக்கு தீர்வு காண 5 பேர் கமிட்டி</u>

**கோவை,**

உர கடத்தல் உள்ளிட்ட பிரச்னைகளை தீர்க்க 5 பேர் கொண்ட கமிட்டி அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட வருவாய் அலுவலர் க.கற்பகம் உறுதி அளித்தார்.

கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறை தீர்ப்பு முகாம் புதன்கிழமை நடைபெற்றது. இதில், விவசாயிகள் சங்கத்தின் (கட்சி சார்பற்றது) பொதுச் செயலாளர் வழுக்குப்பாறை பாலு (எ) பாலசுப்பிரமணியம், பொதுச் செயலாளர் பி.கந்தசாமி ஆகியோர் பேசியது:

கோவையில் நீர் நிலைகளை ஆக்ரமித்து கட்டுமானங்களை எழுப்பி வரும் கல்வி நிறுவனம், தனியார் கட்டுமான நிறுவனங்களில் போக்கை நிறுத்த வேண்டும். மேலும், நீர் நிலைகளை ஆக்ரமித்து கட்டப்படும் கட்டுமானங்களை எழுப்புவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த கட்டுமானங்களை சீல் வைத்து இடிக்க வேண்டும்.

தொண்டாமுத்தூர் மற்றும் மத்வராயபுரம் பகுதியில் முறையற்ற வகையில் வணிக பயன்பாட்டுக்கு ஆழ்துளை கிணறுகள் மூலம் நீரை எடுத்து விநியோகம் செய்யும் குடிநீர் நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நீர் நிலைகள் ஆக்ரமிப்பு மற்றும் குடிநீர் நிறுவனங்களின் அத்துமீறல் போன்றவையால் நொய்யல் ஆற்றில் தண்ணீரே வராத நிலை உள்ளது. எனவே, இந்த நிலையைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கோவை மாவட்டத்தில் வறட்சி காலங்களில் 9,000 டன் உரங்கள் விநியோகம் செய்யப்பட்டதாகக் கணக்கு காண்பிக்கின்றனர். இந்த உரங்கள் சட்ட விரோதமாக கர்நாடகத்திற்கு கடத்தப்பட்டுள்ளது. இதற்கு உரக்கட்டுப்பாட்டு துறை அதிகாரிகளின் உதவியுடன் இந்த கடத்தல் அரங்கேறியுள்ளது. இதன் மூலம் பல கோடி பணம் அரசுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது.

ஏற்கெனவே தரம் குறைந்த உர விற்பனை மற்றும் அதிக விலைக்கு உரம் விற்பது போன்ற பிரச்னைகளை தொடர்ந்து தற்போது உரக் கடத்தல் சம்பவம் நடந்துள்ளது.

உரக்கடத்தலை தடுத்து, உர விநியோகத்தை சீரமைத்திட வணிகவரி, வருவாய்த்துறை, வேளாண்துறைகளை உள்ளடக்கிய 5 பேர் கொண்ட கமிட்டி ஏற்படுத்த வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

இதையடுத்து, மாவட்ட வருவாய் அலுவலர் க.கற்பகம், உர பிரச்னை தொடர்பாக 5 பேர் கொண்ட கமிட்டியை ஏற்படுத்த போதிய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

பத்திரப்பதிவு சார் பதிவாளர் அலுவலகத்தில் கிரய ஒப்பந்த பதிவுக்கு முன்பண தொகையில் 1 சதவீதம் என சட்டத்தில் உள்ளது. இதில் கிரய ஒப்பந்த நீட்டிப்பிற்கு எவ்வித பதிவுக் கட்டணமும் இல்லை. ஆனால், கிரய ஒப்பந்த நீட்டிப்பிற்கு கட்டணம் வசூலிக்கப்படக்கூடாது. இதற்கு ஆட்சியர் மூலம் பதிவுத்துறை இயக்குநரை அணுகி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழக அரசு வேளாண்மைத் துறையின் மூலம் வழங்கப்படும் மத்திய, மாநில அரசுகளின் மானியத் திட்டங்கள் தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருந்ததால் திட்டங்கள் அனைத்தும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

தேர்தல் நடந்து முடிவுகள் அறிவிக்கப்பட்டு, பதவியேற்பு விழாவும் நிறைவடைந்துவிட்டது. மேலும், பயிர்கள் அனைத்தும் அறுவடை செய்யப்பட்டு விட்டது. ஆனால் உரம், பூச்சி மருந்துகள், மானியத் தொகை இன்னும் வழங்கப்படவில்லை. மாவட்ட நிர்வாகம் வேளாண்மை மானியத் திட்டங்களை உடனடியாக விரைந்து வழங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளனர்.

## பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 46.16 அடி

**ஈரோடு,**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் புதன்கிழமை நிலவரபடி 46.16 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 917 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 150 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் இருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர்இருப்பு 3.5 டி.எம்.சி.

## கத்திரி வெயில் விடை பெற்றதால் வெயிலின் தாக்கம் குறைந்தது

**வேலூர்,**

கத்திரி வெயில் புதன்கிழமையுடன் நிறைவடையும் நிலையில், வேலூரில் வெப்பம் 99.5 டிகிரியாக பதிவானது.

அக்னி நட்சத்திரம் கடந்த 4-ம் தேதி தொடங்கியது. அதற்கு முன்பே வேலூரில் வெயிலின் தாக்கம் அதிகரித்து 100 டிகிரிக்கு மேல் உயர்ந்தது.

இந்நிலையில் கத்திரி வெயிலால் அதிகபட்சமாக கடந்த 16-ம் தேதி 108.3 டிகிரி வெயில் பதிவானது. வெப்ப சலனம் காரணமாக அவ்வப்போது மழை பெய்தாலும் கூட வெயிலின் தாக்கம் கத்திரி வெயிலின்போது 100 டிகிரிக்கு அதிகமாகவே இருந்தது.

புதன்கிழமை கத்திரி வெயில் நிறைவடைந்த நிலையில் வெப்பநிலை 99.5 டிகிரியாக பதிவானது.

பிற்பகலில் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. இருப்பினும் புழுக்கம் அதிகமாக இருந்தது.

## தருமபுரியில் நாளை கால்நடை மருத்துவ முகாம்

**தருமபுரி,**

தருமபுரி மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை (மே 30) கால்நடைகளுக்கு இலவச மருத்துவ முகாம் நடைபெற உள்ளது.

இதுகுறித்து கால்நடைப் பராமரித் துறை மண்டல அலுவலகம் புதன்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு: தருமபுரி மாவட்டத்தில் தமிழக அரசின் விலையில்லா கறவை மாடுகள், ஆடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் இதுவரை 12,594 பயனாளிகளுக்கு 50,376 ஆடுகளும், 450 பயனாளிகளுக்கு 450 கறவை மாடுகளும் வழங்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட ஆடுகளின் எடையை அதிகரிக்கவும், கறவை பசுக்களின் பால் உற்பத்தியை பெருக்கவும் மே 30, 31 -ஆம் தேதிகளில் மருத்துவப் பரிசோதனை, குடல்புழு நீக்க முகாம் நடத்தப்பட உள்ளது.

எனவே, இந்த முகாம்களில் தங்களது கால்நடைகளுக்கு இலவச பரிசோதனை செய்து பயன்பெறுமாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பகல், இரவு வெப்பம் குறையும்

**நாமக்கல்,**

கோடைகாலத்தின் இறுதிக் கட்டத்தில் இருப்பதாலும், மேகமூட்டம் நிலவ வாய்ப்புள்ளதாலும் பகல், இரவு வெப்ப அளவுகள் குறையத் தொடங்கும் என்று நாமக்கல் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நாமக்கல் மாவட்ட வானிலையில் அடுத்த 3 நாள்களுக்கு (மே 28 முதல் 30-ஆம் தேதி வரை) வானம் லேசான, பொதுவாக மேகமூத்துடனும், பல இடங்களில் 2 மிமீ முதல் 17 மிமீ வரையும் மழை பெய்யக்கூடும்.

காற்றின் திசைவேகம் மணிக்கு 5 கிமீ முதல் 6 கிமீ வேகத்தில் தெற்கிலிருந்து வீசக்கூடும். வெப்பநிலை குறைந்தபட்சம் 73.4 டிகிரி பாரன்ஹீட் முதல் அதிகபட்சம் 98.6 டிகிரி பாரன்ஹீட் வரையும், காற்றின் ஈரப்பதம் குறைந்தபட்சம் 30 சதம் முதல் அதிகபட்சம் 80 சதம் வரை இருக்கும்.

கோழிப் பண்ணையாளர்களுக்கு

கோடை காலத்தின் இறுதிக் கட்டத்தில் இருப்பதாலும், மேகமூட்டம் நிலவ வாய்ப்புள்ளதாலும் வெப்ப அளவுகள் சற்றே குறைந்து இதுவரை கோழிகளிடையே நிலவி வந்த வெப்ப அயற்சி, உற்பத்தி தொடர்பான பிரச்னைகளும் குறையத் தொடங்கும்.

எனினும், தென்மேற்கு பருவ மழைக்காலம் தொடங்கும் வரை கோடைக்கான அனைத்து மேலாண்மைகளையும் பண்ணையாளர்கள் தொடர வேண்டும்.

வேளாண் விவசாயிகளுக்கு

தற்போது பெய்துள்ள மழையில் தென்னை நடவு மேற்கொள்ளும் விவசாயிகள் 3ஷ்3ஷ்3 அடி அளவுள்ள குழி எடுத்து குழியில் மாட்டு எரு அல்லது ஆட்டு

எருவுடன் 0.5 கிலோ வேப்பம் புண்ணாக்கு கலந்து குழியில் இட்டு தண்ணீர் விட்டு 3 முதல் 5 நாள்கள் கழித்து தென்னை நடவு மேற்கொள்ளலாம்.

தென்னை கன்றுகள் நடும்போது மற்ற ராசயன உரங்கள் ஏதும் அளிக்க வேண்டாம். நடவு செய்து முதல் மட்டை வெளிவரும் சமயத்தில் யூரியா 300 கிராம், சூப்பர் பாஸ்பேட் 500 கிராம், பொட்டாஷ் 500 கிராம், எரு 10 கிலோ இட்டு தண்ணீர் விட வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாமகிரிப்பேட்டையில் ரூ.80 லட்சத்துக்கு மஞ்சள் ஏலம்

**ராசிபுரம்,**

நாமகிரிப்பேட்டையில் வேளாண் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மஞ்சள் ஏலத்தில் ரூ. 80 லட்சத்திற்கு மஞ்சள் ஏலம் போனது.

நாமகிரிப்பேட்டையில் உள்ள வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்க வளாகத்தில் வாரந்தோறும் செவ்வாய்க்கிழமையில் மஞ்சள் ஏலம் நடைபெறும். இதில், தனியார் மஞ்சள் மண்டிகள் வர்த்தகர்கள், நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா, ஆத்தூர், தலைவாசல் உள்ளிட்ட சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ள விவசாயிகள் மஞ்சளைக் கொண்டு வந்து ஏலத்தில் வைப்பர்.

கூட்டுறவுச் சங்க வளாகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஏலத்தில் தலா 65 கிலோ கொண்ட 2 ஆயிரத்து 205 மஞ்சள் மூட்டைகள் விற்பனைக்கு வந்தன. இதில், விரலி ரகம் குவிண்டாலுக்கு குறைந்தபட்சமாக ரூ.6 ஆயிரத்து 453 முதல் அதிகபட்சமாக குவிண்டால் ரூ.7 ஆயிரத்து 877- க்கும் விலை போனது. உருண்டை மஞ்சள் குறைந்தபட்சமாக ரூ.5 ஆயிரத்து 40 முதல் அதிகபட்சமாக குவிண்டால் ரூ.6 ஆயிரத்து 669-க்கு விலை போனது.

பனங்காலி ரகம் ரூ.8 ஆயிரத்து 300 முதல் அதிகபட்சமாக மூட்டை ரூ.15 ஆயிரத்து 600-க்கும் விலை போனது. ஏலத்தில் மொத்தம் ரூ.80 லட்சத்துக்கு மஞ்சள் வர்த்தகம் நடைபெற்றது.

## வறட்சி காரணமாக வெற்றிலை விலை உயர்வு

**பரமத்தி வேலூர்,**

நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் சுற்று வட்டாரப் பகுதிகளில் நிலவும் வறட்சியால் வெற்றிலையின் வரத்து குறைந்ததால், செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஏலத்தில் வெற்றிலை விலை உயர்ந்தது.

பரமத்தி வேலூர் சுற்று வட்டாரப் பகுதிகளில் வெற்றிலை பயிர் செய்யப்பட்டுள்ளது. வெள்ளைக்கொடி வெற்றிலை, பச்சைக்கொடி, கற்பூரி ஆகிய மூன்று வகை வெற்றிலைகள் பயிர் செய்யப்பட்டு வருகிறது.

இங்கு விளையும் வெற்றிலைகள் பரமத்தி வேலூர் நான்கு சாலையில் நடைபெறும் வெற்றிலை ஏலச் சந்தைக்கு கொண்டு வரப்பட்டு ஏலம் விடப்படும்.

ஏலத்துக்கு பரமத்தி வேலூர் சுற்று வட்டாரப் பகுதிகளில் இருந்தும், திருச்சி, கரூர் ஆகிய மாவட்டங்களில் இருந்தும் வெற்றிலைகள் ஏலத்துக்கு கொண்டு வரப்படும்.

வெற்றிலைகளின் தரத்துக்கேற்ப ஏலம் விடப்படும். ஏலம் எடுப்பதற்கு தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும், கேரள மாநிலத்தில் இருந்தும் வியாபாரிகள் வருவர்.

ஏலம் எடுக்கப்படும் வெற்றிலைகள் லாரிகள் மூலம் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கும் கொண்டு செல்லப்படும். கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் (104 கவுளிகள் கொண்ட சுமை ஒன்று) வெள்ளைக்கொடி இளம்பயிர் வெற்றிலை ரூ.4 ஆயிரத்துக்கும், கற்பூரி வெற்றிலை இளம்பயிர் ரூ.2 ஆயிரத்துக்கும் ஏலம் போனது. முதியம் பயிர் வெள்ளைக்கொடி வெற்றிலை சுமை ஒன்று ரூ.1600-க்கும் ஏலம் போனது. செவ்வாக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் வெள்ளைக்கொடி இளம்பயிர் வெற்றிலை ரூ.4,500-க்கும், கற்பூரி வெற்றிலை இளம்பயிர் ரூ.2,200-க்கும் ஏலம் போனது. முதியம் பயிர் வெள்ளை வெற்றிலை சுமை ஒன்று ரூ.2 ஆயிரத்துக்கும் ஏலம் போனது.

வெயிலின் தாக்கம் அதிகரித்ததாலும், ராஜா வாய்க்காலில் தண்ணீர் முற்றிலும் நிறுத்தப்பட்டதாலும் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. இதனால், வெற்றிலை விளைச்சல் குறைந்துள்ளது என விவசாயிகள் தெரிவித்தனர். எனவே, வெற்றிலையின் விலை உயர்ந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

## கால்நடைகளுக்கு நாளை முதல் இலவச மருத்துவப் பரிசோதனை

**நாமக்கல்,**

கால்நடைகளுக்கான இலவச மருத்துவப் பரிசோதனை, குடல்புழு நீக்க முகாம் நாமக்கல் மாவட்டத்தில் வெள்ளி, சனிக்கிழமை (மே 30, 31) ஆகிய இரு நாள்கள் நடைபெற உள்ளது. தமிழக அரசின் விலையில்லா கறவைப் பசுக்கள், வெள்ளாடுகள்- செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தின்கீழ், நாமக்கல் மாவட்டத்தில் 2011-2012 முதல் 2013-2014ஆம் ஆண்டு முடிய 6 கிராமங்களில் 300 பயனாளிகளுக்கு 300 கறவைப் பசுக்கள், 185 கிராமங்களில் 10,810 பயனாளிகளுக்கு 43,240 ஆடுகள் வழங்கப்பட்டு, மாவட்டத்துக்கான குறியீடு முழுமையாக முடிக்கப்பட்டுள்ளது. இந்த மூன்று ஆண்டுகளில் வழங்கப்பட்ட ஆடுகள் 44,162 குட்டிகளை ஈன்றுள்ளன. இந்தக் குட்டிகளின் விற்பனை மூலம் பயனாளிகளின் பொருளாதார நிலை மேன்மை அடைந்துள்ளது. விலையில்லா கறவைப் பசுக்கள், வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டங்கள் மூலம் வழங்கப்பட்ட கறவைப் பசுக்களின் பால் உற்பத்தித் திறனைப் பெருக்கவும், வெள்ளாடுகள், செம்மறி ஆடுகளின் எடையை அதிகரிக்கவும், தமிழகம் முழுவதும் 2011-12 முதல் 2013-14 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட கறவைப் பசுக்களுக்கு இனபெருக்க மருத்துவப் பரிசோதனைகளும், வெள்ளாடு, செம்மறி ஆடுகளுக்கு குடல்புழு நீக்க முகாமும் மாவட்டம் முழுவதும் அந்தந்த கிராமங்களிலேயே வெள்ளி, சனிக்கிழமை (மே 30, 31) ஆகிய இரு நாள்கள் நடத்தப்பட உள்ளது. விலையில்லா கறவைப் பசுக்கள், வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டங்களின் மூலம் பயன் பெற்ற பயனாளிகள் மட்டுமன்றி, அனைத்து விவசாயிகளும் தங்கள் கால்நடைகளை இந்த முகாமில் பரிசோதனை செய்து கொள்ளலாம் என ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாமக்கல்லில் பலத்த மழை

**நாமக்கல்,**

நாமக்கல்லில் புதன்கிழமை பலத்த மழை பெய்தது. கத்திரி வெயிலுக்கு விடை கொடுக்கும் வகையில் பெய்த மழையால் மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். அக்னி நட்சத்திரம் எனப்படும் கத்திரி வெயில் தமிழகத்தில் கடந்த 4-ஆம் தேதி தொடங்கி

புதன்கிழமை (மே 28) நிறைவடைந்தது. இந்த காலகட்டத்தில் நாமக்கல் மாவட்டத்தில் பகல் வெப்ப அளவு அதிகபட்சமாக 104 டிகிரி பாரன்ஹீட் வரையும், இரவில் 78 டிகிரி பாரன்ஹீட் வரையும் வெப்பம் நிலவியது.

இந்த வெயிலின் உக்கிரத்தால் இந்த மாவட்ட மக்கள் கடும் அவதிக்குள்ளாகி வந்தனர். இந்த நிலையில், கத்திரி வெயிலின் தாக்குதல் புதன்கிழமையுடன் நிறைவடைந்தது. எனினும், கத்திரி வெயிலின் நிறைவு நாளான புதன்கிழமை காலை முதலே வெயிலின் உக்கிரம் கடுமையாக இருந்தது. நண்பகல் நேரத்தில் மக்கள் சாலையில் செல்ல முடியாத அளவுக்கு வெயிலின் தாக்குதல் காணப்பட்டது.

இதனால், பெரும் அவதிக்குள்ளான மக்களுக்கு ஆறுதல் அளிக்கும் வகையிலும், கத்திரி வெயிலிக்கு விடை கொடுக்கும் வகையிலும் மாலையில் மாவட்டம் முழுவதும் பலத்த மழை பெய்தது.

மாலை 5 மணி முதல் சுமார் 45 நிமிஷங்கள் பெய்த இந்த பலத்த மழையால் வெயிலின் உக்கிரம் விலகி குளிர்ந்த நிலை ஏற்பட்டது. தொடர்ந்து குளிர்ந்த காற்றும் வீசிக் கொண்டிருந்ததால் மாவட்ட மக்களிடையே பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

## திருச்செங்கோடு கூட்டுறவுச் சங்கத்தில் ரூ. 39 லட்சத்துக்கு எள் விற்பனை

**திருச்செங்கோடு,**

திருச்செங்கோடு கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ.39 லட்சத்துக்கு எள் ஏலம் போனது.

திருச்செங்கோட்டில் வேலூர் சாலையில் இயங்கி வரும் வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் செவ்வாய்க்கிழமை 470 மூட்டைகள் எள் விற்பனைக்கு வந்தன.

பூலாம்பட்டி, பொம்மிடி, தருமபுரி, ஆத்தூர், கூகையூர், வீரகனூர், சின்னசேலம், உனத்தூர், தலைவாசல் ஆகிய பகுதிகளிலிருந்து விவசாயிகள் எள் மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். திருச்செங்கோடு, ஈரோடு வியாபாரிகளும், இதயம், ஆனந்தம் எண்ணெய் நிறுவனங்களின் பிரதிநிதிகளும் ஏலத்தில் பங்கேற்றனர்.

இதில், வெள்ளை எள் கிலோ ரூ. 90 முதல் 95 வரையும், கருப்பு எள் ரூ. 95 முதல் 106 வரையும், சிவப்பு எள் ரூ. 75 முதல் 81 வரையும் ஏலம் போனது.

இந்த சங்கத்தின் ஜலகண்டாபுரம் விற்பனைப் பிரிவில் தேங்காய் கொப்பரை 320 மூட்டைகள் ரூ 16 லட்சத்துக்கு விற்பனையானது.

## ஒசூர் கோழியின உற்பத்திக் கல்லூரி மாணவர்கள் தாய்லாந்து பயணம்

**ஒசூர்,**

ஒசூர் கோழியின உற்பத்தி மேலாண்மைக் கல்லூரி மாணவர்கள் கல்விச் சுற்றுலாவாக தாய்லாந்துக்கு புதன்கிழமை புறப்பட்டுச் சென்றனர்.

பெங்களூருவில் இயங்கி வரும் தாய்லாந்து நாட்டின் சி.பி. பீட்ஸ் என்ற பன்னாட்டு கோழியின உற்பத்தி நிறுவனம் நேர்காணல் மூலமாக ஆண்டுதோறும் இரு மாணவர்களைத் தேர்வு செய்து கல்விச் சுற்றுலாவாக தாய்லாந்துக்கு அழைத்துச் செல்கிறது.

இதன் மூலம், கோழிப் பண்ணைகளின் அமைப்பு, பராமரிப்பு, மேலாண்மை வழிமுறைகள் குறித்து தெரிந்து கொள்வதற்காக இந்த ஏற்பாடு செய்து வருகிறது.

இந்தச் சுற்றுலாவுக்காக, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் சார்பில், கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூரில் செயல்படும் கோழியின உற்பத்தி, மேலாண்மைக் கல்லூரியில் 3-ஆம் ஆண்டு படிக்கும் பிரசன்னகுமார், ஸ்ரீநாத் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். இவர்கள் இருவரும் புதன்கிழமை தாய்லாந்துக்குப் புறப்பட்டுச் சென்றனர். இருவரும் அங்கு 5 நாள்கள் தங்கியிருந்து ஆராய்ச்சி மேற்கொள்ள உள்ளதாக, கல்லூரி இயக்குநர் முருகன் தெரிவித்தார்.

## கால்நடைகளுக்கான மருத்துவ முகாம் நாளை தொடக்கம்

**அரியலூர்,**

அரியலூர் மாவட்டத்தில் கறவைப்பசு மற்றும் வெள்ளாடு, செம்மறி ஆடுகளுக்கான இனப்பெருக்க பரிசோதனை முகாம் வெள்ளி, சனிக்கிழமைகளில் (மே 30,31) நடைபெறுகிறது.

இது தொடர்பாக மாவட்ட ஆட்சியர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

தமிழக முதல்வரின் திட்டப்படி ஏழைகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த விலையில்லா கால்நடைகள் வழங்கப்பட்டுள்ளன.

அரியலூர் மாவட்டத்தில் 450 பேருக்கு 450 கறவைப் பசு, 7269 பேருக்கு 29,076 வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் இதுவரை வழங்கப்பட்டுள்ளன.

கறவைப்பசுக்களின் பால் உற்பத்தித் திறனைப் பெருக்கவும், வெள்ளாடுகள், செம்மறி ஆடுகளின் எடையை அதிகரிக்கவும் மே 30,31-களில் கறவைப் பசுக்களுக்கு இனப்பெருக்க மருத்துவப் பரிசோதனை, வெள்ளாடு, செம்மறி ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாமும் நடைபெற உள்ளது.

இம்முகாம்களில் விலையில்லா கறவைப் பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டங்களின் மூலம் பயன்பெற்ற பயனாளிகள் மட்டும் அல்லாமல் அனைத்து விவசாயிகளும் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளலாம்.

## கரூரில் அக்னி வெயிலுக்கு விடைகொடுத்த கோடை மழை

**கரூர்,**

அக்னி வெயிலுக்கு விடைகொடுக்கும் வகையில், கரூரில் புதன்கிழமை மாலை ஒரு மணி நேரம் இடியுடன் பலத்த மழை பெய்தது. இதனால் சாலைகளில் மழைநீர் வெள்ளம்போல பெருக்கெடுத்து ஓடியது. கரூரில் அக்னிவெயிலை வரவேற்கும் விதத்தில் வெயில் தொடங்கும் போதும் விடாது மூன்று நாட்கள் தொடர்ந்து மழை பெய்தது. இந்நிலையில் புதன்கிழமையோடு அக்னி வெயில் முடிவடையும் நிலையில், அதற்கு விடைகொடுக்கும் வகையிலும் மாலை 5.30 மணி முதல் 6.30 மணி வரை இடியுடன் பலத்த மழை பெய்தது.

கடந்த சில நாட்களாக வேலூருக்கு அடுத்தபடியாக கரூர் மக்களை அக்கினி வெயில் வாட்டி வதைத்து வந்தது. பகல் நேரங்களில் சாலைகளில் தார்கள் உருகின. ஆங்காங்கே சாலைகளில் காணல்நீர் தெரிந்துகொண்டே இருந்தது. மக்கள், வியாபாரிகள் பகல் நேரங்களில் வெளியே வரமுடியாத அளவிற்கு அக்கினி

வெயிலின் தாக்கம் இருந்தது. இதனால், அனைத்து தரப்பினரும் அவதியுற்று வந்தனர்.

இந்நிலையில் புதன்கிழமை அக்கினி வெயில் முடியும் நாளில் கரூரில் பலத்த மழை பெய்து மக்களை வெயிலின் தாக்கத்தில் இருந்து காப்பாற்றியது.

ஒரு மணி நேரம் பெய்த மழையால் சாலைகளில் ஓடிய மழைநீர் தாழ்வான பகுதியில் தேங்கியது. இந்த மழையால் கரூரில் குளிர்ச்சி நிலவியது.

## வங்கிகளுக்கான கடனுதவி இலக்கு ரூ. 2,347 கோடி

**புதுக்கோட்டை,**

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள வங்கிகள் மூலம் பல்வேறு பிரிவுகளில் கடனுதவி வழங்க ரூ. 2,347 கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார் ஆட்சியர் செ. மனோகரன். புதுக்கோட்டையில் புதன்கிழமை நடைபற்ற மாவட்ட அளவிலான வங்கியாளர்கள் கூட்டத்துக்கு தலைமை வகித்து அவர் பேசியது:

2014-2015-ம் ஆண்டில் வங்கிகள் மூலம் வழங்கப்படும் வங்கிக் கடனுதவி திட்ட இலக்கு ரூ. 2,347.91 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் ரூ. 2,102.40 கோடியில் வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த கடன்களும், சிறு, குறுந்தொழில்களுக்கு ரூ. 86.82 கோடியும், இதர முன்னுரிமைக் கடன்களுக்காக ரூ. 158.69 கோடியும் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. வங்கிகள் மூலம் கடன் பெற்ற பொதுமக்கள் அனைவரும் வங்கிக் கடன்களை முறையாக செலுத்தினால்தான், மீண்டும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் வங்கிகள் கடனுதவிகளை வழங்க முடியும். மேலும், வங்கியாளர்கள் சரியான முறையில் ஆவணங்கள் வைத்திருப்போருக்கு கடனுதவிகளை தாமதமின்றி வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

இதில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஆர். சந்தோஷ்குமார், காரைக்குடி இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் முதன்மை மண்டல மேலாளர் வெங்கட்ராமன், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் எஸ். ராமசாமி, பாரத ரிசர்வ் வங்கியின் உதவிப் பொது மேலாளர் பாலு, மாவட்ட வளர்ச்சி மேலாளர் (நபார்டு) எஸ். சோமசுந்தரம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## தஞ்சாவூரில் மீண்டும் கோடை மழை

**தஞ்சாவூர்,**

தஞ்சாவூர் மாவடத்தில் பல இடங்களில் புதன்கிழமை பிற்பகல் மீண்டும் கோடை மழை பெய்தது. மாவட்டத்தில் திங்கள்கிழமை நள்ளிரவு முதல் செவ்வாய்க்கிழமை அதிகாலை வரை காற்றுடன் கூடிய மழை பெய்தது. ஆனால், செவ்வாய்க்கிழமை பிற்பகல் கடும் வெப்பம் நிலவியதால், மழை பெய்தும் பயனில்லாமல் இருந்தது.

இதேபோல, புதன்கிழமை முற்பகலிலும் வெப்பம் கடுமையாக இருந்தது. இந்நிலையில், புதன்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் பலத்த இடியுடன் கூடிய மழை பெய்யத் தொடங்கி, சுமார் ஒரு மணிநேரம் நீடித்தது. அப்போது, மருத்துவக் கல்லூரி சாலையில் பாலாஜி நகர், தெற்கு வீதி உள்ளிட்ட சில இடங்களில் ஆலங்கட்டி மழை பெய்தது. இந்தக் கட்டி சுமார் அரை செ.மீ. முதல் ஒன்றரை செ.மீ. வரை இருந்ததாகக் கூறப்படுகிறது. சில இடங்களில் பலத்த காற்றுடன் கூடிய மழை இருந்தது. மருத்துவக் கல்லூரி சாலையில் உள்ள டி.பி.எஸ். நகர் திருப்பத்தில் மின் கம்பத்தில் அதிமுகவினர் கட்டியிருந்த விளம்பரப் பதாகை ஆடியது. இதனால், மின் கம்பமும் ஆடியதால் மின் கம்பிகள் உரசி பலத்த சப்தத்துடன் வெடித்தது. மேலும், தீப்பொறிகளும் தெறித்து விழுந்ததைத் தொடர்ந்து அப்பகுதியில் மின் தடை ஏற்பட்டது. பின்னர், சுமார் 2 மணிநேரத்துக்குப் பிறகு அப்பகுதியில் மின் வினியோகம் கிடைக்கத் தொடங்கியது. இந்த மழையால் மாநகரில் நிலவிய வெப்பம் தணிந்தது. மேலும், விவசாயத்துக்கும் இந்த மழை பயனுள்ளது என விவசாயிகள் தெரிவித்தனர். இதுகுறித்து காவிரி டெல்டா விவசாயிகள் சங்கத் தலைவர் ஏ.கே.ஆர். ரவிச்சந்தர் தெரிவித்தது:

குறுவை சாகுபடிக்காக நாற்றங்கால் போட்டுள்ள விவசாயிகளுக்கு இந்த மழை பயனுள்ளதாக இருக்கும். மேலும், கோடை உழவு செய்யப்பட்டுள்ள நிலங்களில் மழை நீர் மூலம் ஈரம் காக்கும் என்பதால் சாகுபடி செய்வதற்கு உதவும். கோடையில் பயிரிடப்பட்ட உளுந்து, எள் பயிர்களில் காய் பிடிக்கும் தருணம் இது. மழை சிறிது நேரம் மட்டுமே பெய்ததால் பயிர்களுக்குப் பயனுள்ளதாக அமையும். இதன் மூலம் கூடுதல் மகசூல் கிடைக்க வாய்ப்புள்ளது என்றார். அக்னி நட்சத்திரம் தொடங்கியபோது தொடர்ந்து 4 நாள்களுக்கு மழை பெய்தது. இதேபோல, அக்னி நட்சத்திரம் நிறைவு நாளான புதன்கிழமையும் மழை பெய்தது குறிப்பிடத்தக்கது.

## <u>பொறையாறு பகுதியில் திடீர் மழை</u>

**பொறையாறு,**

நாகை மாவட்டம் பொறையாறு மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் புதன்கிழமை திடீரென மழை பெய்தது.

புதன்கிழமை காலை முதல் கடும் வெப்பமான வானிலை இருந்து வந்த நிலையில்,

பகல் ஒரு மணி அளவில் திடீரென கரு மேகங்கள் சூழ்ந்து, பலத்த இடியுடன் மழை பெய்தது.

பொறையாறு, தரங்கம்பாடி, திருக்கடையூர், தில்லையடி, காட்டுச்சேரி உள்ளிட்ட பகுதிகளில் ஒரு சில இடங்களில் பலத்த மழையும், ஒரு சில இடங்களில் லேசான மழையும் பெய்தது. சுமார் ஒரு மணி நேரத்துக்கு இந்த மழை நீடித்தது.

## <u>ஆறு, வாய்க்கால்களை தூர்வார முன்னுரிமை</u>

**நாகப்பட்டினம்,**

நாகை மாவட்டத்தில் ஆறு மற்றும் வாய்க்கால்களைத் தூர் வாரி சீரமைக்க அரசுத் துறைகள் தீவிரம் காட்ட வேண்டும் என நாகை மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில், விவசாயிகள் வலியுறுத்தினர்.

விவசாயிகள் குறைதீர் கூட்டம், நாகை மாவட்ட ஆட்சியரகத்தில் புதன்கிழமை நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் து. முனுசாமி தலைமை வகித்தார்.

மாவட்ட வருவாய் அலுவலர் மு. ஆசியா மரியம், வேளாண் துறை, பொதுப்பணித் துறை, கூட்டுறவுத் துறை, நுகர்பொருள் வாணிபக் கழகம் உள்ளிட்ட அரசுத் துறைகளின் அலுவலர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் விவசாயிகள் பேசியது:

பாண்டுரெங்கன்: 2012-ம் ஆண்டுக்கான பயிர்க் காப்பீடு இழப்பீட்டை விவசாயிகளின் கடன் கணக்கில் வரவு வைக்காமல், நேரடியாக விவசாயிகளுக்குத் தொகையாக வழங்க வேண்டும்.

கிரிதரன்: நாகை மாவட்டத்தில் ஆறுகள், வாய்க்கால்களைத் தூர்வார பொதுப் பணித் துறை தீவிரம் காட்டவில்லை. தண்ணீர் திறக்கப்படும் போது, அவசர

கதியில் பணிளை மேற்கொண்டு முறைகேடுகள் நடைபெறுவதைத் தடுக்க உறுதியான நடவடிக்கை வேண்டும்.

குரு. கோபி கணேசன் : மத்தியில் அமைந்துள்ள புதிய அரசு நதிகள் இணைப்புத் திட்டத்தை செயல்படுத்த வேண்டும். வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள சிறு, குறு விவசாயிகளின் கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும்.

வி. தனபாலன் : சிக்கல் வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் தொடர்ந்து விவசாயிகள் குறைதீர் கூட்டத்தை புறக்கணித்து வருவதை மாவட்ட நிர்வாகம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஆறு, வாய்க்கால்களை முழுமையாக தூர்வாரி சீரமைக்க வேண்டும்.

சாகுபடி பணிகளுக்குத் தேவையான உரங்களை வேளாண் துறை முன்கூட்டியே இருப்புக் கொள்ள அறிவுறுத்த வேண்டும். மத்திய அரசின் புதிய பயிர்க் காப்பீடு திட்டத்தில் விவசாயிகளுக்கு ஏற்படும் பாதகங்களைப் போக்க வேண்டும்.

சோமு. இளங்கோ: மழை, வெள்ள காலங்களில் நாகை மாவட்டத்திலிருந்து அதிகளவிலான தண்ணீர் கடலில் கலப்பதைத் தடுத்து, மழை நீரை சேகரிக்கும் அமைப்புகள் ஏற்படுத்தும் திட்டத்தின் நிலையை விளக்க வேண்டும்.

கோதண்டராமன் : கடந்த 5 ஆண்டுகளாக புதுமண்ணியாறு தூர்வாரப்படாததால் சுமார் 26 ஆயிரம் ஏக்கர் சாகுபடி பணிகள் தடைபட்டுள்ளது. புதுமண்ணியாற்றில் புதிய பாலங்கள் கட்டப்பட்ட பகுதிகளில் உள்ள பழைய பாலங்களை இடித்து, நீரோட்டத்தை சீரமைக்க வேண்டும்.

ஆட்சியர் து. முனுசாமி: நாகை மாவட்டத்தில் 201415ம் ஆண்டில் 20 ஆயிரம் ஹெக்டேரில் குறுவை சாகுபடியும், 1.33 லட்சம் ஹெக்டேரில் சம்பா சாகுபடியும், 20 ஆயிரம் ஹெக்டேரில் தாளடி சாகுபடியும், 6,500 ஹெக்டேரில் கோடை நெல் சாகுபடியும் நடைபெற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நாகை மாவட்டத்தில் தற்போது வரை 366 ஹெக்டேரில் குறுவை நடவுப் பணிகள் நடைபெற்றுள்ளது. திருந்திய நெல் சாகுபடிக்காக 78 ஹெக்டேரில் நாற்று விடப்பட்டுள்ளது. விவசாயப் பணிகளின் தேவைகளையறிந்து, அந்தத் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்ற மாவட்ட நிர்வாகம் தயாராக உள்ளது என்றார் ஆட்சியர்.

**<u>கால்நடை மருத்துவ முகாம்</u>**

**பெரம்பலூர்,**

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை அருகேயுள்ள பிரம்மதேசம் கிராமத்தில், ரோவர் வேளாண் கல்லூரி மற்றும் ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய நாட்டு நலப் பணித் திட்டத்தின் கீழ், கால்நடை மருத்துவ முகாம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

மையத்தின் கால்நடை மருத்துவர் பி. ஆதிலட்சுமி, ரோவர் வேளாண் கல்லூரி உதவி பேராசிரியர் டாக்டர் வி. அரவிந்த் தலைமையிலான மருத்துவக் குழுவினர் 85-க்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு குடற்புழு நீக்க சிகிச்சை மற்றும் மருந்து அளித்தனர். முகாமில் பங்கேற்ற விவசாயிகள் தங்களது கால்நடைகளுக்கு மருத்துவ ஆலோசனைகள் பெற்றனர்.

**<u>ஏரி, குளம், வரத்து வாய்க்கால்களைத் தூர்வார வலியுறுத்தல்</u>**

**பெரம்பலூர்,**

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள ஏரி, குளம், வரத்து வாய்க்கால்களைத் தூர்வார மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

பெரம்பலூரில் மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது தலைமையில் புதன்கிழமை நடைபெற்ற கூட்டத்துக்கு மாவட்ட வருவாய் அலுவலர் வி. ராஜன்துரை முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் என். செல்லதுரை பேசியது:

தமிழக அரசால் ஒதுக்கப்பட்டுள்ள வறட்சி நிவாரண நிதி போதுமானதாக இல்லாததால், கூடுதலாக நிதி ஒதுக்க வேண்டும். பெரம்பலூர் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள குடிநீர் தட்டுப்பாட்டை நீக்க வேண்டும். வறட்சியால் கால்நடைகளுக்கு தீவனங்கள் இல்லாத நிலையில், 50 சத மானியத்தில் தீவனங்கள் வழங்க வேண்டும். பருவ மழைக்கு முன்கூட்டியே, பெரம்பலூர்

மாவட்டத்தில் உள்ள ஏரி, குளம், வரத்து வாய்க்கால் ஆகியவற்றைச் சீரமைத்து உடனடியாகத் தூர்வார வேண்டும்.

போர் போடவும், அடிக்கிணறுகள் வெட்டவும் வங்கிக் கடனுதவி பெறுவதற்கு வழியின்றி கருப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள பெரம்பலூர் மாவட்டத்தை விடுவித்து, வங்கிகள் கடனுதவிகள் வழங்க வேண்டும். அரசாணை எண் 92-ன் படி, தலித் மாணவர்களுக்கு அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் கட்டணமின்றி இலவச சேர்க்கை நடத்த வேண்டும். அரசு நிர்ணயித்த கல்விக் கட்டண விவரங்கள், அனைத்து தனியார் பள்ளிகளிலும் உள்ள பெயர் பலகைகளில் ஒட்ட வேண்டும்.

அரசு கட்டணம் வசூலிக்கிறார்களா என்பதை குழு அமைத்து ஆய்வு நடத்த வேண்டும். தமிழக அரசு அறிவித்துள்ளபடி ஜூன் மாதத்திலிருந்து தடையற்ற மின்சாரம் விநியோகிக்க வேண்டும். பல்வேறு கிராமங்களில் வழங்கப்பாடமல் உள்ள முதியோர் உதவித்தொகையை விரைந்து வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றார் அவர்.

தமிழ்நாடு கரும்பு உற்பத்தியாளர்கள் சங்க மாவட்டத் தலைவர் ஏ.கே. ராஜேந்திரன் பேசியது:

பெரம்பலூர் மாவட்டம், மலையாளப்பட்டி அருகே பச்சைமலை அடிவாரத்தில் அதிக நீரோட்டமுள்ள சின்னமுட்லு பகுதியில் புதிய நீர்த்தேக்கம் அமைக்க வேண்டும்.

வி.களத்தூர் கல்லாறு மற்றும் திருமாந்துறை வெள்ளாற்றில் தலா 3 இடங்களில் விவசாயப் பணிகளுக்காகவும், நிலத்தடி நீர்மட்டம் உயரவும் தடுப்பணைகள் கட்டி மழை நீரைச் சேமிக்க வேண்டும்.

பெரம்பலூர் எறையூர் நேரு சக்கரை ஆலைக்கு கரும்பு அனுப்பிய விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய ரூ. 9 கோடியை தாமதமின்றி ஆலை நிர்வாகம் வழங்க மாவட்ட நிர்வாகம் உத்தரவிட வேண்டும். பெரம்பலூர் சர்க்கரை ஆலைக்குள்பட்ட பகுதியில் 1,365 ஏக்கரும், தனலட்சுமி சீனிவாசன் சர்க்கரை ஆலைக்குள்பட்ட பகுதியில் 300 ஏக்கரும் வறட்சியால் பாதிக்கப்பட்ட கரும்பு பயிருக்கு நிவாரணத் தொகை வழங்க வேண்டும்.

மாவட்ட அளவில் கோமாரி நோயால் பாதிக்கப்பட்டு இறந்த கறவை மாடுகளுக்கு இழப்பீட்டு தொகையும், வறட்சியால் கருகிப்போன தென்னை மரங்களுக்கு நிவாரணத் தொகையும் வழங்க வேண்டும் என்றார் அவர்.

கூட்டத்தில், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கனகசபை, வேளாண்மை இணை இயக்குநர் அழகிரிசாமி, துணை இயக்குநர் அய்யாசாமி, மின் வாரிய மேற்பார்வைப் பொறியாளர் வளர்மதி, தமிழக ஏரி மற்றும் ஆற்றுப்பாசன விவசாயிகள் சங்கத்தலைவர் விசுவநாதன், தமிழ்நாடு பாமாயில் சாகுபடியாளர்கள் சங்கத் தலைவர் முருகேசன், தமிழக விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் பி. மாணிக்கம், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் ஜெயராமன், தமிழக விவசாயிகள் கட்சியின் மாவட்டத் தலைவர் ராமசாமி உள்பட பலர் பங்கேற்றனர்.

## நாளை ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாம்

**பெரம்பலூர்,**

பெரம்பலூர் மாவட்டத்தில் விலையில்லா வெள்ளாடுகள், செம்மறியாடுகள் வழங்கிய கிராமங்களில் மே 30,31-களில் சிறப்பு குடற்புழு நீக்கம் முகாம் மற்றும் சுகாதார ஆய்வு முகாம் நடைபெற உள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் புதன்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

பெரம்பலூர் மாவட்டத்தில் விலையில்லா வெள்ளாடுகள் பெற்ற பயனாளிகளின் இருப்பிடம் கால்நடை மருந்தகங்களுக்கு தொலைவில் இருந்தால், நேரிடையாக சென்று ஆய்வு செய்து, நோயுள்ள ஆடுகளுக்கு சிகிச்சை, ஆடுகள் எண்ணிக்கை ஆய்வு செய்தல் மற்றும் குடற்புழுக்களால் ஆடுகளுக்கு ஏற்படும் இழப்பை தவிர்த்து உடல் எடையை அதிகரித்து, அதிக லாபம் பெறுவதற்காக மாதம் ஒரு முறை முகாம் நடத்தப்படுகிறது.

எனவே, இத்திட்டத்தின் கீழ் பயனடைந்த பெரம்பலூர் மாவட்ட பயனாளிகள் தங்களது ஆடுகள் மற்றும் குட்டிகளை முகாம் நடைபெறவுள்ள இடத்திற்கு கொண்டு சென்று, குடற்புழு நீக்கம் மற்றம் நோயுள்ள ஆடுகளுக்கு சிகிச்சை அளித்து, ஆடுகளின் உடல் எடையை அதிகரித்துக் கொள்ளலாம்.

## <u>கார் சாகுபடி: கடனாநதி, ராமநதி அணைகள் ஜூன் 15இல் திறப்பு?</u>

**திருநெல்வேலி,**

கார் பருவ சாகுபடிக்கு கடனாநதி, ராமநதி அணைகளிலிருந்து தண்ணீர் திறக்க வேண்டும் என, விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. இவ்விரு அணைகளிலிருந்து பாசனத்துக்கு ஜூன் 15இல் தண்ணீர் திறக்க வாய்ப்புள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரவருணி பாசனத்தில் பாபநாசம் அணை மூலம் 40 ஆயிரம் ஏக்கரும், கடனாநதி அணை பாசனத்தில் 9,615 ஏக்கர் நிலங்களும், ராமநதி அணை பாசனத்தில் 4,314 ஏக்கர் நிலங்களும் பாசனம் பெறுகின்றன.

கார் பருவம் சாகுபடிக்கு ஜூனில் அணைகளின் நீர் இருப்பைப் பொறுத்து தண்ணீர் திறக்கப்படுவதுண்டு.

நீர்மட்டம்: புதன்கிழமை நிலவரப்படி, பாபநாசம் அணை நீர்மட்டம் 51.10 அடியாகவும், சேர்வலாறு அணை நீர்மட்டம் 64.57 அடியாகவும், மணிமுத்தாறு அணை நீர்மட்டம் 67.55 அடியாகவும் இருந்தது. மணிமுத்தாறு அணைக்கு விநாடிக்கு 4 கனஅடியும், பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 128.59 கனஅடியும் நீர்வரத்து இருந்தது.

முதல் கட்டமாக கார் சாகுபடிக்கு திருநெல்வேலி மாவட்டத்தில் மணிமுத்தாறு அணையிலிருந்து பெருங்கால் மதகு மூலம் பாசனம் நிலங்களுக்கு ஜூன் 1இல் தண்ணீர் திறக்கப்படுகிறது. பாபநாசம் அணை நீர்வரத்தைப் பொறுத்து இந்த அணை மூலம் பாசனம் பெறும் நிலங்களுக்கு தண்ணீர் திறக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடனாநதி அணை நீர்மட்டம் 57.50 அடியாகவும், ராமநதி அணை நீர்மட்டம்

63.25 அடியாகவும் இருந்தது. கடனாநதி அணையில் அரசபத்து கால்வாய், வட குருவபத்து கால்வாய், ஆம்பூர் கால்வாய், மஞ்சப்புளி கால்வாய், ஆழ்வார்குறிச்சி கால்வாய், காங்கேயம் கால்வாய், காக்கநல்லூர் கால்வாய் ஆகியவை மூலம் கார் பருவத்தில் 3,950 ஏக்கர் மட்டுமே பாசனம் பெறுகிறது.

இவ்விரு அணைகளின் நீர்மட்டம் 50 அடிக்கு அதிகமாக இருப்பதால் ஜூன் 1இல் பாசனத்துக்கு தண்ணீர் திறக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது. ஜூன்

15இல் கடனாநதி, ராமநதி அணைகளிலிருந்து பாசனத்துக்கு திறக்க வாய்ப்புள்ளதாக அணை வட்டாரங்கள் தெரிவித்தன.

விவசாயிகள் வலியுறுத்தல்: திருநெல்வேலி மாவட்ட விவசாயிகள் சங்கச் செயலர் ஆர். கசமுத்து கூறியதாவது: திருநெல்வேலி மாவட்டத்தில் பாபநாசம், மணிமுத்தாறு, கடனாநதி, ராமநதி அணைகளின் நீர்மட்டம் 50 அடிக்கு அதிகமாக உள்ளது. பாசனத்துக்கு தாமதமாக தண்ணீர் திறப்பதால் அறுவடையும் தாமதமாகிறது.

இதனால் மழையில் நெற்பயிர் மூழ்கி சேதமடையும் நிலை உள்ளது. எனவே, கார் பருவ சாகுபடி பணியைத் தொடங்க பாபநாசம், கடனாநதி, ராமநதி அணைகளிலிருந்து ஜூன் முதல் தேதியில் தண்ணீர் திறக்க வேண்டும் என்றார் அவர்.

## <u>நெல்லையில் நாளை விவசாயிகள் குறைதீர் கூட்டம்</u>

**திருநெல்வேலி,**

திருநெல்வேலி ஆட்சியர் அலுவலக வளாகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் இம்மாதம் 30ஆம் தேதி நடைபெறுகிறது.

இதுதொடர்பாக திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் மு.கருணாகரன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: திருநெல்வேலி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் திட்டமிட்டபடி இம்மாதம் 30ஆம் தேதி நடைபெறும். இதில் மாவட்டம் முழுவதும் உள்ள விவசாயிகள் பங்கேற்று தங்களது குறைகளை தெரிவிக்கலாம் என்றார் அவர்.

## <u>நெல்லை மாவட்டத்தில் ரூ. 4,790 கோடி கடன் வழங்க இலக்கு</u>

**திருநெல்வேலி,**

திருநெல்வேலியில் புதன்கிழமை நடைபெற்ற வங்கியாளர்கள் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் 2014-15 ஆம் ஆண்டில் ரூ. 4,790 கோடிக்கு கடன் வழங்குவதென இலக்கு நிர்ணயித்து அறிக்கை வெளியிடப்பட்டது.

திருநெல்வேலி மாவட்ட முன்னோடி வங்கியான இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மற்றும் மாவட்ட வங்கிகளின் ஒருங்கிணைப்புக் குழு சார்பில் வங்கியாளர்கள் கூட்டம் புதன்கிழமை ஆட்சியர் மு. கருணாகரன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில், திருநெல்வேலி மாவட்டத்திற்கான 2014-15 ஆம் ஆண்டிற்கான கடன் திட்ட அறிக்கையை ஆட்சியர் வெளியிட, இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் முதன்மை மண்டல மேலாளர் ஆர்.எஸ். வரதராஜன் பெற்றுக் கொண்டார்.

கடன் திட்ட அறிக்கையில், திருநெல்வேலி மாவட்டத்தில் விவசாயத்திற்கு ரூ. 3,384 கோடியும், தொழில்துறைக்கு ரூ.340 கோடியும், சேவைப் பிரிவுகளுக்கு ரூ. 1066 கோடி என மொத்தம் ரூ. 4,790 கோடிக்கு கடன் வழங்குவது என இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர கல்விக் கடன் வழங்கும் வகைக்கு ரூ. 192 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2013-14 ஆம் ஆண்டை விட 15 சதவீதம் கூடுதலாக கடன் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் ரிசர்வ் வங்கி உதவிப் பொதுமேலாளர்கள் எஸ். சுந்தரேசன், ஐ. காந்தி, தேசிய வங்கி உதவிப் பொதுமேலாளர் கே. ராமலிங்கம், முன்னோடி வங்கி மேலாளர் எஸ். அழகர்சாமி மற்றும் வங்கி மேலாளர்கள், அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## பருத்தி வரத்து குறைந்தது

**கள்ளக்குறிச்சி**,

கள்ளக்குறிச்சி வேளாண்மை கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில், புதன்கிழமை நடைபெற்ற பருத்திச் சந்தையில் 4 ஆயிரத்து 300 பருத்தி மூட்டைகள் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டன.

கள்ளக்குறிச்சி வேளாண்மை கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் புதன்கிழமைதோறும் பருத்திச் சந்தை நடைபெற்று வருகிறது.

அதன்படி நடைபெற்ற இப்பருத்திச் சந்தைக்கு கெங்கனாபுரம், தேனி, மகுடஞ்சாவடி, திருப்பூர், கும்பகோணம் உள்ளிட்ட பல்வேறுப் பகுதிகளில் இருந்து வியாபாரிகள் வந்திருந்தனர். விழுப்புரம், கடலூர், பெரம்பலூர் உள்ளிட்ட

பகுதிகளிலிருந்து 298 விவசாயிகள், 4ஆயிரத்து 300 பருத்தி மூட்டைகளை விற்பனைக்காக கொண்டு வந்தனர். இது கடந்த வாரத்தைவிட குறைவாகும்.

சுமார் ரூ.90 லட்சம் அளவுக்கு வர்த்தகம் நடைபெற்றது. எல்.ஆர்.ரக பருத்தி குவிண்டாலுக்கு அதிகபட்சமாக ரூ.5 ஆயிரத்து 789-க்கும், குறைந்த பட்சமாக ரூ.5ஆயிரத்து 126-க்கும், சுவின் ரக பருத்தி குவிண்டாலுக்கு அதிகபட்சமாக ரூ.6 ஆயிரத்து 320-க்கும், குறைந்தபட்சமாக ரூ.5 ஆயிரத்து 180-க்கும் கொள்முதல் செய்யப்பட்டது.

## இயற்கை இடர்பாடுகள் குறித்து தகவல் தெரிவிக்க கட்டுப்பாட்டு அறை

**திருவாரூர்**,

திருவாரூரில் தென்மேற்கு பருவமழை காலத்தில் இயற்கை இடர்பாடுகள் குறித்து பொதுமக்கள் தகவல் தெரிவிக்க ஆட்சியர் அலுவலகத்தில் கட்டுப்பாட்டு அறை திறக்கப்பட்டுள்ளது என்றார் ஆட்சியர் சி. நடராசன்.

திருவாரூரில் அண்மையில் நடைபெற்ற தென்மேற்கு பருவமழை குறித்த முன்னேற்பாடு கூட்டத்தில் மேலும் அவர் பேசியது:

தென்மேற்கு பருவமழை ஜூன் முதல் தொடங்கவுள்ளது. வருவாய் துறை, ஊரக வளர்ச்சித் துறை, நகராட்சி மற்றும் பேரூராட்சிகள், காவல்துறை, தீ மற்றும் மீட்பு பணித் துறை வேளாண்மைத் துறை, பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, மருத்துவத் துறை, மின்சாரத் துறை, உள்ளிட்ட அனைத்து துறை அலுவலர்களும் இயற்கை இடர்பாடுகளின்போது தங்களது பணிகளை முன்கூட்டியே செய்ய வேண்டும்.

தென்மேற்கு பருவமழை காலத்தையொட்டி ஜூன் 1-ம் தேதி முதல் ஆட்சியர் அலுவலகத்தில் 24 மணி நேரமும் இயங்கும் வகையில் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்படும் என்றார் ஆட்சியர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## தமிழகம், புதுவையில் இன்றுடன் முடிகிறது மீன்பிடி தடை: வலையுடன் மீனவர்கள் தயார்



சென்னை: தமிழகம், புதுச்சேரி, ஆந்திரா மாநிலங்களின், வங்கக்கடல் பகுதிகளில், 45 நாள் மீன்பிடி தடைக்காலம் இன்றுடன் முடிகிறது. மீனவர்கள் உற்சாகத்துடன், கடலுக்குள் செல்ல, விசைப்படகுகளுடன் தயாராகி வருகின்றனர்.

மீன்களின் இன விருத்தியைக் கருத்தில் கொண்டு, ஒவ்வொரு கடல் பகுதியாக, ஆண்டு தோறும், 45 நாட்கள் மீன்பிடிக்க, அரசு தடை விதித்து வருகிறது.

### மீன்பிடி தடைக்காலம்:

தமிழகம், புதுச்சேரி, ஆந்திரா உள்ளிட்ட கிழக்கு கடலோரப் பகுதிகளில் (வங்கக்கடல்), மீன்பிடி தடைக்காலம், ஏப்., 15ல் துவங்கியது. தமிழகம் முழுவதும் உள்ள, 15 ஆயிரம் விசைப்படகுகள், மீன்பிடிக்க கடலுக்குள் செல்லவில்லை. இதனால், மீன்பிடி தொழில் முடங்கியது. சிறு கட்டுமரம், பைபர் படகுகளின் மட்டுமே மீன்பிடி தொழில் நடந்தது. இதில், கிடைத்த மீன்கள், தேவையில், 10 சதவீதம் கூட இல்லாததால், மீன்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு, விலை எகிறியது.

இதற்கிடையில், கிடைத்த வாய்ப்பை பயன்படுத்தி, விசைப்படகுகளை சீரமைக்கும் பணியில் மீனவர்கள் ஆர்வம் காட்டினர். மீன்பிடி தடைக்காலம், இன்றுடன் முடிகிறது. இதனால், மீண்டும் மீன்பிடி தொழில் களை கட்ட உள்ளது. ஒன்றரை மாதமாக ஓய்வெடுத்த மீனவர்கள், உற்சாகத்துடன், இன்று நள்ளிரவு முதல் மீன்பிடிக்க கடலுக்குள் செல்கின்றனர். அதற்கேற்ப, தமிழகம் முழுவதும் விசைப்படகுகளை தயார்படுத்தி வருகின்றனர். எரிபொருட்களை நிரப்புதல், மீன்களை பாதுகாக்க ஐஸ் கட்டிகளை வாங்கி தேக்கி வைத்தல்; உணவு பொருட்கள் வாங்குதல் என, மும்முரமாக உள்ளனர். சென்னை காசிமேடு மீன்பிடி துறைமுகத்திலும், மீனவர்கள் உற்சாகத்துடன் கடலுக்கு செல்ல தயாராகி வருகின்றனர்.

சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்ட விசைப்படகு மீனவர்கள் சங்கத் தலைவர் ரகுபதி கூறுகையில், "தடைக்காலத்தில், ஆழ்கடல் மீன்பிடித்தல் இல்லை என்பதால், அதிக அளவில் மீன்கள் உற்பத்தி ஆகியிருக்கும். அதிக அளவில் மீன்கள் கிடைக்கும் என்ற, நம்பிக்கையோடு, தொழில் துவங்க தயாராகி விட்டோம். மீன் வரத்து அதிகரிப்பால் விலையும் வெகுவாக குறையும்," என்றார்.

### மீனவ அமைப்புகள் புகார்:

'மீன்வளத்துறையின் கிடுக்கிப்பிடி நிபந்தனைகளால், தடைக்கால நிவாரணம் பெறுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது; இதற்கு தீர்வு காண வேண்டும்' என, மீனவ அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன. முதல்வர் தனிப்பிரிவிலும் புகார் அளித்துள்ளனர். மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கும் என்பதால், தமிழக அரசு, குடும்பத்திற்கு, 2,000 ரூபாய், தடைக்கால நிவாரணம் வழங்கி வருகிறது.

### கிடுக்கிப்படி:

கடந்த ஆண்டு போல் அல்லாமல், நிவாரணம் பெற, மீன்வளத்துறை இயக்குனர் அலுவலகம், கிடுக்கிப்பிடி நிபந்தனைகளை விதித்துள்ளதால் சிக்கல் எழுந்துள்ளது. இந்த நிபந்தனைகளை நீக்கக்கோரி, அனைத்திந்திய மீனவர் சங்கங்களின் கூட்டமைப்பு, முதல்வர் தனிப்பிரிவில் நேற்று, புகார் அளித்துள்ளனர்.

இதுகுறித்து, தென்னிந்திய மீனவர் நல சங்கத் தலைவர் கு.பாரதி கூறியதாவது: தடைக்கால உதவி பெறுபவர், மீன்பிடி தொழில் செய்பவராக இருக்க வேண்டும்; மத்திய, மாநில அரசு பணிகளில் இருக்கக் கூடாது. குடும்ப உறுப்பினர் யாரும் அரசு, தனியார் பணியில் இருக்கக் கூடாது என்பது, எந்த வகையில் நியாயம்.

தந்தை மீன்பிடி தொழில் செய்து, குழந்தைகளை படிக்க வைத்தால் நிவாரணம் பெற முடியாது. இயற்கை சீற்றம், இலங்கை கடற்படை தாக்குதலால், சில மாவட்டங்களில், 100 நாட்கள் கூட நிம்மதியாக மீன்பிடிக்க முடியாத சூழலில், குறைந்தது எட்டு மாதமாவது, மீன்பிடி தொழில் செய்திருக்க வேண்டும் என, நிபந்தனை உள்ளது. அரசுக்கு கெட்ட பெயர் ஏற்படுத்தும் வகையில், மீன்வளத்துறை அதிகாரிகள் இதுபோன்ற நிபந்தனைகளை விதித்துள்ளனர். இவற்றை நீக்கி, மீனவர்கள் எளிதாக நிவாரணம் பெற முதல்வர் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு, அவர் கூறினார்.

## விடைபெற்றது கத்தரி வெயில்

**சென்னை**: தமிழகத்தை, 25 நாட்கள் வெப்பத்தால் வாட்டிய, அக்னி நட்சத்திரம், நேற் றுடன் விடை பெற்றது. சென்னை உள்ளிட்ட பகுதிகளில் வெப்பத்தின் தாக்கமும் குறைந்தது.

தமிழகத்தில், அதிக பட்ச வெப்பம், ஏப்ரல், மே மாதங்களில் பதிவாகும். குறிப்பாக, மே மாதத்தின், 4ம் தேதி முதல், 28ம் தேதி வரை, அக்னி நட்சத்திர காலமாகும். இக்காலத்தில், உச்சபட்ச வெப்பநிலை பதிவாகும். இந்தாண்டும், 16ம் தேதி முதல், 25ம் தேதி வரை, வட மாவட்ட பகுதிகளில் அதிகபட்ச வெப்பம் பதிவாகியது. மற்ற பகுதிகளில், வெப்பச் சலனம் காரண மாக மழை பெய்து வந்ததால், வெப்பத்தின் தாக்கம் தெரியவில்லை. இந்நிலையில், நேற்றுடன் அக்னி நட்சத்திர காலம் முடிவடைந்தது. ஜூன் மாதம், தென்மேற்கு பருவமழை துவங்கும் என்பதால், வெப்பமும் தணிந்தது. நேற்று முன்தினம், சென்னையில், நுங்கம்பாக்கம், 36; மீனம்பாக்கம், 39 டிகிரி செல்சியஸ் பதிவாகியது. இதே போல், வெப்பநிலை அதிகமாக பதிவாகிய திருத்தணி, திருச்சி, வேலூர், சேலம் பகுதிகளிலும் வெப்பநிலை நேற்று முன்தினம் முதல் குறையத் துவங்கியுள்ளது. வெப்பச் சலனத்தால், ஆங்காங்கே மழை தொடர்கிறது. நேற்று முன்தினம், அதிகபட்சமாக, வேலூர் - வாணியம் பாடியில், 6 செ.மீ., மழை பதிவாகியுள்ளது. கிருஷ்ணகிரி, கோவை, நீலகிரி, ஈரோடு, ராமநாதபுரம், விழுப்புரம் மாவட்டங்களிலும் மழை பெய்துள்ளது. 'இந்த மழை இன்னும் இரு தினங்களுக்கு நீடிக்கும்' என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## ரூ.19,500 கோடி கடல் உணவு ஏற்றுமதி: மீன் ஆராய்ச்சி இயக்குனர் தகவல்

மண்டபம்: "கடந்தாண்டில் கடல் உணவு ஏற்றுமதி மதிப்பு ரூ.19 ஆயிரத்து 500 கோடி அளவில் இருந்தது," என மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிலைய இயக்குனர் கோபாலகிருஷ்ணன் தெரிவித்தார்.

ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிலையத்தில், புதியதாக பவளப்பாறைகள் கொண்ட அருங்காட்சியகம் மற்றும், வண்ண மீன் குஞ்சு உற்பத்தி நிலையம், இயக்குனர் கோபாலகிருஷ்ணன் தலைமையில் துவக்கி வைக்கப்பட்டது. இங்கு கடந்த ஏழு மாதங்களுக்கு முன் 30 கிராம் எடைக்கொண்ட கடல்விரால் மீன் குஞ்சுகள் கூண்டுகளில் விடப்பட்டு வளர்க்கப்பட்டன. ஐந்தரை கிலோ எடை(ஒரு மீன்) வரை வளர்ந்த கடல்விரால்கள், ஒரு டன் வரை நேற்று பிடிக்கப்பட்டன.

பின் கோபாலகிருஷ்ணன் கூறியதாவது: இந்தியாவில் கடல் உணவு ஏற்றுமதி கடந்த ஆண்டு 19 ஆயிரத்து 500 கோடி ஆகும். இதில் வண்ணமீன்கள் ஏற்றுமதி மூலம் ரூ.6.5 கோடி கிடைத்தது. நாம் வண்ண மீன்கள்(அலங்கார மீன்கள்) உற்பத்தியில் பின் தங்கி உள்ளோம். இலங்கையில் வண்ண மீன்கள் ஏற்றுமதி ஆண்டுக்கு 10 சதவிகிதத்தை எட்டியுள்ளது. நாம் ஒரு சதவிகிதத்தை கூட எட்டவில்லை. கடலில் உள்ள வண்ணமீன்களை, பவளப்பாறைகள் சேதம் ஆகாமல் பிடிப்பதில் சில சிக்கல்கள் உள்ளன. மிக விரைவில் அதற்கான சாத்தியக்கூறுகள் தென்படும், என்றார்.

## நிலத்தடி நீர் கண்டறியும் சென்னிமலை இளைஞர்

சென்னிமலை: சென்னிமலையை சேர்ந்த இளைஞர் ஒருவர், போர்வெல் அமைக்க துல்லியமாக நிலத்தடி நீரை கணித்து வருகிறார்.

ஈரோடு மாவட்டம், செலமகவுண்டன்பாளையத்தை சேர்ந்தவர் ராஜா, 32, இவர், சில்லரை காசுகள் மூலம் நிலத்தடி நீர்மட்டத்தை ஆராய்ந்து கூறி வருகிறார். 18 ஆண்டுகளாக நிலத்தடி நீர்மட்டத்தை கணித்து கூறியுள்ளார். நிலத்தடி நீர்மட்டத்தை கண்டறியும் மீட்டரை நம்பாமல், வெள்ளகோவில், தாராபுரம் பகுதியில் உள்ள அரசு அதிகாரிகள், இவரை அழைத்து, நீர்மட்டம் பார்க்க சொல்கின்றனர். இப்பகுதியில், 120க்கும் மேற்பட்ட போர்வெல்களில் அதிகளவு நீர் கிடைத்துள்ளது.

இதுகுறித்து, ராஜா கூறியதாவது: கடந்த, 18 ஆண்டுகளுக்கு முன் உறவினரின் தோட்டத்தில் நீர்மட்டம் பார்த்து சொன்னேன். அதன்படி, போர்வெல் போட்டனர். அதிகளவு தண்ணீர் வந்தது. துவக்கத்தில், நீர் ஊற்று பார்க்க கட்டணம் ஏதும் வாங்கவில்லை. தற்போது, 3,000 ரூபாய் வரை வாங்குகிறேன். தண்ணீர் இல்லை எனில், கட்டணத்தை திருப்பி கொடுத்து விடுவேன். நான் பார்த்து நீர் இல்லை என, இதுவரை பணத்தை திருப்பி கொடுத்தது இல்லை. தண்ணீர் கஷ்டம் உள்ள கிராமங்களுக்கு போர் போட, கட்டணமின்றி, நீர் மட்டம் பார்க்கிறேன். நீர் ஊற்று பார்க்க, 98429- 59146 எண்ணில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு, அவர் கூறினார்.

## ஆந்திரா சம்பா நாவற்பழம் விற்பனை 'ஜோர்'



**நாமக்கல்**: நாமக்கல்லில், மருத்துவ குணம் கொண்ட ஆந்திர மாநில சம்பா நாவற்பழம், அமோகமாக விற்பனை ஆகிறது. ஆந்திர மாநிலத்தில், அதிகளவில், விளைவிக்கக் கூடியது, சம்பா நாவற்பழம். இந்த பழம், அல்சர், சர்க்கரை நோய்க்கு மருந்தாக பயன்படுத்தப்படுகிறது.

மேலும், ரத்தத்தை சுத்தம் செய்கிறது. மருத்துவ குணம் கொண்ட சம்பா நாவற்பழம், நாமக்கல் மற்றும் சுற்றுப்பகுதியில், அமோகமாக விற்பனையாகிறது. மருத்துவ குணம் கொண்டதால், இப்பழத்தை மக்கள் அதிக அளவில் வாங்கிச் செல்கின்றனர். ஒரு கிலோ, 240 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

ராசிபுரம், வியாபாரி சக்திவேல் கூறுகையில், "ஆந்திர மாநிலத்தில், சம்பா நாவற்பழம் சீசன் துவங்கி உள்ளது. இவை, தமிழகம் உட்பட, பல மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

நாமக்கல் பகுதிக்கு, நேரடியாக, வரவழைக்கப்படுகிறது. இப்பழம், அல்சர், சர்க்கரை நோயை தீர்க்கும் மருத்துவ குணம் கொண்டது," என்றார்.

## மாவட்டத்தில் தொடர் மழை: அணைகள் நீர்மட்டம் உயர்வு

**தர்மபுரி**: தர்மபுரி மாவட்டத்தில், சில தினங்களாக பெய்து வரும் கன மழையின் காரணமாக அணை, ஏரி, குளங்கள் உள்ளிட்ட நீர் நிலைகளில், நீர்மட்டம் உயர்ந்து வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தர்மபுரி மாவட்டம் விவசாயத்தை பிரதான தொழிலாக கொண்டதாகும். மாவட்டத்தில், வாணியாறு அணை, தொப்பையாறு அணை, பஞ்சப்பள்ளி அணை, நாகாவதி அணை, வரட்டாறு அணை, கேசர் குழி அணை, தும்பலஹள்ளி அணை என மொத்தம், ஏழு அணைகள் உள்ளன.

மேலும், பொதுப்பணித்துறையின் கட்டுப்பட்டில், 73 ஏரிகளும், பஞ்சாயத்துக்களில், 70க்கும் மேற்பட்ட ஏரி குளங்களும் உள்ளன. சில ஆண்டுகளாக, தர்மபுரி மாவட்டத்தில், போதிய பருவ மழை பெய்யாததால், மாவட்டத்தில் உள்ள அணைகளுக்கு, தண்ணீர் வரத்து கேள்விக்குறியானது.

மாவட்டத்தில் உள்ள ஏரி, குளங்களுக்கு மழை நீர் வரும், கால்வாய்கள் பல இடங்களில் செய்யப்பட்டுள்ள ஆக்ரமிப்பு காரணமாக, ஏரி, குளங்களுக்கு மழைக் காலங்களில், தண்ணீர் முழுமையாக சென்றடையாத நிலை ஏற்பட்டது. குறிப்பாக, தர்மபுரி மாவட்டத்தில், கடந்த பிப்ரவரி மாதம் முதல் வெயிலின் உக்கிரம் அதிகரித்து உள்ளதால், அணை, ஏரி, குளங்களில் உள்ள தண்ணீரின் அளவு பாதிக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில், தர்மபுரி மாவட்டத்தில், சில தினங்களாக பரவலாக கனமழை பெய்து வருகிறது. இதனால், மாவட்டத்தில் உள்ள அணைகள் மற்றும் ஏரி, குளங்களுக்கு நீர் வரத்து அதிகரித்து வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கடந்த, 26ம் தேதி, தர்மபுரியில், 16 மில்லிமீட்டர் மற்றும் மாரண்டஹள்ளியில், 17 மி.மீ., மழையளவு பதிவானது. மாவட்டத்தில் தற்போது வரட்டாறு அணையில், அதிகபட்சமாக, 21.01 அடி தண்ணீர் உள்ளது. இதற்கு அடுத்தப்படியாக தொப்பையாறு அணையில், 17.54 அடி, ஈச்சம்பாடி அணைக்கட்டில், 17.35 அடி, சின்னாற்றில், 15.64 அடி, கேசர்குழி, 6.88, வாணியாறு, 5.25 அடி, நாகாவதி அணையில், 3.28 அடி தண்ணீர் உள்ளது.

இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது:

தர்மபுரி மாவட்டத்தில் கடந்த ஆண்டு போதிய பருவமழை பெய்யவில்லை. இதனால், மாவட்டத்தில் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். குறிப்பாக, மானாவரி விவசாயிகள் சாகுபடி செய்த பயிர்களை காப்பாற்ற முடியாத நிலைக்கு தள்ளப்பட்டனர்.

இந்நிலையில், இந்தாண்டு மாவட்டத்தில், தொடர் மழை பெய்ததால், அணைக்கட்டில் நீர்மட்டம் சற்று உயர்ந்துள்ளது. குறிப்பாக, நல்லம்பள்ளி, கோவிலூர், லளிகம், மதிகோன்பாளையம் ரெட் ஏரி உட்பட மாவட்டத்தின் பல்வேறு ஏரிகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்து உள்ளது, என்றனர்.

## ஏறுமுகத்தில் பருப்பு விலை

சென்னையில் இரண்டு மாதங்களாக உணவு தானிய பருப்பு வகைகள் ஏறுமுகத்தில் செல்வதாக வியாபாரிகள் கூறுகின்றனர். கொத்தவால்சாவடியில் உள்ள உணவு தானிய மொத்த விலை விற்பனை கடைகளில், கடந்த இரண்டு மாதங்களாக பாசிப்பருப்பு மற்றும் உளுத்தம் பருப்பு வகைகள், கிலோவுக்கு 15 ரூபாய் முதல் 40 ரூபாய் வரை விலை உயர்ந்துள்ளன. இதுகுறித்து உணவு தானிய வியாபாரி செந்தில்குமார் கூறியதாவது: கடந்த இரண்டு மாதங்களுக்கு முன் பாசிப்பருப்பு, ஒரு கிலோ மொத்த விலையில் 65 ரூபாய் இருந்தது. தற்போது அதே பாசிப்பருப்பு, ஒரு கிலோ 95 ரூபாய்க்கு விற்பனையாகிறது. ஒரு கிலோ உளுத்தம் பருப்பு கடந்த மாதம் 65 ரூபாய் இருந்தது. தற்போது, 80 ரூபாய்க்கு விற்பனையாகிறது. துவரம் பருப்பு விலையில் பெரிய அளவில் மாற்றமில்லை. துவரம் பருப்பு முதல் ரகம், 69 ரூபாய் என்றளவில் உள்ளது. ஒரு கிலோ சர்க்கரை, 28 ரூபாயிலிருந்து 33.50 ரூபாயாக உயர்ந்து, தற்போது, 32 ரூபாய்க்கு விற்பனையாகிறது. இன்னும் ஒரு சில மாதங்களுக்கு பாசிப்பருப்பு விலை உயரும் என, எதிர்பார்க்கிறோம்.

உலகளவில் வரத்து குறைந்து விட்டதால் பாசிப்பருப்புக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது. சமீபத்தில் பர்மாவிலிருந்து இறக்குமதியான பாசிப்பருப்பு எடுபடவில்லை. அதனாலேயே இந்த விலை உயர்வு.

இவ்வாறு அவர் கூறினார்.

## தடை காலம் முடிந்தது தயாராகும் மீனவர்கள்

**மாமல்லபுரம்** : மீன் பிடி தடைகாலம் இன்று முடிவதால், மீண்டும் கடலுக்குள் செல்வதற்கான இறுதிக் கட்ட ஆயத்த வேலைகளில் மீனவர்கள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். காஞ்சிபுரம் மாவட்ட கடலோர பகுதியில், கொட்டிவாக்கம் முதல், ஆலம்பரைகுப்பம் வரை, 42 மீனவ கிராமங்கள் உள்ளன. 6,000க்கும் மேற்பட்ட மீனவர்கள், சாதாரண மற்றும் பைபர் படகுகளில், மீன்பிடிக்க கடலுக்குள் செல்கின்றனர். மாமல்லபுரம் கடற்பகுதியில் பாறை, சங்கரா, நவரை, பன்னா, கானாங்கெளுத்தி போன்ற வகை மீன்கள் கிடைக்கின்றன. மீன் இனப் பெருக்கத்திற்காக, ஆண்டுதோறும் ஏப்ரல் 15ம் தேதி முதல், மே 29ம் தேதி வரை, கடலில் மீன் பிடிக்க தடை விதிக்கப்படுகிறது. இந்த காலத்தில் படகுகளை பழுதுநீக்கி, பெயின்ட் அடித்து வந்தனர். புதிய வலை பின்னுதல் உள்ளிட்ட வேலைகளில் ஈடுபட்டனர். தடை காலம், இன்றுடன் முடிகிறது. இன்று நள்ளிரவில் மீனவர்கள் கடலுக்குள் மீன்பிடிக்க செல்கின்றனர். இதுகுறித்து, கல்பாக்கம் அடுத்த, சதுரங்கப்பட்டினம் (வடக்கு) மீனவர்கள் கூறும்போது, 'படகை தரைக்கு கொண்டு வர இழுக்கும்போது, அடிப்பகுதி தேய்ந்து துளை ஏற்படும். துளை வழியாக, படகுக்குள் கடல்நீர் உட்புகும். இந்த நீரை வெளியேற்ற சிரமப்படுவோம். தடைகாலத்தில், படகை சீரமைத்து, இன்ஜின் பழுதை சரி செய்து, பாறையில் சிக்கி கிழிந்த வலைகளை புதுப்பித்தோம்; புதிதாக வலை பின்னினோம்' என்றனர்.

## பசுக்களுக்கு இனப்பெருக்க முகாம்

**திருவள்ளூர்** : கறவைப் பசுக்கள் மற்றும் வெள்ளாடுகளுக்கான இனப்பெருக்க மருத்துவ பரிசோதனை மற்றும் குடற்புழு நீக்க முகாம், நாளை துவங்குகிறது. திருவள்ளூர் மாவட்டத்தில், விலையில்லா கறவைப் பசுக்கள் மூலம் சீரான பால் உற்பத்தித் திறனை பெருக்கவும், வெள்ளாடுகளின் எடையினை அதிகரிக்கவும், நாளை, 30 மற்றும் 31ம் தேதிகளில், கறவைப் பசுக்களுக்கு இனப்பெருக்க மருத்துவ பரிசோதனை, வெள்ளாடுகளுக்கு குடற்புழு நீக்க முகாம் நடைபெறவுள்ளது. அனைத்து விவசாயிகளும் தங்களது கால்நடைகளை இந்த முகாமிற்கு கொண்டு வந்து பயனடையலாம், என, திருவள்ளூர் ஆட்சியர் வீர ராகவ ராவ் தெரிவித்து உள்ளார்.

## 27,000 ஹெக்டரில் எஸ்.ஆர்.ஐ., சாகுபடி நடப்பாண்டுக்கு இலக்கு நிர்ணயம்

**ஈரோடு**: ஈரோடு மாவட்டத்தில், நடப்பாண்டு, 27,000 ஹெக்டர் பரப்பளவில், எஸ்.ஆர்.ஐ., (திருந்திய நெல் சாகுபடி) முறையில் சாகுபடி செய்ய, இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில், கடந்த, 1997ல் இருந்து எஸ்.ஆர்.ஐ., சாகுபடியை, தமிழக அரசு ஊக்குவித்து வருகிறது. 2006 முதல், திருந்திய நெல் சாகுபடிக்கு, விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது. இந்த முறை மூலம், ஏக்கருக்கு, 500 கிலோ வரை, பத்து சதவீதம், அதிக விளைச்சல் கிடைக்கும். அதேநேரம், சாகுபடி செலவு, ஏக்கருக்கு, 2,500 ரூபாய் வரை குறையும், என்பது குறிப்பிடத்தக்கது.

குறைந்த செலவில், அதிக மகசூல் பெறும் இம்முறை, வேளாண்மைக்கு, விவசாயிகளிடம் அதிக வரவேற்பை ஏற்படுத்தியது. ஈரோடு மாவட்டத்தில், 60 சதவீதத்துக்கும் ÷ மற்பட்ட விவசாயிகள், எஸ்.ஆர்.ஐ., சாகுபடிக்கு, மாறி வருகின்றனர்.

கடந்தாண்டு, தாளவாடி தவிர்த்து, ஈரோடு, மொடக்குறிச்சி, அம்மாபேட்டை, பவானி, பவானிசாகர், அந்தியூர், சத்தியமங்கலம் மற்றும் பெருந்துறை உள்ளிட்ட, 13 தாலுகாகளில், எஸ்.ஆர்.ஐ., முறை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. 60 சதவீதத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள், இம்முறையில் ஈடுபட்டனர்.

இதுகுறித்து, இணை இயக்குனர் செல்வராஜ் கூறியதாவது: கடந்தாண்டு, 21,700 ஹெக்டரில், எஸ்.ஆர்.ஐ., சாகுபடி செய்யப்பட்டது. அதிக மகசூல் கிடைப்பதால், 27,000 ஹெக்டருக்கு, இந்தாண்டு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வறட்சியால், தண்ணீர் பற்றாக்குறை நிலவுகிறது. எஸ்.ஆர்.ஐ., சாகுபடியை பொருத்தவரை, தமிழகத்திலேயே, ஈரோடு மாவட்ட விவசாயிகள் முன்னிலை வகிக்கின்றனர்.

பொதுவாக, ஹெக்டருக்கு, எட்டு டன் மகசூல் ஈட்ட முடியும். நசியனூரை சேர்ந்த விவசாயி பரமேஷ்வரன், 15 டன் ஈட்டி, சாதனை படைத்து, முதல்வரிடம் விருது பெற்றார்.

இந்தாண்டு, அவர், 25 டன்னுக்கு இலக்கு நிர்ணயித்து, சாகுபடி செய்துள்ளார். இதுபோன்ற, விவசாயிகளின் ஆர்வத்தால், இந்தாண்டும், அதிக மகசூல் ஈட்ட, வாய்ப்பு உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## தொழில் வகைகளை மையப்படுத்தி தனிக்குழு

**கோவை** : கோவை மாவட்டத்தில், 19,026 மகளிர் சுய உதவிக்குழுக்கள் உள்ளன. இதில், 7,760 குழுக்கள் கிராமப்புற பகுதிகளில் உருவாக்கப்பட்டவை. இந்த குழுக்களில், குழுவாக சேர்ந்து செய்யும் சுய தொழில்களை காட்டிலும், தனிநபர் தொழில்களே அதிகம். இது, கடன் திட்டங்கள் வாயிலாக தெரியவந்துள்ளது. இதை அதிகப்படுத்த, குழுக்கள் வாரியாக ஒரே தொழில் வகைகள் செய்வோரை இணைத்து, தனி குழுவாக உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்வாயிலாக, உற்பத்தி பொருளை அதிகப்படுத்தும் தொழில்நுட்பம், சந்தைப்படுத்துதலின் முக்கியத்துவம், கொள்முதல் நுணுக்கங்கள், செலவினங்களை கட்டுப்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு தகவல்களை அறிந்து கொள்ள முடியும். தவிர, ஒத்த தொழில் புரிவோராலும், குறிப்பிட்ட துறையில் சாதிக்க நினைப்போரையும் இணைப்பதன் வாயிலாக, உற்பத்தி பொருளை அதிகப்படுத்த முடியும் என, அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதற்கு முன்னோட்டமாக, கறவை மாடு வளர்ப்போரை ஒருங்கிணைத்து, கடன் திட்டங்கள் வழங்குதல், தொழில் முறையில் ஏற்படும் சிக்கல்களுக்கான தீர்வுகளை, வல்லுனர்கள் உதவியோடு எடுத்துரைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இப்படி, பஞ்சாயத்து வாரியாக செயல்படும் குழுக்களை இணைத்து, ஊராட்சி வாரியாக, ஒரு குழுவை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்ட முயற்சி வெற்றி பெறும் சமயத்தில், நகர்புற குழுக்களையும் திட்டத்தில் இணைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

## மலை மாவட்ட பழங்களுக்கு மவுசு

குன்னூர் : நீலகிரியில் விளையும் பழங்களை சுற்றுலா பயணிகள் அதிகளவில் ஆர்வத்துடன் வாங்கிச் செல்கின்றனர். நீலகிரியில் பிளம்ஸ், பேரி, ஆரஞ்சு, பப்ளிமாஸ், தாட்பூட், நாவல், பப்பினோ, பேஷன் புரூட், துரியன், அத்திப்பழம், மங்குஸ்தான், பீச், விக்கி பழம் உட்பட பல்வேறு வகை மருத்துவ குணமுடைய பழங்கள் ஏராளமாக உள்ளன. இவற்றின் தன்மையை அறிந்த சுற்றுலா பயணிகள் பலரும், இங்கு விளையும் பழங்களை அதிகளவில் விரும்பி வாங்கி செல்கின்றனர். மே மாத இறுதியில், ஊட்டிக்கு வந்த சுற்றலா பயணிகள் திரும்பி செல்லும்போது,

குன்னூர் - மேட்டுப்பாளையம் சாலையில், பல இடங்களிலும் விற்கப்படும் அரிய பழங்களை ஆர்வமுடன் அதிகளவில் வாங்கிச்செல்கின்றனர்.

## கோழிக்கழிவுகளை கொண்டு இயற்கை உரம்; நெலாக்கோட்டை ஊராட்சியில் துவக்கம்; மாவட்டம் முழுவதும் விரிவாக்க திட்டம்

**பந்தலூர்** : நீலகிரி மாவட்டத்தில் முதன் முறையாக, கோழிக்கழிவுகளை கொண்டு இயற்கை உரம் தயாரிக்கும் பணி நெலாக்கோட்டை ஊராட்சியில் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்தில் கூடலூர், பந்தலூர் தாலுகாவில் 300க்கும் மேற்பட்ட கோழி இறைச்சிக்கடைகள் செயல்பட்டு வருகின்றன. கோழி இறைச்சி கழிவுகளை கொட்டுவதற்கு தனியாக இடம் இல்லாத நிலையில் சாலையோரங்கள், நீரோடைகள், குடியிருப்பு பகுதிகளில் கொட்டி வருவதால் சுகாதார சீர்கேடு ஏற்பட்டு கடும் துர்நாற்றம் வீசி வருகிறது.

இதனை தடுக்க உள்ளாட்சி நிர்வாகங்கள் பலகட்ட நடவடிக்கை மேற்கொண்டும் தீர்வு காணப்படவில்லை. இந்நிலையில், தற்போது மாவட்டத்திலேயே முதல் கட்டமாக, கோழி கழிவுகளை கொண்டு இயற்கை உரம் தயாரிக்கும் பணி நெலாக்கோட்டை ஊராட்சியில் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. கேரளா மாநிலம் கொச்சினை தலைமையிடமாக கொண்டு செயல்படும், "எவர்கிரீன் நேச்சுரல் பவுண்டேஷன்' என்ற அமைப்பின் மூலம் இதற்கான பணி துவக்கப்பட்டுள்ளது. உரம் தயாரிப்பு கூடம் மற்றும் உரத்தின் தன்மை குறித்து, ஊராட்சி தலைவர் பிரேமலதா மற்றும் கவுன்சிலர்கள் ஆய்வு செய்தனர்.

அப்போது, உரம் தயாரிப்பாளர்கள் கூறுகையில், "நெலாக்கோட்டை ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் செயல்படும் கோழி இறைச்சி கடைகளிலிருந்து சேகரிக்கப்படும் கழிவுகள், தேங்காய் நார்,"அசிட்டோபேக்டர்' எனும் பாக்டீரியா ஆகியவை ஒன்றாக வைக்கப்பட்டு மூடிவைக்கப்படுகிறது. 45நாட்கள் கடந்த பின்னர் கழிவுகள் முற்றிலுமாக மட்கி உரமாக மாறுகிறது. இதிலுள்ள கோழி இறக்கைகள் மட்டும் வெளியேற்றப்படுகிறது. தற்போது, நெலாக்கோட்டை ஊராட்சியில் மட்டும் தினசரி 150 கிலோ கழிவுகள் சேகரிக்கப்படுகிறது. ஒரு கிலோ உரம் தயாரிக்க 7 ரூபாய் செலவு ஏற்படும் நிலையில், கிலோ ஒன்றுக்கு 10 ரூபாய்க்கு விற்க முடிவு செய்யப்பட்டுள்ளது. விரைவில் மாவட்டம் முழுவதும் இந்த திட்டத்தை செயல் படுத்த முடிவு செய்துள்ளோம்' என்றார்.

## நாளை கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கம் முகாம்

**கரூர்**: கரூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கால்நடை மருந்தகம், கால்நடை கிளை அலுவலகங்களில், நாளை மற்றும் மே, 31 தேதி ஆகிய, இரண்டு நாட்கள் குடற்புழு நீக்கம் முகாம் நடக்கிறது.

கலெக்டர் ஜெயந்தி தெரிவித்துள்ளதாவது: வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தில், கரூர் மாவட்டத்தில், 2011 - 12ம் ஆண்டில், 1,842 பயனாளிகளின், 7,368 கால்நடைகளும், 2012 - 13ம் ஆண்டில், 3,003 பயனாளிகளின், 12,012 கால்நடைகளும், 2013 - 14ம் ஆண்டில், 2,391 பயனாளிகளுக்கு, 9,564 கால்நகைளும் வழங்கப்பட்டுள்ளன. திட்டத்தின் மூலம் பயன்பெறும் பயனாளிகள், கால்நடைகளை நன்கு பராமரிக்க வேண்டும், என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

பயனாளிகளை ஊக்கப்படுத்தும் வகையில், பரிசு வழங்கப்படுகிறது. திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட வெள்ளாடுகள், செம்மறி ஆடுகளின் உற்பத்தி திறனை பெருக்கவும், எடையளவை அதிகரிக்கவும் கரூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கால்நடை மருந்தகம், கால்நடை கிளை அலுவலகங்களில் நாளை மற்றும் மே, 31 தேதி ஆகிய, இரண்டு நாட்கள் குடற்புழு நீக்கம் முகாம் நடக்கிறது.

இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## இன்றுடன் முடிகிறது மீன்பிடி தடை காலம் மீன்பிடி துறைமுகங்கள் ஜூன் 1ல் களைகட்டும்

**புதுக்கோட்டை**: மீன்பிடி தடை காலம் இன்றுடன் முடிவடைந்தாலும், நாளை (30ம் தேதி) விடுமுறை நாள் என்பதால், 31ம் தேதி முதல் கடலுக்குள் செல்வதென, புதுக்கோட்டை மாவட்ட விசைப்படகு மீனவர்கள் முடிவு செய்துள்ளனர்.

புதுக்கோட்டை மாவட்டத்தில், கோட்டைப்பட்டிணம் மற்றும் ஜெகதாப்பட்டிணம் மீன்பிடி துறைமுக பகுதிகளில் தங்கி, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த, ஆயிரக்கணக்கான மீனவர்கள் விசைப்படகுகள் மூலம் மீன்பிடி தொழில் செய்து வருகின்றனர். இவர்கள், வாரந்தோறும் சனி, திங்கள், புதன் கிழமைகளில் கடலுக்குள் சென்று மீன் பிடிக்கின்றனர். புதன் கிழமை மீன் பிடித்து விட்டு, மறுநாள் கரைதிரும்பும் மீனவர்கள், வெள்ளிக்கிழமை விடுமுறை நாள் என்பதால், அன்று கடலுக்குள் செல்வதில்லை.

மீன் வளத்தை பாதுகாக்கும் விதமாக, ஆண்டு தோறும், மீன்களின் இனப்பெருக்க காலமான ஏப்ரல், 15ம் தேதி முதல் மே, 29 வரை, 45 நாட்கள் விசைப்படகுகள் மூலம் மீன்பிடி தொழில் செய்ய தடை விதிக்கப்படும். தடை காலத்தில், படகுகள் மற்றும் வலைகளை மீனவர்கள் பழுது பார்த்து விடுவர். இந்த ஆண்டுக்கான மீன்பிடி தடைகாலம் இன்றுடன் (29ம் தேதி) முடிவடைகிறது. நாளை விடுமுறை என்பதால், 31ம் தேதி முதல் மீன்பிடி தொழிலுக்காக, கடலுக்குள் செல்வதென புதுக்கோட்டை மாவட்ட விசைப்படகு மீனவர்கள் முடிவுசெய்துள்ளனர்.

மீன்பிடி தடை காலத்தில், கட்டுமரங்கள் மூலம் பிடித்து வரப்படும் மீன்களை, வெளி மாநிலங்களைச் சேர்ந்த மீன் ஏற்றுமதி நிறுவனங்கள் மொத்தமாக கொள்முதல் செய்ததால், உள்ளூர் மார்கெட்டுகளில் மீன்வரத்து வெகுவாக குறைந்தது.

வரத்து குறைந்ததால், மீன்கள் விலை பல மடங்கு எகிறியது. தடை காலம் முடிந்துள்ளதால், ஜூன் 1ம் தேதி முதல் மீன் வரத்து அதிகரிக்கும், என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் கடந்த, 45 நாட்களாக களையிழந்து காணப்பட்ட கோட்டைப்பட்டிணம், ஜெகதாப்பட்டிணம் மீன்பிடி துறைமுகங்கள், ஜூன், 1ம்தேதி முதல் களைகட்டும்.

## மழையால் உயருது வெங்காயம் விலை

**திண்டுக்கல்** : மழையால், திண்டுக்கல் மார்க்கெட்டில் வெங்காயத்தின் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது.

சின்ன வெங்காயம் திருப்பூர், தாராபுரம், ஒட்டன்சத்திரம் பகுதிகளில் இருந்தும், பெரிய வெங்காயம், மகாராஷ்டிரா, குஜராத், கர்நாடகா மாநிலங்களில் இருந்தும் திண்டுக்கல் மார்க்கெட்டிற்கு கொண்டு வரப்படுகின்றன.

தினமும், சின்னவெங்காயம் 150 டன்னும், பெல்லாரி 160 டன்னும் கொண்டு வரப்படுகிறது. இங்கிருந்து மலேசியா, இலங்கை போன்ற நாடுகளுக்கு வெங்காயம் ஏற்றுமதியாகின்றன. தற்போது, மகாராஷ்டிரா, குஜராத், கர்நாடகா மாநிலங்கள் மற்றும் தமிழகத்தின் மேற்கு மாவட்டங்களில் நல்ல மழை பெய்துவருகிறது.

இதனால், திண்டுக்கல் மார்க்கெட்டிற்கு கொண்டு வரப்படும் வெங்காயத்தில் பாதி அழுகிவிடுகின்றன. அவற்றை வியாபாரிகள் கழிவுகளாக ஒதுக்கிவிடுவதால், அதன் விலையும் உயர்ந்துள்ளது.

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன், கிலோ ரூ.10 க்கு விற்கப்பட்ட பெரியவெங்காயம் (பெல்லாரி) ரூ.18 ஆகவும், கிலா ரூ.16 க்கு விற்கப்பட்ட சின்னவெங்காயம் ரூ.22 க்கும் தற்போது விற்கப்படுகிறது. தொடர்ந்து தென்மேற்கு பருவமழை பெய்ய வாய்ப்புள்ளதால், வெங்காயத்தின் விலையும் உயர வாய்ப்புள்ளதாக, வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

வியாபாரி ஒருவர் கூறுகையில், ""மழையால் வெங்காயம் அழுகிவிடுவதால், விலை உயர்ந்துள்ளது," என்றார்.

## திராட்சையில் சாம்பல் நோய்; கட்டுப்படுத்த ஆலோசனை

**தேனி**: திராட்சையில் பரவி வரும் சாம்பல் நோயை கட்டுப்படுத்த தோட்டக்கலைத்துறை ஆலோசனை வழங்கி உள்ளது.

திராட்சை தோட்டங்களில் அடிச்சாம்பல் மற்றும் மேல்சாம்பல் நோய் தாக்கும் சூழ்நிலை உள்ளது. இந்த நோய் இலைகளை தாக்கும். பூங்கொத்தும், பிஞ்சுகளும் கூட பாதிக்கப்படுகிறது.

இலையின் அடிப்பாகத்தில் வெண்மை நிற பூஞ்சாண வளர்ச்சி காணப்படும். அதற்கு நேர் எதிர் இலையின் மேல் பகுதியில் மஞ்சள் நிற புள்ளிகள் தோன்றும். நோயின் தன்மை தீவிரமடைந்த நிலையில், இலையின் மேல்பகுதியில் பிரவுன் கலரில் இலைப்புள்ளிகள் காணப்படும்.

புதிதாக முதிர்ந்த இலைகளையும் இந்நோய் தாக்கும். நோய் பாதித்த பாகங்கள் பழுப்பு நிறமாக மாறி செயலிழந்து விடும்.

இந்நோயை கட்டுப்படுத்த போர்டோக்கலவை ஒரு சதவீதம், மேன்கோசெப் 0.2 சதவீதம், ரிடோமில் 0.2சதவீதம், அலியட்டில் 0.2 சதவீதம் இவற்றில் ஏதாவது ஒன்றை கைத்தெளிப்பான் மூலம் நன்கு நனையும் வகையில் 15நாள் இடைவெளியில் தெளிக்க வேண்டும்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

**முடிந்தது கத்திரி வெயில்**



**சென்னை:** தமிழகத்தை கடந்த 24 நாட்களாக வாட்டி வதைத்து வந்த கத்திரி வெயில் நேற்றுடன் முடிந்தது. கடந்த 4ம் தேதி தமிழகத்தில் கத்திரி வெயில் காலம் தொடங்கியது.

பெரும்பாலான நாட்களில் வெயிலின் அளவு 100 டிகிரியாகவே இருந் தது. மேலும் தமிழகத்தில் சில இடங்களில் வெயில் அளவு 100 டிகிரியை தாண்டியது. சென்னையில் 2 நாள் மட்டும் 110 டிகிரி சுட்டெரித்தது.

இனி வறுத்தெடுக்கும் வெயில் குறையலாம். பருவமழை தொடக்கம்: தென்மேற்கு பருவமழை ஜூன் 5ம் தேதி தொடங்கும் என்று புவி அமைப்பு முறை அறிவியல் அமைப்பு (இஎஸ்எஸ்ஓ), புவி அறிவியல் அமைச்சகம் (எம்இஎஸ்), இந்திய வானிலை துறை ஆகியவை கணித்துள்ளன.

கடந்த ஆண்டு ஜூன் 3ம் தேதி தென் மேற்கு பருவமழை காலம் தொடங்கியது. 2012ல் ஜூன் 1ம் தேதி தொடங்கியது.

ஆனால் 2011ல் மே 31ம் தேதியே தொடங்கிவிட்டது.

**<u>அக்னி வெயிலின் கடைசி நாளில் டெல்டாவில் பலத்த மழை</u>**



**திருச்சி:** தமிழகத்தில் மக்களை வாட்டி வதைத்த அக்னி நட்சத்திர வெயில் நேற்றுடன் நிறைவடைந்தது. இதனால், பல இடங்களில் வெப்பத்தின் தாக்கம் அதிகளவில் இருந்தது. இந்நிலையில் காவிரி டெல்டா மாவட்டங்களின் பல இடங்களில் நேற்று பலத்த மழை பெய்தது. நாகை மாவட்டம் செம்பனார்கோவில் பகுதியில் நேற்று மதியம் 2.30 மணி முதல் 4.30 மணி வரை பலத்த மழை பெய்தது. பரசலூரில் வீசிய சூறைக்காற்றில் மரங்கள் விழுந்ததில் மின் ஒயர்கள் அறுந்து விழுந்தது. இதனால் மின் தடை ஏற்பட்டது. தஞ்சை, மயிலாடுதுறை, புதுக்கோட்டை, கரூர் ஆகிய இடங்களில் நேற்று மாலை பலத்த சூறை காற்று, இடி மின்னலுடன் கனமழை பெய்தது. இதன் காரணமாக தஞ்சை, புதுக்கோட்டை பகுதிகளில் மின் தடை ஏற்பட்டது.

இந்த மழை காரணமாக வெப்பக்காற்று நீங்கி குளிர்ந்த காற்று வீசியது. மின்னல் தாக்கியதில் விவசாயி பலி: திருவாரூர் மாவட்டம் நன்னிலம் அடுத்த பாவட்டக் குடி காளியம்மன்கோயில் தெருவைச் சேர்ந்தவர் ராஜரத்தினம் (55). இவரும், அதே கிராமத்தைச் சேர்ந்த செல்லையன், சுப்பிரமணியன், கலியமூர்த்தி உள்ளிட்டோர் நேற்று பேரளத்திற்கு விவசாய வேலை செய்து கொண்டிருந்தபோது சூறைக்காற்றுடன் மழை பெய்தது. அப்போது மின்னலுடன் இடிஇடித்தது. மின்னல் தாக்கியதில் ராஜரத்தினம் மயங்கி விழுந்தார். உடன் வேலை செய்தவர்கள் அவரை பேரளம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கொண்டு சென்றனர். அங்கு பரிசோதித்த டாக்டர்கள் அவர் இறந்துவிட்டதாக தெரிவித்தனர்.

**ஏற்பாடுகள் தீவிரம் ஜூன் 7, 8ம் தேதிகளில் ஏற்காடு கோடைவிழா**



**சேலம்**: ஏற்காட்டில் பிரபலமான கோடை விழா வரும் ஜூன் 7,8 ஆகிய நாட்களில் நடக்கிறது. இதற்கான ஏற்பாடுகள் தொடங்கியுள்ளன. தமிழகத்தில் ஊட்டி, கொடைக்கானல் போன்ற குளிர்பிரதேசங்களில் ஆண்டு தோறும் கோடை விழா கொண்டாடப்படுகிறது. ஏழைகளின் ஊட்டி என்று அழைக்கப்படும் ஏற்காட்டில் ஆண்டு தோறும் மே மாதத்தில் மூன்று நாட்கள் கோடைவிழா நடத்தப்படும். இதையொட்டி சிறப்பு மலர்கண்காட்சி, கலைநிகழ்ச்சிகள் நடைபெறும். நாடாளுமன்றத் தேர்தலையொட்டி நடத்தை விதிமுறைகள் அமலில் இருந்ததால் நடப்பாண்டில் கோடை விழாவிற்கான அறிவிப்புகள் எதுவும் இதுவரை வெளியிடப்படாமல் இருந்தது. இந்நிலையில் ஏற்காட்டில் வரும் ஜூன் 7மற்றும் 8ம்தேதிகளில் கோடைவிழா நடத்துவதற்கான ஆயத்த பணிகள் தொடங்கியுள்ளது.

இது குறித்து அதிகாரிகள் கூறியதாவது: கோடைவிழா நடத்துவது குறித்து கலெக்டர் மகரபூஷணம் ஆலோசனை நடத்தினார். வரும் ஜூன் 7மற்றும் 8ம்தேதிகளில் கோடைவிழா நடக்க வாய்ப்புள்ளது.

ஏற்கனவே அண்ணாபூங்காவில் தோட்டக் கலைத்துறை சார்பில் சிறப்பு மலர்கண்காட்சி மற்றும் காய்கறி கண்காட்சி அமைப்பதற்கான பணிகள் துவக்கப்பட்டுள்ளது. மேலும் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து 20ஆயிரம் அரியவகை மலர்களை கொண்டு வந்து பூந்தொட்டிகள் அமைப்பதற்கான ஏற்பாடுகளும் மும்முரமாக நடந்து வருகிறது. இவ்வாறு அதிகாரிகள் கூறினர்.

**<u>இறங்கு முகத்தில் மூட்டைக்கு ரூ.700 சரிந்தது</u>**



நாமகிரிப்பேட்டை: நாமகிரிப்பேட்டையில் மஞ்சள் ஏலம் வாரந்தோறும் செவ்வாய்கிழமையன்று நடக்கும். ராசிபுரம் வேளாண் உற்பத்தியாளர்கள் விற்பனை கூட்டுறவு சங்கம் (ஆர்.சி.எம்.எஸ்) உட்பட தனியார் மண்டிகள் உள்ளன. இந்த மண்டிகளுக்கு, இரண்டு வாரத்திற்கு பிறகு கடந்த வாரம் ஏலம் நடந்ததால் 2,884 மூட்டைகள் ரூ.1.10 கோடிக்கு விற்பனையானது.

நேற்று முன்தினமும் 2 ஆயிரம் மூட்டைகளுக்கு மேல் விற்பனைக்கு வந்திருந்தது. விரலி ரகம் அதிகப்பட்சமாக மூட்டை ரூ.7,877க்கும் குறைந்தபட்சம் ரூ.6,653 க்கும் ஏலம் போனது.

அதேபோல் குண்டு ரகம் அதிகபட்சமாக மூட்டை ரூ.6,669க்கும் குறைந்தபட்சம் ரூ.5,040க்கும் ஏலம் போனது.

பனங்காலி ரகம் அதிகபட்சமாக ரூ.15,600க்கும் குறைந்தபட்சமாக ரூ.8,300 க்கும் விலை போனது. விரலி 1,398 மூட்டைகளும் உருண்டை 657 மூட்டைகளும் பனங்காலி 150 மூட்டைகளும் என மொத்தம் 2,205 மூட்டைகள் ரூ.80 லட்சத்திற்கு விற்பனையானது.

சராசரியாக மஞ்சள் மூட்டை ரூ.6,700க்கும் விற்றது.

கடந்த வாரத்தை விட மூட்டை இந்த வாரம் மஞ்சள் ரூ.700 குறைவாக விற்றதால் விவசாயிகள் கவலையடைந்தனர்.

## இறக்குமதி சர்க்கரைக்கு வரியை உயர்த்த கோரிக்கை



**புதுடெல்லி**: கரும்பு விவசாயிகளின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு சர்க்கரை இறக்குமதி மீதான வரியை 40%மாக உயர்த்த வேண்டும் என்று மத்திய அரசுக்கு சர்க்கரை ஆலைகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. இதுகுறித்து இந்திய சர்க்கரை ஆலைகள் சங்க நிர்வாகிகள் கூறுகையில், 'சர்க்கரை தேவையை பூர்த்தி செய்வதாக கூறி சர்க்கரை இறக்குமதி செய்யப்படுகிறது. இப்படி இறக்குமதி செய்யப்படும் சர்க்கரை மீதான இறக்குமதி வரி 15% வசூலிக்கப்படுகிறது. இந்நிலையில், வெளிநாடுகளில் இருந்து அதிகளவில் சர்க்கரை இறக்குமதி செய்வதால் உள்ளூர் சர்க்கரை ஆலைகளும் பாதிக்கப்படுகிறது.

அதுமட்டும் அல்லாது, கரும்பு விவசாயத்தை நம்பி இருக்கும் சுமார் 5 கோடி விவசாயிகளும் பாதிக்கப்படுகின்ற னர். இவற்றை கருத்தில் கொண்டு விவசாயிகளை யும், சர்க்கரை ஆலைகளை யும் பாதுகாக்கும் வகையில் இறக்குமதி சர்க்கரை மீதான வரியை 40%மாக உயர்த்த வேண்டும்' என்றனர்.

## 45 நாள் தடைகாலம் முடிந்தது இன்று நள்ளிரவு முதல் மீனவர்கள் கடலுக்கு செல்கின்றனர் விசை படகுகள் தயார்

**சென்னை,** : தமிழகத்தில் உள்ள 12 கடலோர மாவட்டங்கள், புதுச்சேரி, காரைக்கால் மற்றும் ஆந்திரா உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த 5 லட்சத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள், 30 ஆயிரம் விசைபடகுகள் மூலம் வங்க கடலில் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆண்டுதோறும், மீன்கள் இனப்பெருக்கத்துக்காக ஏப்ரல் 15ம் தேதி முதல் ம் தேதி வரை 45 நாட்களுக்கு கடலில் மீன்பிடிக்க தடை விதிக்கப்படுகிறது. அதன்படி, கடந்த ஏப்ரல் 14ம் தேதி நள்ளிரவு முதல் இந்த தடை அமலுக்கு வந்தது. இதையடுத்து, மேற்கண்ட பகுதிகளை சேர்ந்த மீனவர்கள், மீன்பிடிக்க கடலுக்குள் செல்லவில்லை. இதனால், மீன்வரத்து குறைந்தது.

மேலும், கடலில் குறிப்பிட்ட தூரத்தில் பைபர் படகு மற்றும் கட்டு மரங்களில் சென்று மீன்பிடித்து வந்த மீனவர்களுக்கு, குறைந்தளவு மீன்களே கிடைத்தன. இந்த மீன்களும் அதிக விலைக்கு விற்றதால், சமீப காலமாக மீன்கள் விலை பன்மடங்கு உயர்ந்தது.

இருப்பினும், மீன் பற்றாக்குறையை சமாளிக்க, கேரள மாநிலத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட மீன்கள், சிந்தாதிரிப்பேட்டை, கோயம்பேடு உள்ளிட்ட பல பகுதிகளில் விற்பனை செய்யப்பட்டன. இதனால், மீன் பிரியர்களுக்கு ஓரளவு தேவை பூர்த்தியானது.

கடந்த 45 நாட்களாக கடலுக்குள் செல்லமால் இருந்த மீனவர்கள், தங்களது படகுகள், வலைகளை சரிசெய்யும் பணியில் ஈடுபட்டனர். தற்போது, அவை தயார் நிலையில் உள்ளன. அரசு விதித்த 45 நாள் தடைகாலம் இன்றுடன் முடிவதால், இன்று நள்ளிரவு 1 மணிக்கு மேல், மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க செல்கின்றனர்.காசிமேடு மீன்பிடி துறைமுகத்தில் இருந்து சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களை சேர்ந்த நூற்றுக்கணக்கான மீனவர்கள், தங்களது விசை படகுகளில் மீன்பிடிக்க செல்கின்றனர். கடலுக்கு மீன்பிடிக்க செல்லும் மீனவர்கள், நடுக்கடலில் 1 வாரம் முதல் 15 நாட்கள் வரை தங்குவதால், அதற்கு தேவையான டீசல், குடிநீர், உணவு பொருட்கள், கடலில் பிடிக்கும் மீன்களை பாதுகாக்கும் ஐஸ் கட்டிகள் ஆகியவற்றை கடந்த 2 நாட்களாக தயார்படுத்தி வைத்துள்ளனர். அவை அனைத்தையும் நேற்று இரவே தங்களது படகுகளில் ஏற்றிவிட்டனர்.கடந்த ஆண்டு, மீன்பிடி தடைகாலம் முடிந்து, மீன்பிடிக்க சென்ற மீனவர்களுக்கு, எதிர்பார்த்த அளவுக்கு மீன்கள் கிடைக்காமல் ஏமாற்றமே மிஞ்சியது. இதற்கு மீன்கள் இன பெருக்கத்துக்காக மீன் வளத்துறை சரியான ஏற்பாடுகள் செய்யாததே காரணம் என மீனவர்கள் குற்றம் சாட்டினர். ஆழ்கடலில் பவள பாறைகள் அழிந்துவிட்ட காரணத்தால், மீன்கள் தங்கி குஞ்சு பொரிக்க இடம்

இல்லை என கூறப்பட்டது. மீன் வளத்துறை சார்பில், செயற்கை பவள பாறைகளை உருவாக்கி, அவற்றை ஆழ்கடலில் விட்டுள்ளனர். எனவே, இந்த ஆண்டு, தடைகாலம் முடிந்து மீன்பிடிக்க செல்லும் மீனவர்களுக்கு எதிர்பார்த்த அளவு மீன்கள் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜூன் 15 முதல்கேரளாவில் மீன்பிடிக்க தடை கேரள மாநில கடற்கரை பகுதியில், வரும் ஜூன் 15 முதல் ஜூலை 29ம் தேதி வரை மீன்பிடி தடை காலம் அமலுக்கு வருகிறது. இந்த நேரத்தில், மீன்பிடி தடை காலம் முடிந்து கடலுக்கு செல்லும் மீனவர்கள், கொண்டு வரும் மீன்கள் அதிகளவில் இருந்தால், கேரள மாநிலத்துக்கு ஏற்றுமதி செய்து, நல்ல விலைக்கு விற்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## <u>3 ஆண்டுகளுக்குப் பிறகு உடுமலையில் கனமழை</u>

**உடுமலை**,:உடுமலையில் கடந்த 3 ஆண்டுகளுக்குப்பிறகு நேற்று கனமழை கொட்டியது. ரோடுகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியதால் போக்குவரத்து ஸ்தம்பித்தது.

தமிழகத்தில் கடந்த சில மாதங்களாக கடும் வெயில் அடிக்கிறது. கடந்த 8ம் தேதி துவங்கிய அக்னிநட்சத்திரம் நேற்றுடன் முடிந்தது. நேற்று உடுமலையில் கனமழை கொட்டியது. மாலை 4 மணிக்கு துவங்கிய மழை 2மணி நேரம் கொட்டி தீர்த்தது. தொடர்ந்து தூறலாக இருந்தது. இந்த மழையால் நகரில் நிலவிய வெப்பம் தணிந்தது. ரோடுகளில் மழை வெள்ளம் பெருக்கெடுத்தோடியது. கூடவே சாக்கடையும் கலந்து வெளியேறியது.

இதனால் நகரின் பல பகுதிகளில் துர்நாற்றம் வீசியது. பொள்ளாச்சி-தளி ரோடு சந்திப்பில் மழை வெள்ளம் தேங்கியதால் வாகனங்கள் மெதுவாக சென்றன. இதனால் நகரில் போக்குவரத்து ஸ்தம்பித்தது.

மத்திய பஸ் நிலையத்தில் மழை வெள்ளம் தேங்கி குளம் போல் காட்சியளித்தது. இருக்க இடமில்லாமல் பயணிகள் நெருக்கியடித்தபடி பஸ்சுக்காக காத்திருந்தனர். பஸ்சில் ஏற முடியாத அளவுக்கு மழை பெய்ததால் ஏராளமான பயணிகள் காத்திருந்தனர்.சத்திரம் வீதி, தளிரோடு,வ.உ.சி.வீதி உள்ளிட்டவற்றில் மழை வெள்ளம் பெருக்கெடுத்தது. பாதாள சாக்கடை திட்டத்துக்காக அனைத்து வீதிகளிலும் குழி தோண்டி குழாய் பதிக்கப்பட்டுள்ளது. மண்ணை சரியாக போட்டு

மூடாததால் வீதிகள் அனைத்தும் நாசமாயின. இரு சக்கர வாகனத்தில் செல்வோரும் நடந்து செல்வோரும் கீழே விழுந்து விபத்துக்குள்ளாயினர். உடுமலை சுற்றுவட்டார கிராமங்களிலும் இந்த மழை இருந்தது. மடத்துக்குளம் வட்டாரத்திலும் பலத்த மழை பெய்தது.

இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

## மழைநீரை கான்டூர் கால்வாயில் கலக்காமல் சூப்பர் பேசேஜ் அமைத்து தடுப்பணைகளுக்கு விட கோரிக்கை

**திருப்பூர்**, : மழைநீரை கான்டூர் கால்வாயில் கலக்காமல் சூப்பர்பேசேஜ் அமைத்து தடுப்பணைகளுக்கு விட வேண்டும் என குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

திருப்பூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில், கலெக்டர் கோவிந்தராஜ் தலைமையில் நேற்று நடைபெற்றது. இதில் விவசாயிகள் பல்வேறு பிரச்னைகள் குறித்து பேசினர்.

அப்போது காட்டூர், தேவனூர்புதூர் விவசாயிகள் சார்பில், அருள்செந்தில்குமார் பேசியதாவது: உடுமலை வட்டாரம் ராணவனாபுரம், கரட்டூர், வலையப்பாளையம், தேவனூர்புதூர் கிராம எல்லைகளுக்கு உள்பட்ட நான்-ஆயக்கட்டுக்குப்பட்ட காண்டூர் கால்வாய் கீழ் வருகின்ற பல ஆயிரக்கணக்கான விவசாய விளைநிலங்களுக்கு நீர் ஆதாரமாக இருந்து வந்த கோமாளி, ஊத்துப்பள்ளம், வறப்பள்ளம், வெட்டுப்பள்ளம், வெள்ளைபாளபள்ளம் போன்ற ஓடைகளில் வழியாக வரும் மழைநீர் தான் விவசாயத்திற்கு ஆதரமாக உள்ளது.

மழைநீரை தேக்குவதற்காக ஏராளமான தடுப்பணைகள் அரசால் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன.

கடந்த 9ம் தேதி குடிநீர் வேண்டி சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு மனு அளித்தும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கான்டூர் கால்வாய் மறுசீரமைப்பின்போது, ஓடைகளில் வருகின்ற தண்ணீர் சூப்பர் பேசேஜ் மூலமாக காண்டூர் கால்வாயில் கலக்காமல் கீழே விட மனு அளித்தும் எந்தவிதமான நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை.

இதனால் மழைக்காலங்களில் அவ்வப்போது கான்டூர் கால்வாய் அமைந்துள்ள சட்டர்களின் வழியாக மழைநீரை அந்தந்த ஓடைகளின் வழியாக விட்டு வந்தனர். அதனால் ஓடைகளின் கீழ் உள்ள குளம், குட்டைகள், தடுப்பணைகள் மூலமாக நிலத்தடி நீர் உயர்ந்தது.

எங்களது விவசாய தேவைகளுக்கு உரிய நீரும் கிடைத்தது. தற்போது, கடந்த 4, 5ம் தேதிகளில் பெய்த மழைநீர் தடுப்பணைகளுக்கு வராமல், காண்டூர் கால்வாய் வழியாக திருமூர்த்தி அணைக்கு சென்றுவிட்டது.

மழைக்காலத்தில் வரும் தண்ணீர் கான்டூர் கால்வாயில் கலக்காமல், சூப்பர் பேசேஜ் அமைத்து தடுப்பணைகளுக்கு தண்ணீரை விடவேண்டும். அதன்மூலமாக நிலத்தடிநீர்மட்டம் உயர்ந்து, விவசாயத்திற்கு தேவையான நீராதாரம் கிடைக்கும். அதுவரை, ஓட்டைகளில் வரும் மழைநீர் தடுப்பணைகளுக்கு வரும் வகையில், கான்டூர் கால்வாயில் அடைக்கப்பட்ட ஷட்டர்களை திறந்துவிட வேண்டும். இவ்வாறு பேசினார். கலெக்டரும் நல்ல யோசனையாக உள்ளது. அதிகாரிகளுடன் ஆலோசித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும், என தெரிவித்தார்.

## <u>கால்நடைகளுக்கு இலவச சிகிச்சை முகாம்</u>

**ஜீயபுரம்**, : திருச்சி மாவட்டம் அந்தநல்லூர் கிளை கனரா வங்கி சார்பில் புலிவலம் கிராமத்தில் இலவச கால்நடை சிகிச்சை முகாம் நடந்தது. கிராம ஏற்பு திட்டத்தின் கீழ் கனரா வங்கி தத்தெடுத்துள்ள புலிவலம் கிராமத்தில் முதுநிலை மேலாளர் கிருஷ்ணகுமார் ஆலோசனைப் படி முகாம் நடந்தது. கொடி யாலம் ஊராட்சி மன்ற தலைவர் மருதை தலைமை வகித்தார்.

அந்தநல்லூர் கால்நடை மருந்தக மருத்துவர் டாக்டர் செந்தில்குமார், கால்நடை உதவியாளர் நந்தகுமார் மற்றும் பணியாளர்கள் கலந்துகொண்டு 198 பசு, 26 கன்று, 79 ஆடுகள் என 203 கால்நடைகளுக்கு பரி சோதனை மற்றும் சிகிச்சை அளித்தனர்.

முகாமில் சினை பரிசோதனை, செயற்கை முறை கருவூட் டல், மலடு நீக்கம், குடற்புழு நீக்கம், நோய் தடுப்பூசி போடப்பட்டது. முகாம் ஏற்பாடுகளை வங்கி களப்பணியாளர்கள் வெங்கடே சன், பாக்கியராஜ் செய்த னர்.

## <u>30, 31ம் தேதிகளில் ஆடுகளுக்கு இலவச குடற்புழு நீக்க முகாம்</u>

**கரூர்**, : கலெக்டர் ஜெயந்தி விடுத்துள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது; விலையில்லா வெள்ளாடுகள், செம்மறியாடுகள் வழங்கும் திட்டங்கள் மூலம் வழங்கப்பட்ட வெள்ளாடுகள், செம்மறியாடுகளின் உற்பத்தி திறனை பெருக்கவும், எடையை அதிகரிக்கவும், கரூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கால்நடை மருந்தகம், கால்நடை கிளை நிலையங்களிலும் வரும் 30 மற்றும் 31ம் தேதிகளில் குடற்புழு நீக்க முகாம் நடைபெறுகிறது. விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டங்களின் மூலம் பயன்பெற்ற பயனாளிகள் மட்டும் அல்லாமல் அனைவரும் இந்த முகா மில் பயன்பெறலாம் என கலெக் டர் தெரிவித்துள்ளார்.

## <u>இரட்டைமடி மீன் பிடிப்பை முற்றிலும் கைவிட வேண்டும்</u>

**ராமேஸ்வரம்**, : இரட்டைமடி வலை மீன்பிடிப்பை முற்றிலும் கைவிட வேண்டும் என மீனவர் சங்க கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

மீன்பிடி தடைகாலம் முடிந்து வரும் 31ம் தேதி முதல் விசைப்படகுகள் கடலுக்கு செல்கின்றன. இந்நிலையில் நேற்று ராமேஸ்வரம் துறைமுக கடற்கரையில் விசைப்படகு மீனவர் சங்க பிரதிநிதிகளின் கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு சிறுபான்மை விசைப்படகு மீனவர் சங்க தலைவர் மகத்துவம் தலைமை வகித்தார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்: தடைகாலம் முடிந்து மீன்பிடிக்க செல்லும் விசைப்படகு மீனவர்கள் 31ம் தேதி அதிகாலை 6 மணிக்குத்தான் கடலுக்கு செல்ல வேண்டும். படகின் உரிமம், மீனவர்களின் அடையாள அட்டை உள்ளிட்ட ஆவணங்களை தவறாமல் கொண்டு செல்ல வேண் டும். இலங்கை கடற்கரை பகுதியில் மீன்பிடிக்கக் கூடாது.

இந்திய-இலங்கை மீனவர்களின் நல்லுறவுக்கும், மீன்பிடி தொழிலுக்கும் நீண்ட கால பிரச்சனையாக உள்ள இரட்டைமடி மீன்பிடிப்பை மீனவர்கள் முற்றிலும் கைவிட வேண்டும்.

மீறினால் அனைத்து சங்கங்களின் ஒத்துழைப்போடு, இரட்டைமடி மீன்பிடிப்பில் ஈடுபடும் படகுகள் கரையேற்றப்பட்டு, படகின் உரிமையாளர் மற்றும் மீனவர்கள் மீது காவல்துறை நடவடிக்கை எடுக்க வலியுறுத்தப்படும்.

மேலும், இலங்கை சிறையில் நீண்ட காலமாக அடைக்கப்பட்டிருந்த மீனவர்களை விடுதலை செய்த இலங்கை அதிபர் ராஜபக்ஷேவுக்கும், நடவடிக்கை எடுத்த மத்திய அரசுக்கும் கூட்டத்தில் நன்றி தெரிவிக்கப்பட்டது. மீனவர் பிரதிநிதிகள் போஸ், சேசுராஜ், தேவதாஸ், எமரிட் உட்பட ஏராளமானோர் கூட்டத்தில் பங்கேற்றனர்.

## <u>கடல் மீன் ஆராய்ச்சி நிலையத்தில் தொழில் முனைவோருக்கு வண்ண மீன்கள் வளர்ப்பு பயிற்சி</u>

**மண்டபம்,** : மண்டபம் மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிலையத்தில் தொழில் முனைவோர்களுக்கு வண்ண மீன்கள் வளர்ப்பு குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது. மண்டபம் மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிலையத்தில் மீனவர்களுக்கு, கடலில் கூண்டு வைத்து மீன் வளர்க்கும் பயிற்சி அளிக்கப்பட்டது.

ராமேஸ்வரம், பாம்பன், மண்டபம் பகுதியை சேர்ந்த மீனவர்கள் தற்போது கடலில் கூண்டு வைத்து, கடல் விரால் மீன் வளர்த்து வருகின்றனர்.

இதை தொடர்ந்து நேற்று இங்கு வண்ண மீன்கள் வளர்ப்பு குறித்து தொழில் முனைவோர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. ஆராய்ச்சி நிலைய இயக்குநர் கோபாலகிருஷ்ணன் பயிற்சியை துவக்கி வைத்தார்.

வண்ண மீன் நிலையத்தை அவர் திறந்து வைத்தார்.

அவர் பேசுகையில்,

“16 வகையான வண்ண மீன்கள் உள்ளன. வண்ண மீன்களுக்கு உலக அளவில் நல்ல வரவேற்பு உள்ளது. இதனால் வண்ண மீன்கள் தேவை அதிகரித்து வருகிறது. இந்தியாவில் இருந்து ஒரு சதவீதம் மட்டும் வண்ண மீன் ஏற்றுமதி செய்யப்படுகிறது. மிகவும் சிறிய நாடான இலங்கையில் இருந்து 8 சதவீதம் வண்ண மீன்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

கடந்த ஆண்டு இந்தியாவில் இருந்து ரூ.19 ஆயிரத்து 500 கோடி மதிப்பிலான மீன்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

இதில் ரூ.6.5 கோடி மதிப்பிலான வண்ண மீன்கள் மட்டுமே ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. இது சர்வதேச அளவில் ஒரு சதவீதம் மட்டுமே. இந்த பயிற்சியின் மூலம் வண்ண மீன்கள் வளர்ப்பில் ஆர்வமுடன் ஈடுபட்டு, ஏற்றுமதி அளவை அதிகரித்து கொள்ளலாம்“ என்றார்.

நிகழ்ச்சியில் மண்டபம் மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானி கோபகுமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**<u>மண் பரிசோதனை ஆய்வு முகாம்</u>**

**ராஜபாளையம்,** : ராஜபாளையம் வேளாண் பகுதியில் விவசாயிகளிடம் மண் பரிசோதனை முகாம் நடந்தன.

ராஜபாளையம் வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்திற்கு உட்பட்ட சொக்கநாதன்புத்தூர், கோவிலூர், தேவதானம் அரசு விதை பண்ணை, புதுப்பாளையம், கொருக்காம்பட்டி,மேலூர் துரைச்சாமிபுரம், மேலராஜகுலராமன் ஆகிய கிராமங்களில் மாவட்ட வேளாண் தரக்கட்டுப்பாடு உதவி இயக்குனரகம் சார்பில் நடமாடும் மண் பரிசோதனை ஆய்வு வாகனம் மூலம் விவசாயிகளிடம் மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டன.

இதுகுறித்து ராஜபாளையம் வேளாண்மை உதவி இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி கூறுகையில்,

நடமாடும் மண் பரிசோதனை ஆய்வு வாகனம் விவசாய இடங்களில் நான்கு தினங்களாக பல கிராமங்களில் சுமார் 289 மண் மாதிரிகள் விவசாயிகளிடம் இருந்து சேகரித்து, அந்த இடத்திலேயே வேளாண்மை அலுவலர் கோகிலா, உதவி வேளாண்மை அலுவலர் கோகிலாதேவி ஆகியோர் ஆய்வுகள் மேற்கொண்ட முடிவுகளை விவசாயிகளிடம் வழங்கினர்.

மேற்கண்ட கிராமங்களில் விவசாயிகளிடம் மண் மாதிரிகள் சேகரிக்க உதவி வேளாண்மை அலுவலர்கள் ரமேஷ், ஞானகுருவு, ஜெகநாதன், ரவி, அழகுமாணிக்கவல்லி ஆகியோர் ஒத்துழைத்தனர்.

விவசாயிகளும் மண் மாதிரி முடிவுகள் உடனுக்குடன் வழங்கியதில் மகிழ்ச்சி தெரிவித்தனர் என்றார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**கோடைக்கான அனைத்து மேலாண்மைகளையும் தொடரவேண்டும்**

**நாமக்கல்,**

தென்மேற்கு பருவ மழைக்காலம் தொடங்கும் வரை கோடைக்கான அனைத்து மேலாண்மைகளையும் தொடரவேண்டும் என ஆராய்ச்சி நிலையம் தெரிவித்து உள்ளது.

ஆராய்ச்சி நிலையம்

நாமக்கல் மாவட்டத்தில் இன்றும், நாளையும் நிலவும் வானிலை குறித்து கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில் வெளியிடப்பட்டு உள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

அடுத்த 2 நாட்களுக்கு வானம் லேசான மற்றும் பொதுவான மேகமூட்டத்துடன் காணப்படும். இன்று 5 மி.மீ, நாளை மறுநாள் 17 மி.மீ. மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. காற்று மணிக்கு 6 கி.மீ, 6 கி.மீ. வேகத்தில் தெற்கு திசையில் இருந்து வீசும். வெப்பநிலையை பொறுத்த வரையில் அதிகபட்சமாக 98.6 டிகிரியாகவும், குறைந்தபட்சமாக முதல் 73.4 டிகிரியாகவும், இருக்கும். காற்றின் ஈரப்பதம் அதிகபட்சமாக முறையே 76, 80 சதவீதமாகவும், குறைந்தபட்சமாக 32, 30 சதவீதமாகவும் இருக்கும்.

சிறப்பு வானிலை

அடுத்த 2 நாட்களுக்கான சிறப்பு வானிலையில் வானம் பகலில் லேசான மேகமூட்டத்துடன் காணப்படும். மாலையில் ஓரிரு இடங்களில் கோடை மழைக்கான வாய்ப்பு காணப்படும். அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை

அளவுகள் குறைந்து முறையே 98.6 டிகிரி மற்றும் 73.4 டிகிரி என்ற அளவில் இருக்கும். காற்றின் வேகம் மணிக்கு 5 - 6 கி.மீ. என்ற அளவில் பெரும்பாலும் தெற்கில் இருந்து வீசும். காற்றின் ஈரப்பதம் 30 - 80 சதவீதமாக இருக்கும். கோடை காலத்தின் இறுதிக் கட்டத்தில் இருப்பதாலும், மேகமூட்டம் காணப்படும் வாய்ப்பு உள்ளதாலும் வெப்ப அளவுகள் சற்றே குறைந்து இதுவரை கோழிகளில் நிலவி வந்த வெப்ப அயற்சி மற்றும் அதனை தொடர்ந்த உற்பத்தி தொடர்பான பிரச்சினைகளும் குறையத் தொடங்கும். ஆயினும் தென்மேற்கு பருவ மழைக்காலம் தொடங்கும் வரை கோடைக்கான அனைத்து மேலாண்மைகளையும் தொடரவேண்டும் என்று பண்ணையாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

விவசாயிகளுக்கு...

தற்போது பெய்துள்ள மழையில் தென்னை நடவு மேற்கொள்ளும் விவசாயிகள் 3-க்கு 3-க்கு 3 ஆழ அளவுள்ள குழி எடுத்து குழியில் மாட்டு எரு அல்லது ஆட்டு எருவுடன் 0/5 கிலோ வேப்பம் புண்ணாக்கு கலந்து குழியில் இட்டு தண்ணீர் விட்டு 3-5 நாட்கள் கழித்து தென்னை நடவு மேற்கொள்ளலாம். தென்னை நடும்போது மற்ற ரசாயன உரங்கள் எதவும் அளிக்க வேண்டாம். நடவு செய்து முதல் மட்டை வெளிவரும் சமயத்தில் யூரியா 300 கிராம், சூப்பர் பாஸ்பேட் 500 கிராம், பொட்டாஷ் 500 கிராம் மற்றும் எரு 10 கிலோ இட்டு தண்ணீர் விடவும். இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

## <u>தொடரும் கோடை மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி</u>



கிருஷ்ணகிரி நகரில் பெய்த மழையால் தேசிய நெடுஞ்சாலை ஓரம் மழைநீர் குளம் போல் தேங்கி கிடக்கும் காட்சி.

**கிருஷ்ணகிரி,**

கிருஷ்ணகிரி மாவட்டம் முழுவதும் தொடர்ந்து பெய்து வரும் கோடை மழையால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். நேற்று முன்தினம் இரவு அதிகபட்சமாக தேன்கனிக்கோட்டையில் 54 மி.மீட்டர் மழை பெய்தது.

கோடை மழை

பொதுமக்களை வாட்டி வதைத்த கத்திரி வெயில் எனப்படும் அக்னி நட்சத்திரம் நேற்றுடன் முடிவடைந்தது. அக்னி நட்சத்திரம் நடந்த கடைசி வாரத்தில் வெப்பச் சலனம் காரணமாக தமிழகம் முழுவதும் நல்ல மழை பெய்தது.

கிருஷ்ணகிரி மாவட்டத்திலும் கோடை மழை வெளுத்து வாங்கியது. மாம்பழ சீசனில் கோடை மழை பெய்யாத காரணத்தால் மா விவசாயிகள் கடும் விரக்தியில் இருந்தனர். இந்த நிலையில் கோடை காலத்தின் இறுதிப் பகுதியில் பெய்த கனமழை மா விவசாயிகளை கொஞ்சம் காப்பாற்றி உள்ளது.

தற்போது கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மாங்காய் அறுவடை சூடுபிடிக்க தொடங்கி உள்ளது.

தொடர் மழை

இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு கிருஷ்ணகிரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நல்ல மழை பெய்தது.

அதிகபட்சமாக நேற்று காலை 8 மணி நிலவரப்படி தேன்கனிக்கோட்டையில் 54 மி.மீட்டர் மழை பதிவானது. மாவட்டத்தின் இதர பகுதிகளில் பெய்த மழையளவு விவரம் பின்வருமாறு:- (மி.மீட்டரில்)

நெடுங்கல் - 48.40, கிருஷ்ணகிரி - 34.60, தளி -23, சூளகிரி - 19.40, பெனுகொண்டாபுரம் - 18.33, போச்சம்பள்ளி - 16.40, ஊத்தங்கரை - 14, ஓசூர் - 11.40, ராயக்கோட்டை - 8.30, பாரூர் - 2.60, அஞ்செட்டி - 2

**பூதப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ரூ.20½ லட்சத்துக்கு விவசாய விளைபொருட்கள் ஏலம்**

**அம்மாபேட்டை,**

பூதப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ரூ.20½ லட்சத்துக்கு விவசாய விளைபொருட்கள் ஏலம் போனது.

கொப்பரை தேங்காய்

அம்மாபேட்டை அருகே உள்ள பூதப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் விவசாய விளைபொருட்கள் ஏலம் நடைபெற்றது. இந்த ஏலத்துக்கு அம்மாபேட்டை மற்றும் சுற்றுப்புற பகுதி விவசாயிகள் விவசாய விளைபொருட்களை கொண்டு வந்திருந்தனர். மொத்தம் 11 ஆயிரத்து 39 தேங்காய்கள் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டு இருந்தன. இதில் சிறிய தேங்காய் ஒன்று 4 ரூபாய் 90 காசுக்கும், பெரிய தேங்காய் 13 ரூபாய், 65 காசுக்கும் ஆக மொத்தம் 94 ஆயிரத்து 519 ரூபாய்க்கு விற்பனையானது. கொப்பரை தேங்காய் 80 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தன. இது குவிண்டால் குறைந்தபட்ச விலையாக 8 ஆயிரத்து 709 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 10 ஆயிரத்து 15 ரூபாய்க்கும் ஆக மொத்தம் 1 லட்சத்து 72 ஆயிரத்து 448 ரூபாய்க்கு ஏலம் போனது.

மக்காச்சோளம்

வெள்ளை எள் 126 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தன. இது குவிண்டால் குறைந்தபட்ச விலையாக 8 ஆயிரத்து 96 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 9 ஆயிரத்து 417 ரூபாய்க்கும் ஆக மொத்தம் 7 லட்சத்து 27 ஆயிரத்து 746 ரூபாய்க்கு விற்கப்பட்டது.

மக்காச்சோளம் 34 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தன. இது குவிண்டால் குறைந்தபட்ச விலையாக 1,304 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 1,329 ரூபாய்க்கும் ஆக மொத்தம் 42 ஆயிரத்து 57 ரூபாய்க்கு ஏலம் விடப்பட்டது.

நிலக்கடலை

நிலக்கடலை மொத்தம் 733 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தன. இதில் முதல் தரம் குவிண்டால் குறைந்தபட்ச விலையாக 4 ஆயிரத்து 400 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 4 ஆயிரத்து 900 ரூபாய்க்கும், 2-ம் தரம் குறைந்தபட்ச விலையாக 3 ஆயிரத்து 300 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 4 ஆயிரம் ரூபாய்க்கும் ஆக மொத்தம் 8 லட்சத்து 96 ஆயிரத்து 53 ரூபாய்க்கு விற்பனையானது.

நெல் 126 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தன. இதில் பொன்னி ரகம் நெல் குவிண்டால் குறைந்தபட்ச விலையாக 1,784 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 1,969 ரூபாய்க்கும், ஏ.டி.டி.39 ரகம் நெல் குவிண்டால் குறைந்தபட்ச விலையாக 1,300 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 1,423 ரூபாய்க்கும் ஆக மொத்தம் 1 லட்சத்து 33 ஆயிரத்து 524 ரூபாய்க்கு விற்கப்பட்டது. விவசாய விளைபொருட்கள் மொத்தம் 20 லட்சத்து 46 ஆயிரத்து 487 ரூபாய்க்கு ஏலம் போனது.

**ஈரோடு மாவட்டத்தில் இடி–மின்னலுடன் பலத்த மழை**

**ஈரோடு,**

ஈரோடு மாவட்டத்தில் இடி –மின்னலுடன் பலத்த மழை பெய்தது.

பவானி

ஈரோடு மாவட்டத்தில் நேற்று காலை வெயில் அதிகமாக இருந்தது. இந்தநிலையில் மதியம் வானம் கமூட்டத்துடன் காணப்பட்டது. மாலை 4 மணிக்கு வானில் கரு கங்கள் திரண்டபடி வந்தன. பவானி மற்றும் சுற்றுப்புற பகுதியில் நேற்று மாலை 4.10 மணிக்கு இடி–மின்னலுடன் மழை பெய்யத்தொடங்கியது. மாலை 5.30 மணி வரை பலத்த மழை பெய்தது. அப்போது பலத்த சூறாவளி காற்றும் வீசியது. இதில் பவானி பகுதியில் வைக்கப்பட்டு இருந்த விளம்பர தட்டிகள் சாய்ந்து கீழே விழுந்தன. லும் மழைநீர் வீதிகளில் பெருக்கெடுத்து ஓடியது. இந்த மழையால் வெப்பம் தணிந்து மாலையில் குளிர்ந்த காற்று வீசியது.

கொடுமுடியில் நேற்று 4.40 மணி முதல் 5 மணி வரை இடி–மின்னலுடன் மழை பெய்தது.

<u>பெருந்துறை</u>

பெருந்துறை பகுதியில் நேற்று மாலை 3.45 மணிக்கு மழை பெய்ய தொடங்கியது. இந்த மழை 5.45 மணி வரை நீடித்தது. பின்னர் தொடர்ந்து 2 மணிநேரம் மழை தூறிக்கொண்டே இருந்தது. அந்தியூரை அடுத்த பர்கூர், தட்டகரை, ஊசிமலை ஆகிய மலைப்பகுதியில் மதியம் 2 மணி முதல் மாலை 3.30 மணி வரை இடியுடன் கூடிய மழை பெய்தது. இந்த மழையால் பர்கூர் மலைப்பகுதியில் உள்ள வனக்குட்டைகள் நிரம்பி உள்ளன. கடந்த வாரம் பெய்த மழையால் வனப்பகுதியில் உள்ள மரங்கள் நன்கு துளிர்த்து பச்சைபசேல் என காணப்படுகிறது. பலத்த மழையால் மணியாச்சி ஓடையில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

<u>கவுந்தப்பாடி</u>

சிவகிரி, வேட்டுவப்பாளையம், சின்னியம்பாளையம் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் நேற்று மாலை 4.20 மணி முதல் 5.30 மணி வரை இடி –மின்னலுடன் பலத்த மழை பெய்தது. கவுந்தப்பாடி அருகே உள்ள காஞ்சிக்கோவில், சலங்கபாளையம், பெரியபுலியூர், சின்னபுலியூர் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் நேற்று மாலை 4.15 மணி முதல் 5.15 மணி வரை சுமார் 1 மணி நேரம் பலத்த சூறாவளிக்காற்றுடன் மழை பெய்தது.

இந்த சூறாவளிக்காற்றினால் பெரியபுலியூர் ஊராட்சி பூலப்பாளையத்தில் புளிய மரம் ஒன்று வேரோடு சாய்ந்தது. இதனால் பவானி –கோபி மெயின் ரோட்டில் சிறிது நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. பின்னர் நெடுஞ்சாலைத்துறை பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் ரோட்டில் விழுந்து கிடந்த புளிய மரத்தை வெட்டி அகற்றினர். இதனைத்தொடர்ந்து போக்குவரத்து சீரானது. இதேபோல் தயிர்பாளையம் பகுதியில் வீசிய சூறாவளிக்காற்றில் ஈரோடு மெயின் ரோடு பகுதிகளிலும் மரக்கிளைகள் முறிந்து விழுந்தன. ஈரோடு மாவட்டத்தில் நேற்று பெரும்பாலான இடங்களில் இடி–மின்னலுடன் பலத்த மழை பெய்தது.

**<u>தஞ்சையில் இடி, மின்னலுடன் பலத்த மழை</u>**



**தஞ்சாவூர்**,

அக்னி நட்சத்திரம் நிறைவுநாளில் தஞ்சையில் இடி, மின்னலுடன் பலத்த மழை பெய்தது.

<u>கோடை வெயில்</u>

கோடை காலம் தொடங்கியது முதல் தஞ்சையில் வெயில் கொளுத்தியது. வெயிலின் தாக்கம் அதிகமாக இருப்பதால் பகல் நேரங்களில் வீட்டை விட்டு வெளியே வருவதற்கே பொதுமக்கள் அச்சப்பட்டனர். அப்படியே வெளியே வந்தாலும் குடையை பிடித்து கொண்டும், சிலர் சாலையில் நடக்கும்போது துணியால் தலையை மூடிக் கொண்டும் சென்றனர். மின்விசிறிக்கு கீழே அமர்ந்திருந்தாலும் வெப்பகாற்று தான் வீசியது.

பகலில் தான் வெயிலின் கொடுமை இருக்கிறது என்றால் இரவிலும் வெப்பத்தின் தாக்கம் அதிக அளவு இருந்தது. வெயிலின் தாக்கத்தினால் இளநீர், தர்ப்பூசணி, நுங்கு விற்பனை அமோகமாக நடைபெற்றது.

இதைவிட அதிகமாக கோடை வெயிலின் உச்சகட்டமான கத்திரி வெயில் எனப்படும் அக்னிநட்சத்திரம் தொடங்கியவுடன் வெயில் கொளுத்தும் என்று மக்கள் அச்சத்தில் இருந்து வந்தனர். ஆனால் அக்னி நட்சத்திரம் தொடங்குவதற்கு முதல் நாள் தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களில் பரவலாக மழை பெய்தது.

<u>அக்னி நட்சத்திரம் நிறைவுநாளில் பலத்த மழை</u>

அக்னி நட்சத்திரம் தொடங்கிய கடந்த 4-ந்தேதி தஞ்சையில் மழைமேகம் திரண்டு வந்தது. இதனால் மழை பெய்யும் என பொதுமக்கள் எதிர்பார்ப்புடன் இருந்தனர். ஆனால் லேசாக மழைதூறி நின்றதுடன் மழைமேகமும் கலைந்து சென்றுவிட்டது. இடையில் அக்னிநட்சத்திர காலத்தில் தஞ்சையில் அதிகபட்சமாக 105 டிகிரி வரை வெயில் கொளுத்தியது.

தொடர்ந்து 100 டிகிரிக்கு மிகாமல் வெயில் கொளுத்தியது. இந்தநிலையில் அக்னி நட்சத்திரம் நேற்றுடன் முடிவடைந்தது.

தஞ்சையில் நேற்றுகாலை வழக்கம்போல் வெயில் கொளுத்தியது. நேரம் ஆக, ஆக வெயிலின் தாக்கம் அதிகரித்தது. இதனால் நிழலில் அமர்ந்து இருந்தாலும் வியர்வை குளியல் குளிக்க வேண்டிய நிலை இருந்தது.

ஆனால் பிற்பகலுக்கு பின்பு நிலைமை தலைகீழாக மாறியது. பிற்பகல் 2 மணி அளவில் திடீரென மழைமேகம் திரண்டது. இதனால் மழை கண்டிப்பாக பெய்யும் என மக்கள் எதிர்பார்த்தனர். மக்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் வகையில் 2.30 மணி அளவில் லேசாக மழை பெய்யத் தொடங்கியது.

சிறிது நேரத்தில் பலத்த மழையாக மாறியது. இடி, மின்னலுடன் பெய்த இந்த மழையினால் தெருக்களில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. ரெயில்வே கீழ்பாலத்தில் வழக்கம்போல் தண்ணீர் தேங்கி நின்றது.

இடி, மின்னலுடன் பெய்த பலத்த மழை 3 மணி வரை நீடித்தது. பின்பு ½ மணி நேரத்திற்கு மழை தூறிக் கொண்டே இருந்தது. 3½ மணி அளவில் மழை நின்றது. இந்த மழையினால் பூமி குளிர்ந்து குளிர்ந்த காற்று வீசியது. அக்னிநட்சத்திரம் நிறைவு நாளில் மழை பெய்ததால் மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

குறுவை சாகுபடிக்கு தேவையான அளவு மழை தொடர்ந்து பெய்ய வேண்டும் என்று விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

**<u>கறவைபசுக்களுக்கு மருத்துவ பரிசோதனை முகாம் நாளை நடக்கிறது</u>**

**நாகப்பட்டினம்,**

கறவைபசுக்களுக்கு மருத்துவ பரிசோதனை முகாம் நாளை நடக்கிறது.

விலையில்லா கறவைபசுக்கள்

நாகை மாவட்ட கலெக்டர் முனுசாமி ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில் அவர் கூறியிருப்பதாவது:-

தமிழக முதல்-அமைச்சரால் கடந்த 2011-ம் ஆண்டு தொடங்கப்பட்ட விலையில்லா கறவைபசுக்கள் மற்றும் வெள்ளாடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ், தமிழகத்தில் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள பெண்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றும் வகையில் கடந்த 2011 முதல் 2014 வரை ஒரு பயனாளிக்கு 4 வெள்ளாடுகள் வீதம் 31 மாவட்டங்களில் 4 லட்சம் பயனாளிகளுக்கு 16 லட்சம் வெள்ளாடுகளும், தமிழகத்தில் மீண்டும் ஒரு வெண்மை புரட்சியை உருவாக்கும் வகையில் 21 மாவட்டங்களில் 36 ஆயிரம் பயனாளிகளுக்கு 36 ஆயிரம் கறவைபசுக்களும் வழங்கப்பட்டுள்ளது. இதில் நாகை மாவட்டத்தில் 2011-12-ம் ஆண்டில் 650 பயனாளிகளுக்கு 650 கறவைபசுக்களும், 2012-13-ம் ஆண்டில் 650 பயனாளிகளுக்கு 650 கறவைபசுக்களும், 2013-14-ம் ஆண்டில் 650 பயனாளிகளுக்கு 650 கறவை பசுக்களும் வழங்கப்பட்டுள்ளன.

சிறப்பு பரிசுகள்

அதேபோல் 2011-12-ல் 3 ஆயிரத்து 161 பயனாளிகளுக்கு 12 ஆயிரத்து 644 வெள்ளாடுகளும், 2012-13-ல் 5 ஆயிரத்து 396 பயனாளிகளுக்கு 21 ஆயிரத்து 584 வெள்ளாடுகளும், 2013-14-ல் 5 ஆயிரத்து 133 பயனாளிகளுக்கு 20 ஆயிரத்து 532 வெள்ளாடுகளும் வழங்கப்பட்டுள்ளன. இதைதொடர்ந்து தமிழக முதல்- அமைச்சர் விலையில்லா கறவைபசுக்கள் மற்றும் வெள்ளாடுகள் வழங்கும் திட்டங்கள் மூலம் பயன்பெறும் பயனாளிகள் தங்கள் கால்நடைகளை கொள்முதல் செய்த பிறகு நன்கு பராமரிக்க வேண்டுமென வலியுறுத்தி உள்ளார். பயனாளிகளை ஊக்கப்படுத்தும் வகையில் கடந்த 2011-12 மற்றும் 2012-13 ஆகிய ஆண்டுகளில்

கால்நடைகளை சிறப்பாக பராமரித்த பயனாளிகளுக்கு தமிழ் புத்தாண்டு தினத்தில் சிறப்பு பரிசுகளும் வழங்கப்பட்டுள்ளன.

மருத்துவ பரிசோதனை

விலையில்லா கறவைபசுக்கள் மற்றும் வெள்ளாடுகள் வழங்கும் திட்டங்கள் மூலம் வழங்கப்பட்ட கறவைபசுக்களின் பால் உற்பத்தி திறனை பெருக்கவும், வெள்ளாடுகளின் எடையினை அதிகரிக்கவும் தமிழகம் முழுவதும் நாளை (வெள்ளிக்கிழமை) மற்றும் நாளை மறுநாள் (சனிக்கிழமை) ஆகிய 2 நாட்களில் கறவைபசுக்களுக்கு இனப்பெருக்க மருத்துவபரிசோதனையும், வெள்ளாடுகளுக்கு குடற்புழு நீக்க முகாமும் நடைபெற உள்ளது. அதன்படி நாகையில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் இந்த முகாம் நடைபெற உள்ளது. எனவே விலையில்லா கறவைபசுக்கள், வெள்ளாடுகள் வழங்கும் திட்டங்களின் கீழ் பயன்பெற்ற பயனாளிகள் மட்டும் அல்லாமல் அனைத்து விவசாயிகளும் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்தி தங்களது கால்நடைகளுக்கு மருத்துவ பரிசோதனை செய்து கொள்ளலாம். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**<u>விவசாயிகளுக்கு அதிக அளவில் கடன் வழங்க வேண்டும் வங்கி அதிகாரிகளுக்கு, கலெக்டர் வெங்கடாசலம் உத்தரவு</u>**



திண்டுக்கல் கலெக்டர் அலுவலகத்தில் வங்கியாளர்கள் கூட்டம் கலெக்டர் வெங்கடாசலம் தலைமையில் நடந்த போது எடுத்த படம்

**திண்டுக்கல்,**

நடப்பு ஆண்டில், விவசாயிகளுக்கு அதிக அளவில் கடன்களை வழங்க வேண்டும் என்று திண்டுக்கல்லில் நடந்த வங்கியாளர் கூட்டத்தில் வங்கி அதிகாரிகளுக்கு கலெக்டர் வெங்கடாசலம் உத்தரவிட்டார்.

<u>வங்கியாளர்கள் கூட்டம்</u>

திண்டுக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் வங்கியாளர்கள் கூட்டம் நேற்று நடந்தது. கூட்டத்திற்கு கலெக்டர் வெங்கடாசலம் தலைமை தாங்கி பேசினார். அவர் பேசும்போது கூறியதாவது:-

கடந்த ஆண்டு வழங்கப்பட்ட விவசாயக்கடன், கல்விக்கடன், சிறுதொழில்கடன், தனிநபர் கடன் உள்ளிட்ட முன்னுரிமை கடன்கள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. 2013-14-ம் நிதியாண்டில் மாவட்ட அளவில் கடன்களை வழங்கி, வங்கிகள் 123 சதவீதம் பெற்று சாதனை அடைந்துள்ளது. இது, 2012-13-ம் நிதியாண்டை விட 21 சதவீதம் அதிகமாகும்.

மாவட்டத்தில் போதிய மழைப்பொழிவு இல்லை. இதனால் விவசாயம் சார்ந்த தொழில் கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. எனவே விவசாயம் சார்ந்த தொழில் களை மேற்கொள்ள விவசாயிகளுக்கு அதிக அளவில் கடன்களை வழங்க வங்கியாளர்கள் முன்வர வேண்டும். மேலும், கிராமப்பகுதி மக்களும் பயன்பெறும் வகையில் வங்கிகள் ஏ.டி.எம். மையங் களை அமைக்க வேண்டும்.

<u>அதிக கடன்</u>

அதன்படி, 3 கிராமங்களுக்கு ஒரு ஏ.டி.எம். மையங்களை ஏற்படுத்த முன்வர வேண்டும். அரசால் செயல்படுத்தப்படும் தொழில்கடன் சார்ந்த திட்டங்கள் மற்றும் மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு வழங்கப்படும் கடனுதவி திட்டங்கள் குறித்து ஆய்வு செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டை போலவே, இந்த ஆண்டும் அதிக அளவிலான கடன்களை பயனாளிகளுக்கு வங்கியாளர்கள் வழங்க வேண்டும்.

இவ்வாறு கலெக்டர் வெங்கடாசலம் பேசினார்.

கூட்டத்தில் நபார்டு வங்கி உதவிபொதுமேலாளர் சஞ்சீவி, முன்னோடி வங்கி மேலாளர் ஜான் நெல்சன், கனரா வங்கியின் சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவன இயக்குனர் அர்ஜுன்முத்தையா, பாரத ஸ்டேட் வங்கியின் முதன்மை மேலாளர் சக்திவேல் மற்றும் அனைத்து வங்கிகளின் மாவட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

**<u>மாயனூர் காவிரி கதவணைக்கு 'அம்மா கட்டளை கதவணை' என பெயரிட வேண்டும் விவசாயிகள் கோரிக்கை</u>**

**கிருஷ்ணராயபுரம்,**

மாயனூர் காவிரி கதவணைக்கு 'அம்மா கட்டளை கதவணை' என்று பெயரிட வேண்டும் என காவிரி நீர்ப்பாசன விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்து உள்ளது.

இதுகுறித்து காவிரி நீர்ப்பாசன விவசாயிகள் சங்க செயல் தலைவர் மகாதான புரம் ராஜாராம், செயலாளர் காந்திப்பித்தன், துணை செயலாளர் கோபாலதேசிகன், கவுண்டம்பட்டி சுப்பிரமணி ஆகியோர் கூட்டாக சேர்ந்து விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

<u>கட்டளை கதவணை</u>

காமராஜர் காலத்திற்கு பிறகு சுமார் 55 ஆண்டுகளுக்கு பிறகு மாயனூரில் காவிரியில் கட்டளை கதவணை கட்டப் பட்டு தமிழக முதல்-அமைச்சர் ஜெயலலிதாவால் விரைவில் திறக்கப்பட உள்ளது. 1,233 மீட்டர் அகலமுள்ள இந்த கதவணையில் சாதாரண நாட்களில் 1.04 டி.எம்.சி. தண்ணீர், வெள்ள காலங்களில் 5.40 டி.எம்.சி. தண்ணீர் சீர்ப்படுத்த முடியும். இந்த கதவணை மூலம் கரூர், திருச்சி, தஞ்சை, புதுக் கோட்டை மாவட்டங்களில் 1.12 லட்சம் ஏக்கர் விவசாய நிலங்களுக்கும், குடிநீருக்கும் திட்டங்கள் செயல்படுத்த முடியும்.

<u>65 ஆயிரம் ஏக்கர்</u>

இந்த கட்டளை கதவணை மூலம் நேரடியாக கிருஷ்ண ராயபுரம் வாய்க்கால் மூலம் 1,200 ஏக்கரும், தென்கரை வாய்க்கால் மூலம் 7 ஆயிரம் ஏக்கரும், கட்டளை மேட்டு வாய்க்கால் மூலம் 20,552 ஏக்கரும், உய்யக் குண்டான் வாய்க்கால் மூலம் 23 ஆயிரத்து 742 ஏக்கரும், புது ஐயன் வாய்க்கால் மூலம் 1,790 ஏக்கரும், வடகரை வாய்க்கால் மூலம் 10,400 ஏக்கரும் ஆக மொத்தம் 65ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்படும் வாழை, கரும்பு, தென்னை, கொடிக்கால், எண்ணைப்பனை, மஞ்சள் ஆகிய பயிர்களுக்கு ஆண்டு முழுவதும் நீர் கிடைக்கும்.

அம்மா கட்டளை கதவணை

மாநில நதிகள் இணைப்புத் திட்டத்தின் முதல்படியாக கட்டப்பட்டுள்ள இந்த கதவணை இரு பஸ்கள் சென்று வரும் அகலமாக பாலத்துடன் இணைக்கப்பட் டிருப்பது, கரூர் மாவட்ட விளை பொருட்கள், சரக்குகள் மற்றும் திருச்சி, நாமக்கல், சேலம், பெங்களூர், சென்னை என்று அனைத்து இடங்களுக் கும் குறுகிய காலத்தில் வசதி யாக சென்று வர அமைக்கப்பட் டிருப்பது வரவேற்றத்தக்கது. இந்த கதவணைக்கு 'அம்மா கட்டளை கதவணை' என்று பெயரிட்டு சரித்திர முக்கியத் துவம் வாய்ந்ததாக செய்ய வேண்டும். இவ்வாறு கூறி உள்ளனர்.

**எள் சாகுபடிக்கான தொழில் நுட்பங்கள்**



எள் பயிரானது எண்ணெய் வித்துக்களின் இளவரசி என அழைக்கப்படுகிறது. எள் பயிருக்கு குறைந்த அளவே தண்ணீர் தேவைப்படுவதால் விவசாயிகள் தற்போது பெய்துள்ள மழையை கொண்டு எள் சாகுபடி செய்து பயனடையலாம்.

ரக தேர்வு

தமிழகத்தின் தென்மாவட்டங்களில் பயிரிட இறவை பயிருக்கு ஏற்ற ரகங்களாக டிஎம்வி3, டிஎம்வி4, டிஎம்வி6, கோ1, விஆர்ஐ(எஸ்வி1), எஸ்விபிஆர்1, விஆர்ஐ (எஸ்வி2) போன்றவை உள்ளன. இவை சித்திரை மற்றும் மார்கழி பட்டத்தில் பயிரிட ஏற்றவை.

ஆனி மற்றும் ஆடிப்பட்டத்தில் மானாவரிக்கு ஏற்ற ரகங்களாக கோ1, டிஎம்வி3, டிஎம்வி7 ஆகிய ரகங்களும், புரட்டாசி மற்றும் கார்த்திகை பட்டத்தில் மானாவாரிக்கு ஏற்ற ரகங்களாக கோ1, டிஎம்வி3, டிஎம்வி5, டிஎம்வி7, எஸ்விபிஆர்1, விஆர்ஐ (எஸ்வி2) போன்றவையும் சிறந்த ரகங்களாக உள்ளன.

<u>நிலம் தயாரிப்பு</u>

'எள்ளுக்கு ஏழு உழவு' என்பது பழமொழி. எள் விதைகள் மிகவும் சிறியதாக உள்ளதால் நல்ல முளைப்பு திறனும், செடிகள் சீரான வளர்ச்சியும் பெற நிலத்தை நன்கு உழுது மண் மிருதுவாகவும், பொலபொலப்பாகவும் உள்ளவாறு பார்த்து கொள்ள வேண்டும். எக்டருக்கு 12.5 டன் தொழு உரம் இட வேண்டும். இறவை எள் சாகுபடிக்கு கிடைக்கும் நீர் மற்றும் நிலத்தின் சரிவை பொறுத்து 10 சதுரமீட்டர் அல்லது 20 சதுரமீட்டர் படுக்கை தயாரிக்க வேண்டும். நீர் தேங்குவதை தடுக்க சமன்படுத்த வேண்டும்.

<u>விதையும் விதைப்பும்</u>

எக்டருக்கு 5 கிலோ அளவு விதை தேவைப்படும். 1 கிலோ விதைக்கு 4 கிராம் டிரைக்கோடெர்மா விரிடி கொண்டு விதை நேர்த்தி செய்து உடன் விதைக்கவும். அல்லது 1 கிலோ விதைக்கு 4 கிராம் திரம் அல்லது 2 கிராம் கார்பன்டைசிம் கொண்டு விதை நேர்த்தி செய்யவும். ரசாயன பூஞ்சாண கொல்லி பயன்படுத்தினால் 24 மணி நேரம் வைத்திருந்து விதைக்கவும்.

விதைகளை வரிசையில் விதைக்க வேண்டும். விதையின் அளவில் நான்கு மடங்கு மணலுடன் கலந்து விதை 3 செ.மீ ஆழத்திற்கு அதிகமாக செல்லாமல் விதைக்க வேண்டும். வரிசைக்கு வரிசை 30 செ.மீ இடைவெளியும், செடிக்கு செடி 30 செ.மீ இடைவெளியும் கொடுக்க வேண்டும்.

எள் விதையை பரவலாக தூவும் போதும், வரிசை விதைப்பு செய்யும் போதும் அடர்த்தியாக முளைத்து வரும். எனவே எள் செடியை தக்க தருணத்தில் கலைத்து விடுதல் அவசியம். எள் விதைத்த 15 வது நாள் செடிக்கு செடி 15 செ.மீ இடைவெளி இருக்கும்படியும், 30ம் நாள் செடிக்கு செடி 30 செ.மீ இடைவெளியும் இருக்குமாறு கலைத்து விட வேண்டும். இவ்வாறு செடியை கலைத்து விடும் போது

வயலில் போதிய அளவு ஈரம் இருக்க வேண்டும். கடைசியில் ஒரு சதுர மீட்டருக்கு 11 செடிகள் இருக்குமாறு பார்த்து கொள்ள வேண்டும். எள் விதைப்பு செய்த 15 மற்றும் 30 ம் நாள் களை எடுக்க வேண்டும்.

உரம் மற்றும் நீர் நிர்வாகம்

மண் பரிசோதனைப்படி உரமிடுதல் சிறந்தது. எள் பயிருக்கு அளவுக்கு அதிகமாக தண்ணீர் பாய்ச்சினால் செடிகள் அதிகம் வளர்ந்து விரைவிலேயே சாய்ந்து விடும். விதைத்த பின்பு நீர் பாய்ச்ச வேண்டும். 7 ம் நாள் உயிர் தண்ணீரும், 25ம் நாளும், பூக்கும் பருவத்தில் ஒரு முறையும், காய் பிடிக்கும் பருவத்தில் ஒன்று அல்லது இரண்டு முறையும் மொத்தம் 5 முதல் 6 முறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும். இறவை பயிரில் விதைத்த 65 நாளுக்கு பின் தண்ணீர் பாய்ச்ச கூடாது.

இலைவழி ஊட்டம்

எள் பயிரில் பூக்கள் உதிர்வதை தடுத்து காய்கள் பிடிக்கும் திறனை அதிகரிக்க பிளானோபிக்ஸ் (என்ஏஏ) என்ற பயிர் ஊக்கியை 30 பிபிஎம் என்ற அளவில் ஏக்கருக்கு 135 மிலி பிளானேபிக்ஸ் மருந்தை 200 லிட்டர் சுத்தமான தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான் கொண்டு விதைத்த 30, 45 மற்றும் 60 வது நாளில் வயலில் தெளிக்க வேண்டும். தெளிக்கும் போது வயலில் ஈரம் இருக்குமாறு பார்த்து கொள்ள வேண்டும். குருத்து இலை பிணைக்கும் புழுக்களின் தாக்குதலை கட்டுப்படுத்த ஊடுபயிராக சிறுதானியங்கள், நிலக்கடலை ஆகியவற்றை பயிரிடலாம். மாலத்தியான் அல்லது பாஸலோன் தூள் மருந்து எக்டருக்கு 25 கிலோ வீதம் தூவி கட்டுப்படுத்தலாம்.

அறுவடை

செடிகளின் தண்டுகள் மஞ்சள் நிறமாதல், செடியின் கீழ்த்தண்டில் உள்ள இலைகள் விழும் நிலையில் இருத்தல், செடியின் அடியிலிருந்து 10 வது காயை பறித்து உடைத்து பார்த்தால் விதைகள் முதிர்ச்சியடைந்திருத்தல் ஆகிய அறிகுறிகளை கொண்டு அவடை பருவத்தை தெரிந்து கொள்ளலாம். எள் செடிகளை அறுவடை செய்து நுனிப்பகுதி உட்பக்கமாகவும், வேர்ப்பகுதி வெளிப்பக்கமாகவும்

உள்ளவாறு வட்ட வடிவில் செடிகளை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி காய விடவும். பின்பு விதைகளை சேகரித்து காய வைக்கவும்.

கி.ராஜேந்திரன், வேளாண்மை துணை இயக்குநர், நீர் மேலாண்மை பயிற்சி நிலையம், விநாயகபுரம்.

## கறவை பசுக்களுக்கு இனப்பெருக்க மருத்துவ பரிசோதனை முகாம்

**சிவகங்கை,**

கறவை பசுக்களுக்கு வரு கிற 30,31-ந்தேதிகளில் இனப் பெருக்க மருத்துவ பரிசோதனை முகாம் நடத்தப்பட உள் ளது என்று கலெக்டர் ராஜாராமன் தெரிவித் துள்ளார்.

விலையில்லா மாடு

சிவகங்கை மாவட்ட கலெக் டர் ராஜாராமன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதா வது:-

தமிழகத்தில் வறுமை கோட் டுக்கு கீழே வாழும் பெண் களின் வாழ்வாதாரத்தை முன் னேற்றுவதற்காக விலையில் லாத ஆடுகள் மற்றும் கறவை மாடுகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த திட்டத்தின் கீழ் கடந்த 2011-12 ஆண்டில் 605 பேருக்கும், 2012-13, 2013-14 ஆண்டுகளில் தலா 650 பேருக்கும் விலையில்லாத கறவை மாடுகள் வழங்கப்பட் டுள்ளது.

இதே போல் 2011- 12ம் ஆண்டில் 2,217 பேருக்கும், 2012-13ம் ஆண்டில் 3,658 பேருக்கும், 2013-14ம் ஆண்டில் 3,501 பேருக்கும் விலையில்லாத ஆடு வழங்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தில் பயன்பெறும் பயனாளிகள் தங்களது கால் நடைகளை சிறப்பாக பரா மரிப்பவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன.

சிறப்பு முகாம்

இந்த திட்டத்தின் கீழ் கறவை மாடு மற்றும் ஆடு பெற்றவர்களுக்கு உதவிடும் வகையில் தமிழகம் முழுவதும் வருகிற 30,31-ந்தேதிகளில் கறவை பசுக்களுக்கு இனப் பெருக்க மருத்துவ பரிசோத னையும், ஆடுகளுக்கு குடற் புழு நீக்க முகாமும் நடைபெற உள்ளது. இதில் அரசின் திட்டத்தில் பயன் அடைந்த பயனாளிகளுடன் அனைத்து விவசாயிகளும் கலந்து கொண்டு தங்களது கால் நடைகளுக்குசிகிச்சை செய்து கொள்ளலாம். எனவே சிவ கங்கை மாவட்ட விவ சாயிகள் இந்தவாய்ப்பினை பயன் படுத்தி கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் அதில் கூறி யுள்ளார்.

**<u>ரூ.19,500 கோடிக்கு கடல் மீன்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி</u>**



மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிலையத்தில் இயக்குனர் டாக்டர் கோபால கிருஷ்ணன் பார்வையிட்டபோது எடுத்தபடம். உடன் விஞ்ஞானி கோபகுமார் உள்பட பலர் உள்ளனர்.

**பனைக்குளம்,**

இந்தியா முழுவதும் கடந்த ஆண்டு மட்டும் ரூ.19,500 கோடி அளவில் கடல் மீன்கள் வெளிநாடு களுக்கு ஏற்றுமதி செய் யப்பட்டுள்ளதாக மத் திய கடல் மீன் ஆராய்ச்சி நிலைய இயக்குனர் தெரி வித்தார்.

சிறப்பு பயிற்சி

மண்டபம் மரைக்காயர்பட் டினத்தில் செயல்பட்டு வரும் மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிலையத்தில் வண்ண மீன்கள் வளர்ப்பு குறித்து சிறப்பு பயிற்சி

தொடங்கியது. 10 நாட்கள் நடைபெறும் இந்த பயிற்சியின் முதல் நாளான நேற்று கொச்சினில் உள்ள மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிலைய இயக்குனர் டாக்டர் கோபால கிருஷ்ணன் கலந்து கொண்டு பயிற்சியை தொடங்கி வைத்தார். பின்னர் அவர் ஆராய்ச்சி நிலையத் தில் ரூ.பல லட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள பவ ளப்பாறைகள் மற்றும் வண்ண மீன்கள் அருங்காட்சிய கத்தை திறந்து வைத்து பார் வையிட்டார்.

அதனை தொடர்ந்து அவர் நிருபர்களிடம் கூறியதாவது:- வண்ண மீன்கள் வளர்ப்பது குறித்த தொழில் நுட்ப வளர்ச்சி மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிலையத்தால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதற்காக பாண்டிச்சேரி, கோவா உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து வந்துள் ளவர்களுக்கு வண்ண மீன் கள் வளர்ப்பது குறித்த சிறப்பு பயிற்சிகள் மண்டபம் மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிலை யத்தில் அளிக்கப்படும்.இந்தி யாவில் வண்ண மீன்கள் வளர்ப்பு என்பது மிக குறைவா கவே உள்ளது. கடந்த ஆண்டு மட்டும் இந்தியா முழுவதும் கடல் மீன்கள் 19,500 கோடி அளவில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள் ளது. இதில் வண்ண மீன்கள் ரூ.6.5 கோடி அளவில் மட் டுமே வெளிநாடுகளுக்கு ஏற் றுமதி செய்யப்பட்டுள்ளன.

ஆர்வம்

வண்ண மீன்கள் ஏற்றுமதி மிக குறைவாக இருப்பது வருத் தமளிக்கிறது. மீனவர்கள் கட லில் வண்ண மீன்களை பிடிப் பதை தவிர்க்க வேண்டும். வண்ண மீன்கள் பவளப்பா றைகளில் தான் இனப்பெருக் கம் செய்து வாழ்ந்து வருகின் றது. இது போன்ற வண்ண மீன்களை பிடிக்கும் போது கலர் மீன்கள் கடலில் குறைவ துடன் பவளப் பாறைகளும் அழிய நேரிடும். வண்ண மீன்கள் பிடிப்பது குறித்த புதிய தொழில் நுட்ப முறை கண்டுபிடிக்கும் பட்சத்தில் கட லில் உள்ள அபூர்வ பவளப் பாறைகளும், கலர் வண்ண மீன்களின் அழிவையும் முழு மையாக தடுக்க முடியும். இந்த பயிற்சி மூலம் மேலும் அதிக ளவில் வண்ண மீன்கள் வளர்ப்பது குறித்து ஒரு ஆர் வம் ஏற்படும்.

இவ்வாறு அவர் கூறினார். நிகழ்ச்சியில் கடல் மீன் ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானி கோபக்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். முன்னதாக மண்டபம் தென்

கடல் பகுதியில் கடல் மீன் ஆராய்ச்சி நிலையம் சார்பில் மிதவை கூண்டு மூலம் மிதக்க விடப்பட்டுள்ள கூண்டில் இருந்து 50க்கும் மேற் பட்ட கோபியா மீன்கள் கூண்டில் இருந்து அறுவடை செய்யப் பட்டது. வெளியே எடுத்து வரப்பட்ட கோபியா மீன் களை மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிலைய இயக்குனர் கோபாலகிருஷ்ண்ன் பார்வை யிட்டார். அது போல் மண்ட பம் கடல் மீன் ஆராய்ச்சி நிலையத்தில் புதிதாக தொடங் கப்பட்டுள்ள பவளப் பாறை கள், வண்ண மீன்கள் அருங் காட்சியகத்தில் கிளோவுன், குரோன் ஏஞ்சல், விக்டோ ரியா ராணி மீன், நட்சத்திர மீன், களவாய் மீன், ஜெல்லி, புளூடாம்ஸ், பால் சுறா உள் ளிட்ட பல வகையான வண்ண மீன்களும், அபூர்வ பவளப் பாறைகளும் கண்ணாடி தொட்டியில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.